

# கல்வித்தாரகை

வெளியீடு:

## தேசிய கல்வி நிறுவகம்

கண்டி மத்திய நிலையம்

கல்விமாணிப் பட்டக்கற்கை நெறி

மாணவர் பேரவை 2002-2005

கண்டி தமிழ் கல்விக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவன கீதம்

ஆசான்கள் தரமுயர அரும் பணிகள் ஆற்றிடும்
அரியதோர் நிறுவனம் கண்டி மாநகரிலே
வளர்கல்வி நலனோம்பி வாண்மை விருத்திதனை
வளமாக்கும் நிறுவனம் வாழ்க வாழ்க

முந்து தமிழ் செந்தமிழில் வந்து கலை பயின்றிடும்
இந்துவோடு முஸ்லிம்கள் கிறிஸ்தவரும் இணைந்தே
கல்விமாணி எனும் கற்கை நெறியதனை
களிப்போடு கற்றிட கருத்தோடு வழிகாட்டி
(ஆசான்கள் தரமுயர)

தேசிய கல்வியின் தெளிவான கொள்கைகள்
ஆசிரியர் ஊடாக அனைவர்க்கும் பரவிட
அறிவுரைகளோடு நல் விரிவுரை ஆற்றியே
ஆளுமை வளர்த்திடும் அருங்கல்வி நிலையமிது.
(ஆசான்கள் தரமுயர)

கரையில்லாக் கல்விதனைக் கருத்துடன் வளர்ப்போம்
கரையின்றிக் குறைவின்றிக் களிப்புடன் அளிப்போம்
உயர்வான மாணவரை உருவாக்க முயல்வோம்
ஒப்பற்ற உலகுக்கு உறுதி வழி சமைப்போம்
உறுதி வழி சமைப்போம்...
உறுதி வழி சமைப்போம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வித் தாரகை"

இணை இதழாசிரியர்கள்

**ஜனாப். A.L.M. ஹனிபா**
(அதிபர்)
கு/ சீ.சீ. தமிழ் வித்தியாலயம்,
குருணாகலை.

**திரு. S. குருநாதன்**
(ஆசிரியர்)
இந்து தேசிய கல்லூரி,
புசல்லாவை.

வெளியீடு:

**தேசிய கல்வி நிறுவகம்**
**கண்டி மத்திய நிலையம்,**
**கல்விமாணிப் பட்டக்கற்கை நெறி**
**மாணவர் பேரவை 2002-2005,**
**கண்டி தமிழ் கல்விக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இன்பத் தமிழ்க் கல்வி

யாவரும் கற்றவர்

என்றுரைக்கும் நிலை

எய்தி விட்டால்

துன்பங்கள் நீங்கும்

சுகம் வரும் நெஞ்சினில்

தூய்மை உண்டாகிடும்

வீரம் வரும்'

- பாவேந்தர் பாரதிதாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிமேதகு ஜனாதிபதியின் ஆசிச் செய்தி



கல்வி என்னும் எண்ணக்கரு பற்றிய விளக்கமாவது இன்று பரவலடைந்து வருகின்றது. கல்வி என்பது ஒரு சாராருக்கு மட்டுமே உரியதொன்றாகவோ அல்லது குறித்த ஒரு பருவத்தினருக்கு மட்டுமே உரியதொன்றாகவோ வரையறுக்கப்படவில்லை. "வாழ் நாள் முழுவதும் கல்வி", " வாழ்க்கை நீடித்த கல்வி", " வாழக்கல்", ஆகிய எண்ணக்கருக்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இன்றைய உலகமயமாக்கலின் கீழ் அசுர கதியில் இடம் பெற்று வருகின்ற சமூக மாற்றங்களுக்கு இயைபுடையவனாக மனிதன் தன்னை மாற்றிக் கொள்வதற்கு வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொள்ள வேண்டியவனாகவும், புதிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டியவனாகவும் உள்ளான்.

இன்று இக்கல்விச் செய்ற்பாட்டிலே மாணவர்கள் மட்டுமன்றி, மாணவர்களை புதிய உலகின் சவால்கட்கு முகங்கொடுக்கப் பயிற்றுகின்ற ஆசிரியர்களும் பங்கு கொள்கின்ற பணியிலே இன்று முறைசார்ந்த, முறை சாராத பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்ற போதிலும் "தேசிய கல்வி நிறுவகம்" இப்பணியினை முனைப்புடனும், வினைத்திறனுடனும் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தேசிய கல்வி நிறுவகமானது பல்வேறு ஆசிரியர் கல்வி நிலையங்களினூடாக இப்பணியினை செயற்படுத்தி வருகின்ற போதிலும் ஆசிரியர் கல்விப் பணியிலே கண்டி மத்திய நிலையம் வினைத்திறன் மிக்க செயற்பாட்டினை ஆற்றி வருகின்றது.

அந்த வகையில் கண்டி மத்திய நிலையத்தில் பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணவர்களினால், ஆசிரியர்களது சுய ஆக்கங்களை உள்ளடக்கிய "கல்வித் தாரகை" என்னும் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகை வெளியீடு சிறப்புடன் அமையவும், கண்டி மத்திய நிலையம் இன்றுபோல் என்றும் கல்விப் பணியினைச் சிறப்புடன் ஆற்றவும், இக்கல்வி நிலையத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிற்கு உறுதுணையாக நிற்கும் சிரேஷ்ட விரிவுரையாளருக்கும், ஏனைய விரிவுரையாளர்களுக்கும் மற்றும் இந்நூலாக்கக் குழுவினரிற்கும் எனது நல்லாசிகளை மனமுவந்து நல்குகின்றேன்.


அதிமேதகு ஜனாதிபதி
சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

01.09.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*



# ASIAN
# HARDWARE

C.I.C. PAINTS, ELEPHANT BRAND ASBESTOS SHEETS,
JINASENA WATER PUMPS,
BUILDING MATERIALS & ELECTRICAL ITEMS.

NO. 210, MAIN STREET, KEKIRAWA.

TEL: 025-2264338



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண கல்வி அமைச்சரின் ஆசிச்செய்தி



ஆசிரியர்களுக்கென பிரத்தியேகமாக பலவருட காலமாக தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுவரும் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியினைப் பயின்று பட்டம் பெற்றுச் செல்லும் ஆசிரிய மாணவர்களின் விடுகை வருட விழா நடைபெறுவதினால், அதில் "கல்வி தாரகை" எனும் நூல் வெளிவரயிருப்பதையிட்டும் அதற்கு ஆசிச்செய்தி அனுப்புவதினாலும் பேருவகையடைகின்றேன்.

இன்றைய காலத்தில் பற்பல துறைகளில் பட்டக்கற்கை நெறிகள் பயிற்றுவிக்கப்பட்டாலும் மாணவர்களின் கல்வித் தரத்தை நிர்ணயிக்கும் ஆசிரியர்களுக்கு இக் கற்கைநெறி கல்வித் தரத்தை வலுப்படுத்துகின்றது எனலாம்.

எனவே இப்பட்டப்படிப்பை முடித்து சிறந்த பெறுபேறுகளுடன் வெளியேறும் ஆசிரியர்கள், மாணவர்களின் கல்வித் தரத்தினை கட்டியெழுப்பும் தரமுள்ள ஆசிரியர்களாக செயற்படுபவர்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே இத்தகைய அரும் பணியை மேற்கொண்டுவரும் தேசிய கல்வி நிறுவனத்தின் கண்டிப் பிரதேச நிலையத்திற்கும் அதனை நடாத்தும் நிறுவனத்திற்கும் இச் சஞ்சிகையை ஆர்வத்துடன் வெளியிடும் இறுதிவருட ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கல்வித் தாரகை சிறப்பாக ஒளிவீச எனது வாழ்த்துக்கள்.

**வே.இராதாகிருஷ்ணன்**
அமைச்சர்.

திகதி : 01.09.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*



# SUMANGALI REST

**Spacious A/C & Non A/C Rooms**
**With All Facilities Provided**

Tel : 2504413, 2504415
2504416, 2588273
Fax : 094-1-2504071



No. 6, Daya Road,
Wellawatte,
Colombo 06.
Sri Lanka.

*With Best Compliments from:*

# MANO TRAVELS



# P.L. STORES & HOTEL




No. 05, Mahaousa Bazzar,
Madulkelle.
Tel: 081-2363210



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிரேஷ்ட விரிவுரையாளர்



அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம். J.P அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேசிய கல்வி நிறுவக கண்டி மத்திய நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும்,**
**கண்டி தமிழ் கல்விக் கழகத்தின் தலைவருமாகிய,**
**அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம் J.P. அவர்களின்**

# வாழ்த்துரை

இலங்கை தேசிய கல்வி நிறுவகம் கண்டி மத்திய நிலைய கல்விமாணிபட்டக் கற்கைநெறியின் இரண்டாவது (2002, 2005) தொகுதி மாணவர்கள் தங்களுடைய கல்விமாணிக் கற்கைநெறியின் நிறைவு விழாவின் போது வெளியிடும் "கல்வித்தாரகை" என்னும் இம்மலருக்கு என்னுடைய வாழ்த்துரையை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நிலையத்தில் கல்விமாணிப்பட்டம் பெற்று வெளியேறிய (1999, 2000) முதலாவது தொகுதியினர் தங்கள் கற்கையின் இறுதி விழாவின்போது முதலாவது மலரை வெளியிட்டு வைத்தனர். கொத்தும் குறையுமாக அம்மலர் வெளியிடப்பட்டமையால் எமது நிலையத்தின் அத்தனை தகவல்களையும் சரியான முறையில் தெரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படவில்லை என்பது எல்லோரும் அனுபவித்த உண்மையாகும். ஆனால் இன்று வெளியாகும்இந்த இரண்டாவது தொகுதியினரின் இம்மலர் முன்னைய அனைத்துக் குறைகளையும் நீக்கி அழகாகப் பரிணமித்திருப்பது மனதிற்கு மகிழ்ச்சியையும், பூரிப்பையும் தருகின்றது. இது பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

ஒரு கல்வி நிலையத்தின் நடவடிக்கைகளையும் அதன் முக்கிய நிகழ்ச்சிகளையும், பயில்வோரின் பல்வகைப்பட்ட ஆக்கங்களையும் வரலாற்றுப்பதிவாக எடுத்துக்காட்டும் பாங்கிலேயே மலர்கள் வெளியிடப்படுகின்றன. "கல்வித்தாரகை" என்னும் இம்மலரின் மூலமாக கண்டி மத்திய நிலையத்தின் சகல கைங்கரியங்களையும், கனதியான வேலைகளையும் அதன் காத்திரமான பணிகளையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில் இம்மலரானது காலத்தால் அழியாததாகும்.

தமிழ்மொழி மூலம் கல்விமாணிப்பட்டத்துக்காகப் பயிலும் எமது பட்டதாரி ஆசிரியர்கள்தங்களுடைய ஆளுமையை மேலும் வளர்த்திடவும் உயர்ந்த அனுபவங்களைப் பெற்றிடவும் சிறந்த நிபுணத்துவத்தின் பேரில் தேவையான வலுவினை ஊட்டிடவும் வாய்ப்பையும், வசதியையும் அவ்வப்போது ஏற்படுத்தி வந்துள்ளோம். இத்தகைய வாய்ப்புக்களின் கூட்டுமொத்தமே "கல்வித்தாரகை" என்பதில் ஐயமில்லை. தமிழ்மொழிக்கும், தமிழ்க்கல்விக்கும் சான்றாகவும் மேதாவிலாசமாகவும் எமது பட்டதாரிகள் விளங்கிட அவர்கள் மூன்றாண்டுகள் பெற்ற பயிற்சி நிச்சயம் வழிகாட்டும்.

இம்மலரை வெளியிடுவதில் பாடுபட்டுழைத்த அனைவருக்கும் என்னுடைய நன்றிகள் என்றுமுண்டு. விஷேடமாக இம்மலரின் ஆசிரியர்களான:

திரு.எஸ்.குருநாதன் - ஆசிரியர்
(இந்து தேசிய பாடசாலை - புஸ்ஸல்லாவை)

ஜனாப்.ஏ.எல்.எம்.ஹனிபா - அதிபர்
(பொல்கஹவெல சீ.சீ. தமிழ்ப்பாடசாலை)

ஆகியோருக்கு எனது பாராட்டுக்களும் நன்றிகளும் என்றும் உரித்தாக்கட்டும்.
வாழ்க தமிழ்ப்பணி! வளர்க கல்விப்பணி!!

இவ்வண்ணம்,
**எம்.வை.எம். முஸ்லிம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்விமாணிப்பட்டக் கற்கைநெறி.

மகளிர் உயர்தர பாடசாலை,
கண்டி.
01.09.2005.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

*Sanmuga Gandhi*



# *Gandhi Café*

**No. 55, Main Street,**
**Rattota.**

*With Best Compliments from:*




## D. RAMANATHAN

(மாத்தளை இந்து தேசியக் கல்லூரி
சிற்றுண்டிச்சாலை)

**No. 3/2, Dikkiriya,**
**Kaludawela,**
**Matale.**
**Tel: 077-6545704**

*With Best Compliments from:*



# *Udaya Brothers*

**No. 148, New Town,**
**Digana,**
**Rajawella.**
**Tel: 08-374138**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமாணிப்பட்டக் கற்கைநெறி மாணவர் பேரவைத் தலைவரின் ஆசிச்செய்தி



தேசிய கல்வி நிறுவக கண்டி மத்திய நிலைய கல்விமாணிக் கற்கை நெறி விடுகை வருட ஆசிரிய மாணாக்கரின் உன்னதமான முயற்சியினாலும், நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் M.Y.M. முஸ்லிம் அவர்களின் வழிகாட்டலினாலும் உங்கள் கைகளில் தவழும் "கல்வித் தாரகைக்கு" ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

புதிய பரிமாணத்தில் சிந்திக்கும் ஒவ்வொரு சமூகப்பிராணியும் தனது நீடித்து நிலைக்கக் கூடிய ஒவ்வொரு நடத்தை மாற்றத்துக்கும் அடிப்படையாக அமைவது கல்வியே என கூறுகின்றனர். ஆனால் "கற்றவன்" என்ற உயர்ந்த நிலையை அடைவதற்கு முன் அவன் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதிலேயே காலத்தை செலவிட்டு இலக்கை எட்டமுடியாமல் தவிப்பதைப் பார்க்கும் இக்காலகட்டத்தில், கல்வி மேம்பாட்டுக்காக உழைக்கும் ஒரு சில நிறுவனங்களே இன்று மிஞ்சியுள்ளன. அவ்வகை நிறுவனங்களின் அளப்பரிய முயற்சியில் ஒன்றே இந்த "கல்வித் தாரகை" சஞ்சிகை மலர்.

இம்மலரை அச்சு வடிவில் உருவாக்குவதற்கு பட்டக்கற்கை நெறி ஆசிரிய மாணவர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். நாட்டின் நாலா திசைகளுக்கும் மணம் பரப்ப இருக்கும் இம்மலருக்கு விளம்பரங்கள் மூலம் கைகொடுத்த வர்த்தகப் பெருமக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தேசிய கல்வி நிறுவனத்தின் கீழ் இயங்கும் பல்வேறு உப நிலையங்களில் கண்டி மத்திய நிலையம் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று மிளிர்வதற்கு இவ்வாறான முயற்சிகள் காரணமாக அமைகின்றன. எமக்கு முன் கற்றுத் தேர்ந்த குழுவினர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து இவ்வருடமும் நிறைவேற்றுவது எமக்குப்பின் கற்க வரும் ஆசிரியர்களை ஆற்றுப்படுத்துவதாக அமைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

கண்டி நிலைய கல்விமாணிப் பட்டக்கற்கை நெறி விடுகை வருட ஆசிரிய மாணவர்களின் இம்முயற்சி வெற்றி பெற்று நாலா திசையும் கல்வி மணம்பரப்ப என் நல்லாசிகள்.

**A.J. அருள்நாயகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



## A.M. Mazarick

## Water Supply and Fruits Store



No. 58, New Town,
Digana,
Rajawella.
Tel: 081-2374118

*With Best Compliments from:*



## M.H.M.

## Hardware Stores

168, Hendeniya,
Werallagama.
Tel: 081-23461598

*With Best Compliments from:*



## Devika Jewellery

Dealers in
Sovereign Gold Jewellery

No. 20, Dumbarathanna,
Pallekala,
Kundasala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பேரவை செயலாளரின் இதயத்திலிருந்து...

தேசிய கல்வி நிறுவகத்தின் கண்டிப் பிராந்திய மத்திய நிலையத்தின் கல்விமாணிப் பட்டக்கற்கை நெறியின் விடுகை வருட பட்டதாரி ஆசிரியர்களால் தமது கற்றல் நிறைவை பூர்த்தி செய்யுமுகமாக வெளியிடும் "கல்வித் தாரகை" என்னும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஒருவன் கற்கின்ற கல்வியின் நிறைவு அவனிலும், ஏனையோரிலும் நடத்தைசார் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இதனடிப்படையில், எமது கண்டி மத்திய நிலையத்தில், 2002 - 2005 ஆண்டு காலப் பகுதியில் பல்வேறுபட்ட பயிற்சிகளை பின்பற்றிய பயிலுனர்கள் தமது இம் மூன்று வருட கால கற்றல் செயற்பாடுகளில் அரிய பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர். அந்த வகையில் "கல்வித் தாரகை" மலர் வெளியீடு அதிலோர் அம்சமாகத் திகழ்வது சிறப்பம்சமாகும்.

மாதத்திலே வார இறுதி நாட்களில் மட்டுமே சந்தித்துக் கொள்கின்ற இப்பயிலுனர்கள் தமது விடா முயற்சியாலும், அயராத கடின உழைப்பாலும் இம்மலரை வெளியீடு செய்கின்றனர். இந்த முயற்சி, உழைப்பு என்பவற்றை எமக்கு செம்மைப்படுத்தி, நெறிப்படுத்தி, வழிகாட்டி, ஆர்வமூட்டி இம்மலரை வெளியிட உறுதுணை புரிபவர் எமது பெரு மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய பேராசான் அல்ஹாஜ் M.Y.M. முஸ்லிம் (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்களாகும்.

இன்று கல்வியானது சிக்கல்தன்மை நிறைந்ததாகவும், போட்டித்தன்மை கொண்டதாகவும், வியாபாரத்தன்மை கொண்டதாகவும் காணப்படும் நிலையில் ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் உதவும் என நம்புகிறேன்.

மாணவப் பேரவைச் செயலாளர் என்ற வகையில் இம்முயற்சியில் ஈடுபட்ட, ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**M.I.M.** றவ்பிக்
செயலாளர்
மாணவர் பேரவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

*Kasthuri*

# VENIVEL

***Herbal Beauty Soap***

***Freshen up thoughout the day...***

**Manufactured by**

**GODAKANDA HERBALS (PVT) LTD**

MARKETED BY

**VENDOL LANKA CO (PVT) LTD**

No. 102, Kandy Road,

Weweldeniya,

Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணை இதழாசிரியர்கள் உங்களுடன் சில நிமிடங்கள்...



இயற்கையின் எழில்மிகு மலைகளால் சூழப்பட்ட கண்டி மாநகரின் மலை அடிவாரத்திலே அமைந்துள்ள மகளிர் உயர்தரக் கல்லூரியில் எமது கல்விமாணிப்பட்டக் கற்கை நெறியின் மத்திய நிலையம் அமைந்துள்ளது.

இந்நிலையம் தனது முதற்பிரசவமான நூற்றுக்கணக்கான பட்டதாரி மாணவர்களைப் பிரசவித்து நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அதன் சேவையை வழங்க அனுப்பிய பின் அதன் இரண்டாவது பிரசவத்தை மூன்று ஆண்டுகள் சுமந்து விட்டு பிரசவிக்க இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் "கல்வித்தாரகை" எனும் சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் அனுபவிக்கும் சந்தோஷம் எழுத்தில் வடிக்கக் கூடியதொன்றாக இல்லை. ஆரம்பத்தில் இம்மலரை உருவாக்கி அழகிய நாமம் ஒன்றைச் சூட்டி வரலாற்றைப் படைத்தவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய நல்லிதயங்கள் எங்கிருந்த போதிலும் அவர்களுக்காக எமது இதய கோலங்களின் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

பாரிய பொறுப்புகளைச் சுமந்துகொண்டு களிமண் உருண்டைகளிலிருந்து சிற்பங்கள் செய்யப் புறப்படும் எங்களிடமிருந்து பிரசவமாகும் இந்தக் கல்வித்தாரகையை பூரணப்படுத்துவதற்கு சிரேஷ்ட போதனாசிரியர் அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம் அவர்கள் மேற்கொண்ட பணிகள் அளப்பரியன. அன்னாரின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களுமே எம்பணிக்கு வலுவூட்டுவனவாக அமைந்தன.

சமுதாயச் சோலையைச் செழிப்புற வைக்கும் போசணைச் சத்துக்கள் நிறைந்த நிலமாகத் திகழ வேண்டியவர்கள், ஆசிரியர்கள். மேலும் போசணைச் சத்துக்களை ஊட்டியும், அதனை மேலும் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை அறிவித்தும், இங்கிருந்து எம்மைச் சமுதாயச் சோலைக்குள் தூவி விடுகிறது கண்டி கல்விமாணிப்பட்டக் கற்கை நெறியின் மத்திய நிலையம்.

இங்கு நாம் பெற்ற போசணைகளால் சமுதாயத்தின் ஆணிவேரை ஆழப்புதைத்து அதன் கிளைகளைப் பரப்பி சமுதாயத்தைச் செழிக்க வைக்க வேண்டிய பாரிய பொறுப்பைச் சுமந்துள்ளோம். நாம் நமது கடமையைத் தவறவிட்டு நாளைய சமுதாயத்தின் இழி நிலைக்குக் காரணமான நயவஞ்சகர்களாக ஆகாமல் எம்மை நாமே திடப்படுத்திக் கொண்டு புறப்படுவோம். செயலாற்றுவோம். வெற்றி பெறுவோம்.

இறுதியாக...

இந்தக் கல்வித்தாரகையை மலரச் செய்வதற்கு எமக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி உற்சாகப்படுத்திய எமது சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம் அவர்களுக்கும், பல்வேறு அலுவல்களுக்கு மத்தியிலும் தமது சிரமங்களைப் பாராது எமக்கு ஆசிகள் வழங்கிய அதிஉத்தம மாண்புமிகு ஜனாதிபதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கும், மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், மேலும் கல்வித்தாரகையை செழிப்புற வைப்பதற்கு விளம்பரங்களை அள்ளிவழங்கிய வள்ளல்களுக்கும், விளம்பரங்களைச் சேகரிப்பதில் முன்னின்றுழைத்த முதலாம் ஆண்டு, இறுதி ஆண்டு ஆசிரிய தோழர்களுக்கும், கல்வித்தாரகையை வடித்தெடுக்க தோளோடு தோள் நின்றுழைத்த மலராக்கக் குழுவினருக்கும் அத்தோடு குறுகிய காலத்தில் இம்மலரை அச்சிட்டு வடிவமைப்புச் செய்த அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கல்வித்தாரகையை உங்கள் கரங்களில் தவழ விட்டு விடை பெறுகிறோம்.

நன்றி.

எஸ். குருநாதன்

ஏ.எல்.எம். ஹனிபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

S.Sridharan
(Proprietor)

# ASIRI METALS

**Dealers in Steel and General Merchants in all Hardware Item**
**and**
**Purchase Aluminium, Brass, Copper Scrop Iron and Exray Cards.**

**NO. 546, KANDY ROAD,**
**BALAGOLLA,**
**KENGALLA.**
**TEL: 081-2422816**
**MOBLE : 0777-282247, 071-8861169**

*With Best Compliments from:*

# Yagam Gold House

**No. 251, Milco Road,**
**Digana,**
**Rajawella.**
**Tel: 081-2374625**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாரகைக்கோர் வாழ்த்து



திருமதி. A.A.F. ரபீகா
(விடுகை வருடம்)

பூ மகளின் மேனியிலே
பூத்திருக்கும் கார்த்திகையில்
கட்டவிழ்ந்த மொட்டெனவே
மலர்கின்றது கல்வித் தாரகை

கண் கவரும் கண்டியிலே
கல்விமாணி கற்கை நெறியதிலே
கல்விக்கோர் தாரகையாய்
இறவாப் புகழ் பெறுகின்றாய்

மெய்தனிலே நீ சுமந்துள்ள
மெருகூட்டும் ஆக்கங்கள்
காலமெல்லாம் எம் பெயரை
காசினியில் நிலை நிறுத்தும்

சீனியர்கள் வழி சென்று
சீராக பணி புரிந்து
மூன்றாண்டு நிறைவினிலே
ஆக்கி விட்டோம் தாரகையை

சீனியரைப் பின் தொடர்ந்து
ஜூனியரும் பணியாற்றி
மூன்றாவது மலரினையும்
முறையாக வெளியிடவே
இனிய 'துஆ' நான் கேட்டு
இனிதாக வாழ்த்திடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



# M.A. ANSAR STORES

**No. 49, Udathalawinna Madige,**
**Udathalawinna**

---

*With Best Compliments from:*



J.M.FAROOK

# *Daily Needs*

**No.04, Kalalpitiya Road,**
**Ukuwala.**
**Tel: 0777-583598**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னைக் கவர்ந்த முப்பெரும் படைப்பாளிகள்



A.J. அருள்நாயகம்
(விடுகை வருடம்)

## பிக்காஸோ

"உங்களுக்குத் தெரிந்த ஓவியர் ஒருவரின் பெயரை சொல்லுங்கள்" என்று யாரைக் கேட்டாலும் பெரும்பாலானவர்கள் முதலில் குறிப்பிடும் பெயர் பிக்காஸோ.

பிக்காஸோவின் உலகம் தழுவிய புகழுக்கு என்ன காரணம்? ஆரம்ப காலங்களில் ஓவியங்களை அகலம், நீளம் என்ற எல்லைக்குள்மட்டும் அதாவது Two Dimension ல் மட்டுமே வரைந்து கொண்டிருந்தார்கள். மைக்கல் ஏஞ்சலோவும், லியனார்டோ டாவின்சியும் ஓவியர்களுக்கு ஆழம் கொடுத்து Three dimension effect கொடுக்க ஓவியக்கலை ஒரு மிகப்பெரிய மாற்றமடைந்தது. இவர்கள் வாழ்ந்து மறைந்து பல நூற்றாண்டுகள் ஆன பிறகும் ஓவியக்கலைக்கு யாராலும் ஒரு புதிய திருப்பத்தை கொடுக்க முடியவில்லை. இன்னொரு புறம் கெமராவின் வருகை ஓவியங்களின் முக்கியத்துவத்தை குறைக்க ஆரம்பித்தது. ஓவியர்கள் தாங்கள் பார்க்கும் காட்சிகளை என்ன தான் தத்ரூபமாக வரைந்தாலும் போட்டோவின் வேகத்துக்கும் தரத்துக்கும் ஓவியர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஓவியக்கலை தனது முக்கியத்துவத்தை இழந்து விடுமோ என்ற அச்சம் முளைவிட ஆரம்பித்தது.

அந்தச் சமயம் அதாவது 1907 ம் ஆண்டு பிக்காஸோ வரைந்த Les Demoiselles d'Avignon என்ற ஐந்து பெண்களின் ஓவியம் ஓவியக்கலைக்கு ஒரு மிகப்பெரிய திருப்பு முனையை கொடுத்தது.

"ஒரு காட்சியை கண்கள் எப்படி பார்க்கிறதோ அதை அதே மாதிரிவரைவதில் என்ன புதுமை இருக்கிறது? அந்தக் காட்சி மனதில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளைத்தான் ஓவியம் பிரதிபலிக்க வேண்டும்" - இது பிக்காஸோவின் கருத்து. இந்த அடிப்படையிலேயே அவர் ஓவியங்களை வரைந்தார். பிக்காஸோவின் இந்தப் புதிய முயற்சியை உலகம் எடுத்த எடுப்பிலேயே சிவப்பு கம்பளம் விரித்து எற்கவில்லை. பலமான எதிர்ப்பு கிளம்பியது. அதே அளவுக்கும் ஆதரவும், கைதட்டல்களும் எழுந்தன. கம்பரின் பாடல்களுக்கு ஆள்ஆளுக்கு ஓர் அர்த்தம் சொல்வதைப்போல பிக்காஸோவின் இந்த ஓவியத்தை பாராட்டியவர்கள் ஒவ்வொருவரும் ஒரு புதிய அர்த்தம் சொன்னார்கள். அப்போது பிக்காஸோ சொன்னார், "எந்த ஓவியமாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரே ஓர் அர்த்தம் தான் உண்டு. அது அதை வரைந்த ஓவியன் கொடுத்த அர்த்தம் மட்டுமே!"

பிக்காஸோ இதே பாணியில் தொடர்ந்து ஓவியங்கள் வரைய உலகம் இந்த ஓவிய ஸ்டைலுக்கு Cubisum என்று பெயர் கொடுத்தது. ஜியோமெண்ட்ரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளை பிரதிபலிக்கும் இந்த ஓவியக்கலை பிறகு ராக்கெட் வேகத்தில் வளர்ந்தது. இந்த நூற்றாண்டில் வியக்கத்தக்க விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டின், பிக்காஸோவின் ரசிகராக மாறினார்.

பிக்காஸோ அறிமுகப்படுத்திய இந்த ஸ்டைல் ஓவியம் காகிதத்தோடு நின்று விடவில்லை. பிற்காலத்தில் டி.வி, பிரிஜ், வாட்டர் ஹீட்டர் போன்ற பல பொருட்களை டிசைன் செய்வதற்கு இதுதான் அடிப்படையாக இருந்தது. Cubisum என்ற மாடர்ன் ஆர்ட்தான் பிக்காஸோவுக்கு புகழ் சேர்த்தது என்றாலும் மரபு ஓவியங்களை வரைவதிலும் பிக்காஸோ வல்லவர். அதுமட்டுமல்லாது, லான்கா ஆரம்பித்து வைத்த Expressionism ல் ஆரம்பித்து Surrealism வரை அத்தனை ஸ்டைல்களிலும் இவர் நிபுணர்.

பிக்காஸோ பிறந்தது ஸ்பெயின் நாட்டில் என்றாலும் அவர் வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவிட்டது கலைகளின் தலைநகரான பாரீஸில்! தனது குடிமகனாக மாறச்சொல்லி பிரான்ஸ் பல முறை பிக்காஸோவைக் கேட்டுக் கொண்டது. ஆனால், தனது நாட்டின் மீது கொண்ட பற்றால் கடைசிவரை அவர் தனது குடியுரிமையை மாற்றவில்லை.

சிறுவயதில் ஓவியனாக வேண்டும் என்ற கனவுகளோடு வளர்ந்த கிட்லர், இது என்ன கிறுக்கல் என்று பிக்காஸோவின் ஓவியங்களை தடை செய்தார். இன்னொரு பக்கம் ஸ்பெயின் மீது நடத்தப்பட்ட போர் அவலங்களை பிக்காஸோ ஓவியமாக வரைய அது இறவாப்புகழ் பெற்றது. பின் ஹிட்லரின் நாஜியிஸத்தை எதிர்க்கும் சின்னமாகவே அவ்வோவியம் மாறியது.

1950ம் ஆண்டு நடத்தப்பட்ட அமைதி மாநாட்டுக்காக அவர் அமைதியை புறாவாக உருவகப்படுத்தி ஓர் அடையாள ஓவியம் உருவாக்க, அதை மொத்த உலகமும் அமைதியின் சின்னமாக ஏற்றுக்கொண்டது.

## மைக்கல் ஏஞ்சலோ

"கலை என்பது என்ன என்பதை இவன் வடிக்கப்போகும் சிற்பங்களிலிருந்தும், ஓவியங்களிலிருந்தும் உலகம் அறிவதாக!" - மைக்கல் ஏஞ்சலோவை படைக்கும் போது இறைவன் இப்படி அறிவித்ததாக ஒரு நம்பிக்கை உண்டு.

உயிரற்ற உடம்பாக இருந்த ஆதாமின் சுண்டு விரலை இறைவன் தீண்ட.... ஆதாம் உயிர் பெற்று எழுந்ததாகச் சொல்லும் பைபிள் காட்சியை, மைக்கல் ஏஞ்சலோ தன் தூரிகையால் படைத்தபோது ஆதாம் இரண்டாவது முறையாக உயிர் பெற்றான்.

"ஆதாமின் பிறப்பு" என்ற இந்த ஓவியம் உலகத்தில் இருக்கும் அத்தனை ஓவியங்களுக்கும் வேதம் மாதிரி இருக்கும். சிஸ்டைன் மாதா கோயிலின் (வாட்டிகன்) மேற்கூரையில் இதைப்போலவே வேறு 340 ஓவியங்கள் இருக்கின்றன. இவற்றை ஓவியங்கள் என்பதைவிட ஓவியர்களின் டிக்ஸனரி என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரும்போது, குனியும்போது, நிமிரும்போது, ஓடும்போது என்று ஒவ்வொரு மனித அசைவுகளையும் ஓவியமாக ரெக்கார்ட் செய்த முதல் கலைஞன் மைக்கல் ஏஞ்சலோதான்!. இத்தனைக்கும் இவர் அடிப்படையில் ஓவியரில்லை - மகா சிற்பி.

1504ம் ஆண்டு மைக்கல் ஏஞ்சலோ தனது இருபத்தொன்பதாவது வயதில் செதுக்கிய பதின்மூன்று அடி உயர டேவிட் சிலை அதுவரை நடைமுறையில் இருந்த சிற்ப இலக்கணங்களையே மாற்றியமைத்தது. அப்போது சர்வ அதிகாரத்தோடு விளங்கிய போப் ஆண்டவரான இரண்டாம் ஜூலியஸிடமிருந்து மைக்கல் ஏஞ்சலோவுக்கு சம்மன் வந்தது. சிஸ்டைன் தேவாலயத்தின் சுவர்களிலும், மேற்கூரையிலும் பைபிள் காட்சிகளை ஓவியங்களாகத் தீட்ட போப் ஆண்டவர் ஏஞ்சலோவுக்கு கட்டளை பிறப்பித்தார். "நான் சிற்பி, ஓவியன் இல்லை. என்னை விட்டு விடுங்கள்!" என்ற ஏஞ்சலோவின் கெஞ்சல், போப் ஆண்டவரின் காதில் விழவில்லை. ஏஞ்சலோ வேண்டா வெறுப்புடன் தான் இவ்வேலையை தொடங்கினார். சுமார் பத்தாயிரம் சதுர அடியில் ஓவியங்கள் வரையும் மாபெரும் பணியை நான்கு, ஐந்து ஓவியர்களை உதவிக்கு வைத்துக்கொண்டு ஏஞ்சலோ ஆரம்பித்தார். அவர் ஒரு முன்கோபி. சுற்றி வளைத்து பேசத் தெரியாதவர். அதனால், வேலைக்கு சேர்ந்த வேகத்திலேயே உதவியாளர்கள் விலகி விட தேவாலயத்தின் உயர்ந்த உட்கூரைகளில் ஓவியம் வரையும் கஷ்டமான பணியை தனி ஒரு மனிதனாக ஏஞ்சலோவே செய்தார். மின்சார விளக்குகள் இல்லாத அந்தக் காலத்தில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சாப்பாடு, தூக்கம் என்று எல்லாவற்றையும் மறந்து ஏஞ்சலோ தேவாலயத்தின் விதானத்தில் ஓவியம் தீட்டியபோது தூரிகையிலிருந்து சிதறிய வண்ணங்கள் அவர் கண்களை கசக்கி எடுத்தன.

இப்படி 4 ஆண்டுகள் அவர் இரவு பகலாக உழைக்க சிஸ்டையின் தேவாலயம் உலகின் தலை சிறந்த ஓவியக்கூடமாக மாறியது.

இந்த அற்புதமான கலைஞன், இளைஞனாக இருந்த போது, தான் செதுக்கிய டேவிட் சிலையைப் போல இறுக்கமான உருண்டு திரண்ட தசைகளுடன் திடகாத்திரமாக இருந்தார். ஆனால் கடைசிக்காலத்தில் இவர் விசித்திரமான உபாதைகளால் தவித்தார். சாக்ஸைக் கழற்றினால் கால் தோலும் சாக்ஸோடு சேர்ந்து கழன்றது. சரி சாக்ஸ் - ஷூ எதுவுமே வேண்டாம் என்று விட்டால் கால்கள் மரத்துப்போய்விடும். திருமணம், மனைவி, குழந்தைகள் என்று எதுவுமே பார்க்காத ஏஞ்சலோ 1564ம் ஆண்டு மரணப்படுக்கையில் இருந்தபோது அருகே இருந்த நண்பர்களிடம் இப்படிச் சொன்னார்.

"நான் இந்த உலகத்துக்கு விட்டுச்செல்வது என்னுடைய படைப்புகள் என்ற குழந்தைகளைத்தான். என்னுடைய குழந்தைகள் என்று சொல்லவே அவற்றுக்கு தகுதியில்லை. என்றாலும், என்றென்றும் அவற்றிலே நான் வாழ்வேன்."

## லியனார்டோ டாவின்சி

லியனார்டோ டாவின்சி! இந்தப் பெயரைச் சொன்னதும் "ஓ இவரை எனக்கு தெரியுமே! மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் தானே?" என்று நீங்கள் கேட்கக்கூடும். ஆனால், இந்த மாமனிதன் ஒரு ஓவியர் மட்டுமல்ல தேர்ந்த சிற்பி, சிறந்த கவிஞர், இசை விற்பன்னர், தத்துவ மேதை, விளையாட்டு வீரர், இன்ஜினியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்க்கிடெக்ட், நீர்ப்பாசன நிபுணர், இராணுவ ஆலோசகர் இப்படி இவர் எடுத்த அவதாரங்கள் பத்துக்கும் மேலே!

ஐந்நூறு ஆண்டுகளுக்கு பின்பு மனிதன் கண்டுபிடித்த ஹெலிகொப்டரிலிருந்து, பீரங்கி வரையிலான பல கண்டுபிடிப்புக்களை தொலை நோக்கோடு கற்பனை செய்து காகிதத்தில் வரைந்தவர் இவர்.

விமானமோ, ஹெலிகொப்டரோ கண்டுபிடிக்காத காலத்திலேயே இவர் பரசூட்டைப்பற்றி தூரிகையால் கற்பனை செய்தார். கடிகாரம் கண்டுபிடிக்கப்படாத அந்த நாளில் அலாரம் வரை சிந்தித்தார்.

"தாயின் கருப்பையில் குழந்தை எப்படி இருக்கிறது?" என்று கூட இவரின் கற்பனை விசாரணை செய்தது. ஓவியத்தின ஒளியையும், நிழலையும் ஒரு சேரக்கொண்டு வந்த முதல் ஓவியரும் இவர் தான்! ஒளியையும், நிழலையும் இவர் கவனிக்க ஆரம்பித்தபோது கண்களைப்பற்றி ஆராய ஆரம்பித்தார். பிறகு ஒளி அலைகளைப் பற்றி விசாரணை செய்தார். காமிராவுக்கான அடிப்படை தத்துவத்தை வழங்கியதே இவரின் ஆராய்ச்சிதான்.

மனிதர்களை ஓவியமாக வரைந்தபோது மனிதனின் உடற்கூறு இயலை ஆராய்ச்சி செய்தார். செடிகளை வரைந்தபோது தாவரவியல் பற்றிய தேடலில் இறங்கினார். இதிலே மிகப் பெரிய பிரமிப்பு என்னவென்றால் இவரின் காலத்தில் மேலே சொன்ன எந்த விஞ்ஞான ஆராய்ச்சியுமே துளிர்விடக் கூட ஆரம்பிக்கவில்லை.

ஒரே சமயத்தில் இரண்டு கைகளாலும் ஓவியம் வரையக்கூடிய ஒப்பற்ற ஆற்றல் இவருக்குண்டு. அதுமட்டமல்ல... மூளையைப் போலவே இவரின் புஜங்களும் பலம் வாய்ந்தவை. குதிரை லாடங்களை வெறும் கைகளால் இரண்டாக உடைக்கக்கூடியவர் இவர்.

இத்தாலியின் ப்ளோரன்ஸ் நகர் அருகே இருக்கும் வின்ஸி என்ற மலைகள் சூழ்ந்த கிராமம் தான் இவர் பிறந்த ஊர். டாவின்சியின் அப்பா பெயர் சாப்பியரோ. இவருக்கும் கேத்தரினா என்ற விவசாயக் கூலிவேலை பார்த்த பெண்ணுக்கும் 1452ம் ஆண்டு சட்டவிரோதமாகப் பிறந்த குழந்தைதான் டாவின்சி, பிறந்ததுமே இவரின் அம்மா கேத்தரினா இன்னொருவரோடு குடும்பம் நடத்தப்போய்விட தாய்ப்பாசம் என்றால் என்னவென்று தெரியாமலேயே வளர்ந்தார் இந்த மாபெரும் ஓவியர். மைக்கல் ஏஞ்சலோ போன்ற ஓவியமேதைகள் இவரின் காலத்தில், இவர் வாழ்ந்த இதே இத்தாலி நாட்டில் இருந்தார்கள். என்றாலும், டாவின்சியை போல கலை, மருத்துவம், பௌதீகம், தாவரவியல் என்று எல்லா துறைகளிலும் தடயம் பதித்த இன்னொருவரை உலகம் இன்று வரை ஈன்றெடுக்கவில்லை.

**மோனாலிசா**

1911ம் ஆண்டு திருடன் ஒருவன் இந்த உலக மகா ஓவியத்தை திருடிக்கொண்டு போய்விட்டான். ஓவியம் காணாமல் போன பிறகும் அது வைக்கப்பட்டிருந்த வெற்றிடத்தைப் பார்க்கவே கூட்டம் அலை மோதியது. பிறகு ஒருவாறு மீட்கப்பட்ட இந்த ஓவியம் இப்போது பாரீஸின் லூவர் மியூஸியத்தை அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது. மோனாலிசா ஓவியம் இப்போது எவ்வளவு ரூபாய் மதிப்புக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கிறது தெரியுமா....? ஐந்நூறு கோடி ரூபாய்க்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்து மடியும் சமாதானம்

H.L. ஜிப்ரி
(விடுகை வருடம்)

யுத்த அரக்கனின்
துப்பாக்கி வாய்
சப்பித் துப்பிய - எச்சில்
ரவைகளால்
செத்து மடிகின்றன
சமாதானப் புறாக்கள்.

சித்தம் கலங்கி
நிற்கிறேன்
நான்;
நித்தமும்...
மனிதம்
செத்து மடிவதைப்
பார்த்து.

மின்னல் கீற்றாய்
மின்னிய
சமாதானம்
யுத்த இடியாய்
முழங்கி
உயிர்க் கொலை
மழை பொழிகிறது.

நிஜம்
நிழலானது போல
உயிர்கள்
குற்றுயிராய்த்
திரும்பும்
அவலம்.

ஏன் இந்த
யுத்தம்.
இந்த மண்ணை
ஆள்வதற்கா?
மக்களை ஆள்வதற்கா?

யுத்த விரும்பிகளே!
நீங்கள்
ஒன்றை மட்டும்
புரிந்து கொள்ளுங்கள்.

மனித உயிர்களுக்கு
மதிப்பளிக்கப்படாதவரை
நீங்கள்
ஆளப்போவது
இந்த
மண்ணை அல்ல
இந்த
மக்களை அல்ல

வெறும்
மயானங்களைத்
தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

K. Wigneswaran
(Managing Director)

# Graphic Land (Pvt) Ltd

PRINTING & ADVERTISING

**No. 306, Williamgopallawa Mawatha,
Kandy.
Tel / Fax : 081-4474691
Mobile : 0777-395371
E - Mail: graphic@kandy.ccom.lk**

---




**NO. 95, NEW TOWN,
DIGANA, RAJAWELLA.
Tel: 2374043, 2374169
Fax: 5740214**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR LECTURERS




( From left to right )

MRS. A.R. SATHYENDRA, MRS. R. CHANDRIKA, MISS. N.M. THAHA, MRS. S. RUKYA HASMI, MRS. H.M. WADALIYADDA ( PRINCIPAL - G.H.S ), AL - HAJ. M.Y.M. MUSLIM ( SENIOR LECTURER ), MR. S.L.A. SATHTHAR, MR. S. DEVAMANOHARAN, MRS. M.S.C. RATHNASAMI, MRS. R. NANDHAKUMAR, MRS. C. RAVICHANDRIKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளைதிறன் கற்றலுக்கான கற்பித்தல் முறை
## ஒரு கண்ணோட்டம்



S. குருநாதன்
(விடுகை வருடம்)

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் பிரதான இலக்கு வகுப்பிலுள்ள சகல மாணவர்களினதும் அடைவு மட்டத்தை உயர்த்துவதாகும். இதனை எப்படிச் செய்வது என்பதுதான் கேள்வி. இதை நிறைவேற்றுவதற்கு வழி உண்டு.

இன்று பாடசாலைக்குச் செல்லும் சிறார்களில் ஒரு சிலர் நன்மை அடைவதும் வேறு சிலர் நன்மையடையாததுமே முக்கிய பிரச்சினையாக விளங்குகின்றது. ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் விடயங்கள் சகல மாணவரையும் சென்றடைய வேண்டுமென பிரயத்தனம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் கற்பிப்பவை எல்லாம் சில மாணவர்களைச் சென்றடைவதில்லை. இவ்வாறு சில மாணவர்கள் தாம் கற்பவற்றை விளங்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் என்னவாக இருக்கும்? அவர்கள் ஆற்றல் குறைந்தவர்களாகவோ, மெல்லக் கற்பவராகவோ, குறைபாடுடையோராகவோ, ஊக்கல் பிரச்சினைகள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் உடையவராகவோ இருக்கலாம். அதேவேளை மாணவன் ஒருவனிடம் காணப்படும் பலம், பலவீனங்களுக்கும் ஆசிரியர் பின்பற்றும் கற்பித்தல் முறைகளுக்குமிடையே தொடர்பின்மை காணப்பட்டாலும் மாணவனின் அடைவு பாதிக்கப்படலாம்.

இத்தகைய குறைபாட்டை நீக்குவதற்கு வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் (Teaching for successful intelligence) என்ற புதிய அணுகுமுறை ஒன்று Robert J. Sternberg என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டது. இது வெற்றிகரமான நுண்ணறிவுக் கோட்பாடு என்ற உளவியல் கோட்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோட்பாடு பாரம்பரிய நுண்ணறிவுக் கோட்பாடுகளைவிட வேறுபட்டது. பாரம்பரிய நுண்ணறிவுக் கோட்பாடுகள் ஒருவனது பொது விவேகத்தைச் சுட்டுவதாக அமைந்தன. நுண்ணறிவு ஈவை அளவுகோலாகக் கொண்டன. ஆனால் புதிய நுண்ணறிவுக் கோட்பாடானது ஒரு நவீன கற்பித்தல் முறையாகும்.

பாரம்பரிய முறைகளினூடாக கற்பிக்கப்பட்ட குறிப்பிட்ட அடைவைப் பெறாத மாணவர்கள் வெற்றிகரமான நுண்ணறிவுக் கோட்பாடு அடிப்படையில் கற்பிக்கப்படின் அவர்கள் தமது ஆற்றலை வெளிக் கொணர்கிறார்கள் என்பது Strernberg, Gardner போன்றோர் செய்த ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக பிள்ளைகள் மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பதில் சிரமப்படின் பாதியில் நிறுத்திவிடுவதுண்டு. சிலர் குறிப்பிட்ட பாடங்களைக் கற்காமல் விட்டுவிடுவர். சிலர் பாடநெறிகளையே கைவிட்டு விடுவர். வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் இத்தகைய மாணவர்கள் வெற்றிபெறுவதற்குரிய வாய்ப்பினைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றிகரமான நுண்ணறிவு என்றால் என்ன?**

பொருத்தமான இலக்குகளும் பொருத்தமான சந்தர்ப்பங்களும் வழங்கப்படும் ஒருவனுக்கு வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஆற்றல் இருப்பின் அதுதான் வெற்றிகரமான நுண்ணறிவு எனப்படும். எனவே வெற்றிகரமான நுண்ணறிவு பாடசாலை அடைவுக்கு அடிப்படையாக அமைவதோடு வாழ்க்கையில் சாதனை படைக்கவும் உதவும். வெற்றிகரமான நுண்ணறிவு உடையோர் புதிய சூழலுக்கு விரைவில் இசைவாக்கம் அடைவர். புதிய சூழலுக்கமைய தம்மை மாற்றிக் கொள்வர் அல்லது தமக்கேற்ப சூழலை மாற்றுவர்.

**வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் என்றால் என்ன?**

வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் நான்கு பிரதான அம்சங்களைக் கொண்டது.

1. ஞாபகக் கற்றலுக்கான கற்பித்தல் - Teaching for memory learning
2. பகுப்பாய்வுக் கற்றலுக்கான கற்பித்தல் - Teaching for analytical learning
3. ஆக்கக் கற்றலுக்கான கற்பித்தல் - Teaching for Creative learning
4. செயல்முறைக் கற்றலுக்கான கற்பித்தல் - Teaching for Practical learning

இவை ஒவ்வொன்றையும் தனித்தனி நோக்குவோம்

**ஞாபகக் கற்றலுக்கான கற்பித்தல்**

பாரம்பரிய முறையிலான கற்பித்தலில் மனனம் செய்து கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. ஆசிரியர் இவ்வாறு செய்வதை வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் கோட்பாடு நிராகரிக்கவில்லை. அவர்கள் தாம் செய்வதைத் தொடரலாம். ஆனால் புதிய கோட்பாடு வேண்டி நிற்பது என்னவெனில் ஆசிரியர்கள் மனனம் செய்யும் முறையை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தலை மேலும் கட்டியெழுப்புதலாகும். ஏனெனில் மனனம் செய்வதோ அல்லது ஒரு விடயம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதோ அவசியமானதாகும். ஒரு விடயம் பற்றி எதுவுமே தெரியாது பிரயோகம், பகுப்பாய்வு போன்ற உயர் திறன்களைப் பெறமுடியாது. யார், என்ன, எங்கே, எப்பொழுது, ஏன், எப்படி போன்ற வினாக்களை வினவுவதன் மூலம் ஞாபகக் கற்றலைத் தூண்டலாம்.

ஞாபகக் கற்றலுக்கான கற்பித்தல், மதிப்பீடு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

- **நினைவுக்கு கொண்டுவருதல் (Recall) :**
  கற்ற ஒரு விடயத்தை மீள நினைவுக்குக் கொண்டு வரச் செய்தல்
  உ+ம் :கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னனின் பெயர் என்ன?
- **தாம் கற்ற விடயத்தை உணர்தல் (Recognise) :**
  உ+ம்: இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா ஆவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இணைத்தல் (Match):
  காவியங்கள் / அவற்றின் ஆசிரியர்கள்
- சரிபார்த்தல் (Verify):
  கூற்றுக்களைக் கொடுத்து சரி / பிழை கூறச் செய்தல்
  உ_+ம்: சீவகசிந்தாமணி 13 காண்டங்களை உடையது இது சரியா?
- மீளச் சொல்லச் செய்தல் (Repeat):
  கவிதை, கதை, கணித வாய்பாடு போன்றவற்றை கூறச் செய்தல்.

**பகுப்பாய்வுக்கான கற்றலுக்குக் கற்பித்தல்**

வெற்றிகரமான நுண்ணறிவுக்காக கற்பிக்கும் ஆசிரியர்கள் மனனக் கற்பித்தலோடு நின்று விடுவதில்லை. மாணவர் சிலர் மனனம் செய்து ஒப்புவிப்பதில் அக்கறை காட்டமாட்டார். பகுப்பாய்வுக் கற்றலுக்கான கற்பித்தலையே இவ்வாறான மாணவர் விரும்புவர். பகுப்பாய்வுக் கற்றலையும் சிந்தனையையும் வகுப்பறையில் விருத்திசெய்யப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் அவசியமாகும்.

- பகுப்பாய்வுக்கு ஒரு பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்தல் (Analytical).
  உதாரணமாக ஹிரோஷிமா மீது குண்டுமாரி பொழிய அமெரிக்க ஜனாதிபதி Truman ஏன் தீர்மானித்தார்?
  மந்திர தந்திரக் கதைகளை இன்றும் சிறுவர்கள் விரும்பிப் படிப்பதற்குக் காரணம் என்ன?

- மதிப்பீடு (Evaluate)
  ஒரு பிரச்சினையை அல்லது விடயத்தை மதிப்பீடு செய்தல்.
  உதாரணம்: கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையில் சிறுகதை இலக்கியம் வளர்ந்துள்ளதா?

- விளக்குதல் (Explain)
  ஏதாவது ஒரு விடயம் பற்றி விளக்கம் அளித்தல்.
  உதாரணம்: இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை பற்றி விளக்குதல்.
- ஒற்றுமை - வேற்றுமை (Compare & Contrast)
  இரு விடயங்களை ஒப்பிட்டு நோக்கும் போது அவற்றிடையே உள்ள ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் இனங்காணல்.
  உதாரணம்: பிரித்தானியா அரசியல் யாப்பினையும் இலங்கை அரசியல் யாப்பினையும் ஒப்பிட்டு நோக்குதல்.

- தீர்மானித்தல் (Judge)
  ஒரு விடயம் சரியானதா, பிழையானதா, நல்லதா, கெட்டதா எனத் தீர்மானிக்கும் ஆற்றலை இது குறிக்கின்றது.
  உதாரணம்: வாலியை இராமன் மறைந்து நின்று கொன்றது சரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கக் கற்றலுக்கான கற்பித்தல்**

மாணவர்களது ஆக்கச் சிந்தனை ஆற்றல்களை விருத்தி செய்வதும் ஊக்குவிப்பதும் வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தலின் பிரதான நோக்கமாகும். சுயகற்றலில் மாணவர் ஈடுபடும் பொழுதே மாணவரிடம் உச்சக் கற்றல் நடைபெறுகின்றது என்பது பல ஆய்வுகளின் முடிந்த முடிவாகும். "கற்றலை கற்கும் மாணவனிடம் விட்டு விடு" என்பது தற்காலப் புதிய கல்விச் சிந்தனையாகும். ஆசிரியர்கள் மாணவருக்கு எல்லாத் தகவல்களையும் திரட்டிக் கொடுப்பவராக இல்லாது மாணவர்கள் தாமே தேடி அறிய முற்படுவார்களெனின் அவர்களது ஆக்க சிந்தனை விருத்தியடையும். இதனையே புதிய கல்விச் சீர்திருத்தமும் வலியுறுத்துகின்றது. மாணவரிடையே கற்றலுக்கு கற்றலை மேம்படுத்தவேண்டுமென்பது புதிய கல்விச் சீர்த்திருத்தத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

ஆக்கக் கற்றலுக்கும் சிந்தனைக்குமான கற்பித்தல் மதிப்பீட்டு முறைகளுக்கான சில உதாரணங்கள் இங்கு தரப்படுகின்றன.

- **ஆக்குதல் (Create):**
  கவிதை புனைதல், கதை எழுதுதல், விஞ்ஞான பரிசோதனை

- **கண்டு பிடித்தல் (Invent):**
  உ+ம்: கணிதபாட பிரச்சினையொன்றினைத் தீர்ப்பதற்கு புதிய முறையைக் கண்டு பிடித்தல்

- **கண்டறிதல் (Explore):**
  உ+ம்: எரிமலையின் தன்மையை காண முற்படல், வாசித்துக் கிரகித்தலை விருத்திசெய்ய எவ்வாறு வேறு வேறு விதமாக வாசிக்கலாம் எனக் காணமுறபடல்.

- **கற்பனை செய்தல் (Imagine):**
  உ+ம்: எனக்கு வேறொரு நாட்டில் வாழ்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால்...

- **தொகுத்தல் (Synthesize):**
  வியட்னாம் யுத்தம், ஆப்கானிஸ்தான் யுத்தம், ஈராக் யுத்தம் பற்றிய அறிவைப் பயன்படுத்தி வேற்று நாட்டு மண்ணில் போர்செய்யும் போது பின்பற்றக்கூடிய போர் உத்திகள் சிலவற்றை முன்வைத்தல்.

ஆக்க சிந்தனை மூலம் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் மாணவரிடையே வளர்ச்சியடைகின்றது. மாணவர் தாம் எவ்வழியில் சிந்திக்க வேண்டும் என்பதைத் தாமே தீர்மானித்துக் கொள்கின்றனர்.

- **செயல்முறைக் கற்றலுக்கான கற்பித்தல் (Teaching for practical learning)**
  மாணவரில் பலர் செயல்மூலம் கற்பதையே விரும்புகின்றனர். தாம் கற்கும் விடயங்கள் தமது நாளாந்த கருமங்களுக்கு உதவும் என மாணவர் உணர்வாராயின் அவர்கள் அவற்றை விரும்பி கற்பார்கள்.

செயன்முறைக் கற்றலையும் சிந்தனையையும் கற்பிப்பதற்கும் கணிப்பிடுவதற்கும் சில உதாரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கற்றவற்றைச் செய்து பார்த்தல் (Put into practice):**
  உதாரணமாக கேக் எப்படிச் செய்வது எனக் கற்றுக்கொண்ட ஒருவர் அதனைச் செய்து பார்த்தல் பயனுள்ளது.
- **பயன்படுத்தல் (Use):**
  கற்றவற்றை நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தல் பயனுள்ளது.
- **அமுல்படுத்தல் (Implement):**
  தேர்தல் நடத்தும் முறை பற்றிக் கற்றபின்னர் வகுப்பறையில் மாதிரித் தேர்தல் ஒன்றை நடத்திப் பார்த்தல்
- **பிரயோகித்தல் (Apply):**
  மேடைப்பேச்சு எவ்வாறு நிகழ்த்தவேண்டும் எனக் கற்ற ஒருவர் அவ்வம்சங்களைப் பிரயோகித்து பேச்சொன்றை நிகழ்த்துதல்.

அறிவு, கிரகித்தல், பிரயோகித்தல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடுதல் என Bloom என்பவரின் ஏறுவரிசையிலான கற்பித்தல் நுட்பமுறைக்கும் வெற்றிகரமான நுண்ணறிவுக் கற்பித்தல்கோட்பாட்டிற்கும் முக்கிய வேறுபாடு உண்டு. Bloom ஏறுவரிசைப்படுத்திக் கூறும்போது பிரயோகித்தலை பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடுதலை விடக் குறைந்த மட்டமாகக் கருதினார். ஆனால் இப்புதிய கோட்பாட்டில் எல்லாத் திறன்களும் முக்கியம் தான். அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததென்பதை இப்புதிய கோட்பாடு வலியுறுத்துகின்றது.

Sternberg (1999) மேற்கொண்ட ஆய்வுகள் வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் பாரம்பரியக் கற்பித்தலை விட மிகுந்த பயனளித்துள்ளதென்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனவே மாணவர் படித்தவற்றை நினைவில் வைத்துக்கொள்வதற்கான கற்றலில் ஈடுபடல் வேண்டும். அவர்கள் பகுப்பாய்வுக் கற்றல், ஆக்கக் கற்றல், செயல்முறைக் கற்றல் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கான கற்பித்தல் வகுப்பறையில் நிகழுதல் அவசியம். இதன்மூலம் மாணவரது அடைவுமட்டத்தை உயர்த்த முடியுமெனத் திண்ணமாகக் கூறலாம்.

உசாத்துணை நூல்கள்:


- Robert J.Sternberg ; Raising the Achievement of all Students.
- Education Psychology Review.
- திரு. து. இராஜேந்திரன் - கல்விப்பீடம், S.O.U.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# V.S.TRADERS

NO. 120, NEW TOWN,
DIGANA,
RAJAWELLA.
TEL: 08-2376160

*With Best Compliments from:*

# Teshiba

## Video Vision

**Audio Video, VCD Vision**

No. 07, Co/op. Shopping Complex
New Town,
Digana.
Tel: 0777-912665



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உரிமை

திருமதி. மேனகா குணசேகரன்.
முதலாம் வருடம்

பள்ளி செல்லும் வயதில்
புத்தகச் சுமையை
சுமக்க வேண்டிய
எம் தோள்கள்
இன்று துன்பத்தின் சுமையை
சுமந்து செல்கின்றன.
துன்பத்தின் சுமையிலிருந்து
விடுபட வேண்டும் சுய உரிமை.

பேனா பிடிக்க வேண்டிய
எம் பிஞ்சு விரல்கள்
பணக்கார தனவான்களின்
சமையலறையில்
கரண்டியை பிடிக்கின்றன.

சிட்டுக் குருவியாய் சுதந்திர வானில்
சிறகடித்துப் பறக்க வேண்டிய
நாம் – சிறகுடைந்த
பறவைகளாய்
சிறையில் வாழ்கின்றோம்
இதில் யாரை
குற்றம் சொல்வது
புரியாத புதிராய்
இருக்கின்றது.....

ஆயிரம் கனவுகளுடன்
எம்மை ஈன்றெடுத்த
பெற்றோரின் கனவுகளெல்லாம்
நிறைவேறாமலே
புதைந்து போகின்றன.
ஏன்?
பாதுகாக்கப் பட வேண்டிய
உரிமைகள்
மீறப்படுவதனால்
எங்கும் குற்றச் செயல்கள்
தாண்டவமாடுவது
நியாயந்தானே.

வண்ண மலர்களாய்
பூத்துக் குலுங்க
வேண்டி எமது
வாழ்வை....
கருக்கி விடாமல்
எமது உரிமைகளை
மீட்டுத்தர வேண்டும்
வேண்டுகிறோம் இறைவனை...
மனிதத் தன்மையை
நிறை வேறும் வரை
காத்திருப்போம்
மனம் சகியாமல்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from:*

**YOU CAN JOIN TODAY.**

# SIP NIXON ACADEMY
# ABACUS BRAIN GYM
# &
# SPEED WRITING PROGRAM

**FOR CHILDREN**
**AGE 5 - 13 YEARS**

Your child can calculate faster than a calculator.
Present in 8 countries with more than 200,000 students
First people to introduce mental arithmetic program in Sri Lanka.
Highly qualified & Trained Instructors Limited students (12 per batch)

**Our Head Office:**
**No. 4, Park Road, 3rd Lane, Hatton.**
**Tel: 0777-861404**



**Branches:**
**6 1/1, Gampola Back Lane, Nawalapitiya.**

**No. 8, Keerapone Road, Gampola.**



*"Discover the Genius in your Child"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்



**J. கமலரூபி**
(முதலாம் வருடம்)

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளை வியந்து பாரதியார் அளித்த பாராட்டுரை என்றே இதனை நம்மில் பலர் கருதுகின்றோம். ஆனால் இவ்வாறு கருதுவது அக்கவியரசர் கருத்தை உள்ளவாறு உணர்ந்து கொண்டதாகாது. உண்மையை மிகைப்படுத்திக் கூறுவதே பாராட்டுரையாகும். இங்கு பாரதியார் கடுகளவு கூட கூட்டிக் கூறவில்லை. உண்மையை உள்ளபடியே கூறியிருக்கிறார். எனவே இவரின் உரையை எப்படிப் பாராட்டுரை என்பது.

தமிழ் நாட்டின் சிறப்பு மொழியின் வளம்; கலையின் அகலம்; கருத்தின் எழுச்சி; பண்பாட்டின் பெருமை; சமயங்களுக்குள் சமரசம் கண்ட பண்பு; தெய்வ வழிபாட்டில் கனிந்த உள்ளத்தில் ஆழம்; பிறரை வாழ வைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட பண்பு; இவையனைத்திற்கும் சிலப்பதிகாரம் ஓர் ஒப்பு உயர்வற்ற எடுத்துக்காட்டு. இதனாலேயே சிலப்பதிகாரம் கன்னித் தமிழின் அழகை எடுத்துக் காட்டும் மணியாரம் என்றும், படிப்பவர் நெஞ்சினை அள்ளிச் செல்லும் பண்புமிக்கது என்றும் சொல்லப்படுகிறது.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் அரச குலத்தில் பிறந்தவர். மக்களை ஆளும் தகுதி படைத்தவர். ஆனால் அவர் இளமையிலேயே மக்களை ஆளும் தகுதியை இழந்துவிட்டார். ஆண்டவன் அடிமையாக அவர் மாறினார். பேராற்றல் பெற்றார். அரசராய்ப் பிறந்து பின்பு அடிமையாய் மாறிய கவிஞர் போற்றிப் பாராட்டப்பட வேண்டியவர். எந்த அரசனுக்கு இத்தனிப் பேறு கிடைக்கும்? எவ்வகையிலும் இளங்கோவடிகளுக்கு நிகர் அவரே.

சிலப்பதிகாரத்திற்கு முன் தமிழ் மொழியில் தோன்றியிருப்பவை பெரும்பாலும் தனிப்பாடல்களே. இவற்றைப் பிற்காலப் புலவர்கள் பாடல்களின் அடிகளைக் கொண்டும் பாடல்களின் ஒப்பு உவமைகளைக் கொண்டும் தொகுத்துத் தந்திருக்கின்றனர். இத்தொகை நூல்கள் "சங்க இலக்கியம்" என்னும் பெயரால் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் உள்ள பாடல்கள் பல புலவர்களால் வெவ்வேறு காலங்களில் பாடப் பெற்றவை.

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன் தோன்றி ஒரே புலவரால் முற்றிலும் இயற்றப்பட்ட நூல்கள் இரண்டு. ஒன்று திருக்குறள், மற்றையது தொல்காப்பியம்.

ஆனால் சிலப்பதிகாரம் ஒரு காவியமாத் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் ஒரு பெரிய இயந்திரம் போன்றது. எனவே அந்தச் சிலப்பதிகாரமாகிய இயந்திரத்தை இயக்கிப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகார் நகரம் புகழ் வாய்ந்தது. போகம் பயப்பதில் தன்னிகரற்றது. அந்நகரில் மழையைப் போன்று வாரி வழங்கும் வள்ளல்களாய் மாநாய்க்கனும் மாசாத்துவனும் விளங்குகின்றனர். இவர்களுக்கு முறையே கண்ணகியும் கோவலனும் பிறந்து வளர்ந்தனர். கண்ணகி அழகில் திருமகள். கற்பின் பிறப்பிடம். கோவலனோ ஆணழகன். இவர்கள் இருவரையும் பெற்றோரும் உற்றோரும் சேர்த்து வைத்தனர். கணவன் மனைவியாக்கினர். இவற்றை மங்கல வாழ்த்துப் பாடல் என்ற பகுதியில் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகிறது.

இவையே இக்காப்பியத்தின் மூலப்பொருளாகும். இவற்றை நன்கு உணர்த்திய இளங்கோவடிகள் சில செய்திகளைக் குறிப்பாய்ப் புலப்படுத்தியிருக்கிறார்.

கண்ணகி எல்லாக் குணங்களும் நிரம்பியவள். எவ்வித குறைபாடும் அற்றவள். அவளுடைய கணவனோ இறப்பதற்கு முதல் நாள் தான் அவள் குணமேம்பாட்டை அறிந்தான். அவளும் அழகு மிக்கவள். ஆனால் இந்தக் குணங்களோ, அழகோ அவளுக்கு என்ன பயனைக் கொடுத்தது?

கோவலன் புகழ் படைத்தவன். புகார் நகரத்தாரால் போற்றப்பட்டவன். பணக்காரன். இருந்தும் என்ன பயன்? பிறரால் பாராட்டப்படும் பண்பான வாழ்க்கையை அவன் நடாத்தவில்லை. அவனுடைய அளவிலாத செல்வம் அவனுக்கு இன்பம் பயக்கவில்லை. கண்ணகி தன்னிச்சைப்படி நடக்கும் உரிமையற்று இருந்தாள். ஆனால் கோவலனோ வாழ்க்கையைக் கசக்கி பிழிந்து இன்பம் துய்க்க ஆசை கொண்டான். அதில் அவன் வெற்றி பெற்றானா? இல்லையே!

ஆன்றோர், கண்ணகி, பெற்றோர், மணமக்கள், பெண்கள், ஊரார் இவர்கள் அனைவரும் வாழ்க்கையில் பெரும் ஏமாற்றத்தையே கண்டனர். அவர்கள் விரும்பிய வண்ணம் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இக்காப்பியத்தில் பங்குபெறும் பாத்திரங்கள் இன்பத்தையே விழைத்தன. அதனை அடைய விரும்பின. ஆனால் எதிர் மாற்றமே நிகழ்ந்தது. அழிவை அடைந்தன. மிகச்சிறிய அளவில் பங்குபெறும் மாதவியும் கவுந்தியடிகளும் கூட மடிந்தார்கள்.

இளங்கோவடிகள் இயற்றியிருக்கும் காப்பியத்தில் துன்பத்தை அடையாதவர் ஒருவரும் இல்லை. அழிவை எய்தாதது எதுவும் இல்லை. பாத்திரங்கள் மாத்திரம் அழிவை அடையவில்லை. புகார் நகரம் கடலால் விழுங்கப் பெற்றது. மதுரை நகரம் நெருப்புக்கு இரையானது எனவே இக்காப்பியம் ஒரு பேரழிவின் சித்திரமாகும்.

சிலப்பதிகாரத்தைப் படித்தால் நமக்கு ஓர் உண்மை தோன்றும். இயற்கையோ, உண்மையோ அல்லது ஊழ்வினையோ அதனை எப்பெயரிட்டு அழைத்தாலும் என்ன? தனக்கென ஒரு வழி வகுத்துக் கொண்டிருக்கிறது. ஆன்றோர் கருத்துக்கோ, பெற்றோர் விருப்பத்துக்கோ, இளைஞர் ஆசைக்கோ, பெண்கள் வேண்டுகோளுக்கோ அல்லது உலகத்தார் எண்ணத்துக்கோ அது இசைந்து கொடுத்துத் தன் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. “மங்கல வாழ்த்துப் பாடலில்” குறிப்பிட்டவர்களால் கூட இந்த உலகப் போக்கை மாற்ற முடியாது. ஊழ்வினையைத் திசை திருப்ப முடியாது எனத் தெளிவாகக் கூறியிருக்கிறார்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எனவே, உலகப் போக்கை மாற்றியமைக்கும் செயல் என்றும் எவருக்கும் கூடாததாகவே இருக்கும். இது இவ்வுலக இருப்பிற்கும் இயக்கத்திற்கும் இன்றியமையாது இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பாகும். இதனைத் தெளிவாக எடுத்துக்காட்ட அடிகள் பாடுபட்டிருக்கிறார்.

எனவே, உலகின் தன்மையை உணர்த்தியதோடு நாம் எப்படி நல்வாழ்வு பெறக்கூடும் என்னும் வழியையும் வகுத்துக் காட்டியிருக்கிறார். நாம் நம் முயற்சிகளில் தோல்வியடைவதற்குக் காரணம் உலகப் போக்கை உணர்ந்து கொள்ளாமையேயாகும். மக்களுடைய இப்போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கே அடிகள் முயன்றார்.

ஒருவர் பெற்ற அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் பிறருக்கு வழி காட்டியாக இருக்கக் கூடும். ஆனால் அதுவே அவருடைய அனுபவமும் அறிவும் ஆகிவிடாது. பிறர் பெற்ற வெற்றிகள் நமக்கு ஊக்கமளிக்கலாம். ஆனால் அவை நம் வெற்றியாகமாட்டா.

எனவே, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் ஒரு படிப்பினைக் காப்பியமாகும்.

ம.வ.அ.க.அ.
தமிழ்மொழிப் பிரிவு
வருடம் - 2003





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

தரமான **VCD, DVD** பிரதிகளுக்கு
நாடவேண்டிய இடம்

# Arshan Vidio Vision
# &
# Yadu Communication

**NO. 04, GERANDI - ELLA,**
**RAMBODA.**
**Tel: 052-2259658**

*With Best Compliments from:*



# RAHIYA'S

**Bodhiraja Mawatha,**
**Kurunegala.**

*With Best Compliments from:*



# JASMINE TRADERS

**No. 50, Perakumba Street,**
**Kurunegala.**
**Tel : 037-2226854**
**Fax : 037-5264265**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மத்திய மாகாண கல்வி அமைச்சர்
மங்கள குத்துவிளக்கேற்றும் போது



எமது ஆசிரியர் குழுவினர் நிலைய கீதம்
இசைக்கும் போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



# Arul Jewellery

Dealers in 22kt Gold jewels
Orders undertaken will be duly prompted

**No. 131/A, Main Street,**
**Matale.**
**(Beside Police Station)**
**Tel: 078-5175160**

*With Best Compliments from:*

# RAJA B.M.C

All Kind of Building Materials Manufacturer & Supplier


சகல விதமான கட்டிடப் பொருட்கள்
உற்பத்தியாளரும், விநியோகஸ்தரும்

**No. 63/1, Rattota Road,**
**(Edirmanasingham Road)**
**Matale.**
**Tel: 066-2231869**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரேஷ்ட விரிவுரையாளரினால் மத்திய மாகாண கல்வி அமைச்சருக்கு ஞாபகார்த்த பரிசு வழங்கிய போது



பேராசிரியர் சோ. சந்திரசேகரன் மங்கள குத்துவிளக்கேற்றும் போது (அருகில் சிரேஷ்ட விரிவுரையாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*



# SARAVANAS

## JEWEL HOUSE

*Dealers in 22Kt, Jewellery*

**105, Bazaar Street,**
**Chilaw.**
**Tel: 032-2221478 / 074-860235**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமகால கணித ஆசிரியர் ஆற்றுகையும் அது தொடர்பான பிரச்சினைகளும்



V. சுகுமார்
(விடுகை வருடம்)

கிரேக்க தத்துவ ஞானியின் மகுட வாசகங்களில் ஒன்று "கணிதம் தெரியாதோன் இப்பல்கலைக்கழகத்தில் நுழையாதே" இது கணிதத்தின் முக்கியத்துவத்தையும் தேவையையும் குறிக்கின்றது. கணித அறிவு சகலருக்கும் தேவையான அறிவு. நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் அனுபவ ரீதியாக உணரும் அறிவு. இது அறிஞர்களாலும் பழமொழிகளாலும் அறிவுறுத்தப்பட்டுள்ளதையும் நாம் கண்கூடாக அறியலாம். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" இதில் எழுத்திற்கு முன்னதாக எண்ணெனக் குறிப்பிடுவதால் கணிதத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது என்பதைக் காணலாம். "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்பது கூட எதிலும் கணிப்பும், அளவும் தேவை என்பதையே வலியுறுத்துகின்றது.

திருவள்ளுவர் கூட "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப - இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற குறளின் மூலம் கணிதத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருப்பது கணிதம் இன்றியமையாத முக்கியமான ஒன்று எனபது காலம் காலமாக கருத்திற் கொள்ளப்படுவதாகும்.

தற்காலத்தில் கூட சாதாரணமாக கடையில் பொருட்கள் கொள்வனவு செய்யும் வரவு செலவுக் கணக்குகளில் இருந்து பாரிய பொறியியற் செயற்றிட்டங்கள் வரை கணித அறிவு தேவைப்படுகின்றது. ஆனால் தேவைப்படும் அறிவின் மட்டமும் பிரயோக முறையும் வேறுபாடு அடைகிறதேயன்றி தேவையின் அத்தியாவசியம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்றுதான். எனவே கணித அறிவு அவரவர் தேவைக்கேற்ப சாதாரண குடிமகன் தொடக்கம் பாரிய செயற்றிட்டங்களை நிறைவேற்றும் விஞ்ஞானிகள் வரை தேவைப்படும் அறிவாகும்.

இதனால் பாடசாலைக் கல்வி முறையில், கணித அறிவு எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டிய அவசியத்தைக் கல்வியியலாளர்கள் உணர்ந்தார்கள். இதன்போது கணித அறிவு வழங்குவதில் கல்வியியலாளர்கள் இரண்டு பிரச்சினைகளுக்கு ஏற்ப தொழிற்பட வேண்டியவர்களாயினர். அப்பிரச்சினைகள் பின்வருமாறு.

1. கணிதத்தில் எல்லோரும் பாண்டித்தியம் அடைய முடியாது.
2. கணித அறிவு ஒவ்வொருவருக்கும் அவரவர் ஆற்றல் மட்டம் தேவைகளுக்கு ஏற்ப எங்ஙனம் வழங்குதல்.

அதாவது ஒன்று வாழ்க்கைக்கான கணித அறிவு. மற்றையது அறிவிற்கான கணிதம் என்பனவாகும். அறிவிற்கான கணிதம் வழங்குவதில் பாரிய பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவில்லை. ஏனெனில் அறிவைத் தேடுபவர்கள் நுண்மதி கூடியவர்களாகவே காணப்பட்டனர். ஆனால் வாழ்க்கைக்கான கணிதம் வழங்குவதில்தான் சிக்கல்களும் பிரச்சனைகளும் ஏற்படலாயிற்று. ஏனெனில் சகல மட்டங்களில் உள்ளவர்களுக்கும் கணித அறிவு வழங்க வேண்டிய செயற்பாட்டில் அறிவு பெற வேண்டியவரின் கொள்ளளவு, விவேகம், நுண்மதி என்பன பெரும் பங்கை வகிக்கும் முக்கிய காரணிகளாகும். இக்காரணிகளுக்கமையக் கல்வியியலாளர்கள் கற்பிக்கும் யுக்திகளையும் கற்பிக்கும் உபகரணங்களையும் அறிமுகப்படுத்தினார். இவ் வெவ்வேறு கற்பிக்கும் யுக்திகளும், பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களும் ஒவ்வொருவரின் அடைவு மட்டத்தை உயர்த்தும் என்பதை ஆய்வுகள் மூலம் கண்டறிந்தனர்.

முக்கியமான கற்பிக்கும் யுக்திகள்.

1. விரிவுரை முறை
2. கலந்துரையாடல் முறை
3. குழு முறை
4. செயற்பாடுகள்

கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடு, செயன்முறைக் கற்பித்தலில் பெரும்பங்காக வகிக்கும். செயற்பாட்டுக் கற்பித்தலில் உபகரணங்கள், வினா விடை, பிரச்சினைகள், கணித விளையாட்டுக்கள் என்பன இடம்பெறும். செயற்பாட்டுக் கற்பித்தல் முறையில் உபகரணங்களின் தொழிற்பாடும், கற்போன் செயற்பாடுகளை அனுபவபூர்வமாக செய்யும் பொழுது அடிப்படைகளைத் தெளிவாக்கிக் கொள்ளவும், ஞாபகத்தில் வைத்திருக்கவும் வழிவகுக்கும். அதிகுறைந்த நுண்மதி உடையவர்களுக்கு செயற்பாட்டுக் கற்பித்தல் முறை நல்ல பயனை அளிக்கும்.

மேற்கத்தைய நாடுகளில் மாணவ மட்டம் இனங்காணப்பட்டு கல்வி புகட்டும் சந்தர்ப்பங்கள் உண்டு. அதற்கேற்ப கலைத்திட்டங்கள், கற்கை நெறிகள் என்பன அமைக்கப் பெற்று அவ்வவ் மட்டங்களுக்கு ஏற்ப மாணவர்கள் நெறிப்படுத்தப்படுவர். இலங்கையைப் பொறுத்தவரை இக்கருத்துக்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் பூரணப்படுத்துவதற்கும், கருத்தரங்குகளில் முன்மொழிவதற்கும் பிரயோசனப்படுகின்றதே ஒழியச் செயற்பாட்டில் இல்லை. இலங்கையின் பாடசாலைக் கல்வி முறையில் எல்லா மாணவருக்கும் ஒரே பொதுவான கலைத்திட்டம், செயற்பாடுகள் என்ற அடிப்படைதான் பின்பற்றப்படுகின்றது. இந்நடைமுறையில் அவரவர் தமது ஆற்றல், பெற்றோர் நிர்ப்பந்தம் என்பவற்றிற்கு ஏற்ப தொடருவர் அல்லது இடையில் விலகிக் கொள்வர்.

கல்வியியலாளர்களின் பாடசாலைத் தரிசனத்தின் போதும்,கருத்தரங்குகளின் போதும் மாணவனை இனங்கண்டு கற்பிக்கும் முறையை வற்புறுத்துவார்கள். இவ்விடத்தில் இவர்களின் இரண்டும் கெண்டான் நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்களை அவர்கள் திறமைகளுக்கு ஏற்ப வெவ்வேறு வகுப்புகளில் வெவ்வேறு ஆசிரியரைக் கொண்டு கற்பிக்க அனுமதிக்கமாட்டார்கள். அத்தருணத்தில் அவர்கள் உளவியல் தாக்கம் மாணவருக்கும் ஆசிரியருக்கும் ஏற்படும் என்பர். அவ்வாறாயின் எங்ஙனம் இனங்கண்டு ஒரே வகுப்பில் கற்பிக்கமுடியும், உளத்தாக்கம் ஏற்படாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் என்பது தனியாள் வேறுபாடு. கற்பித்தலும் அதற்கேற்ப அமைய வேண்டும். பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டால் தனியாள் வேறுபாட்டிற்கமைய வகுப்பறைகள், கற்பித்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்த இயலாவிடினும் குறித்த மட்டத்தினரையாவது இனங்கண்டு அவர்களுக்கான வெவ்வேறு குழு மட்டக் கற்பித்தலைச் செய்தல் கூட நல்ல பயன்பாட்டினைப் பெறமுடியும்.

பரீட்சைகளில் கணித பாடத்தின் அடைவு மட்டம் ஏனைய பாடங்களிலும் மிகக் குறைவாகக் காணபபடுகின்றது என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அடைவு மட்டம் குறைவதால் பாடசாலைகளில் கணிதம் கற்பிக்கப்படுவதில்லையா, மாணவன் கற்பதில்லையா, என்ற வினாக்களே முதலில் எழும். ஆனால் கணித அடைவுமட்டம் குறைவதற்கான காரணத்தை நீங்கள் தர்க்க யதார்த்தத்தை அறிவதற்கு நடைமுறையில் உள்ள செயற்பாடுகள், வழமைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

1. கணித அறிவு விருத்தி செய்வதற்குக் கணிதப் பயிற்சிகள் செய்ய வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு வெவ்வேறு விதமான பயிற்சிகள், பிரச்சினைகளுக்கு முடிவுகள் காணப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கணித அறிவில் தெளிவு காணப்படும்.

2. சிறந்த கணித பாடப் புத்தகங்களில் பயிற்சிகள் தரப்படுகின்றன. இப்பயிற்சிகள் அறிவுசார், பிரயோகம்சார், என்ற அடிப்படையில் இனங் காணப்பட்டு அவை ஆரம்ப, இடை, உயர்மட்டம் என்று மூன்று தரங்களில் வகுக்கப்பட்டிருக்கும். இப்பயிற்சிகளும் அம்மட்டங்களுக்கு ஏற்ப இலகுவானதாகவும் கடினமானதாகவும் அமையும்.

3. அனேகமாக வகுப்பறைக் கற்பித்தலில் பல்வேறு காரணிகளால் அறிவுசார் பயிற்சிகளுடன் பாடங்கள் முற்றுப்பெற்று விடும்.

4. ஒவ்வொரு வகுப்பறைகளிலும் சகல மாணவர்களினதும் பயிற்சிக் கொப்பிகள் திருத்தப்பட வேண்டும். ஆனால் இது கூட மாணவர் விருப்பாகவே தொழிற்படுகின்றது.

5. ஓரளவிற்குப் பிரயோகம் சார் பயிற்சிகளுக்குத் தீர்வு கண்டால், குறித்த கணித எண்ணக் கருவை மாணவன் அடையமுடியும். அறிவு சார் பயிற்சிகள் எண்ணக்கரு வளர்வதற்கு அடிப்படையாக அமையுமே ஒழிய அக்குறித்த எண்ணக்கருவைப் பூரணமாக அடைய வழிகோலாது.

கணித உருப்படிகள் ஒன்றன்மேல் ஒன்றாகக் கட்டியெழுப்பப்படுவதாகும். அநேகமான உயர்மட்டக் கணித உருப்படிகள் அதற்கு நேரடிக் குறைந்த மட்ட உருப்படியின் பிரயோகமாக அமையும். அல்லது ஒரு கணித உருப்படியின் பிரயோகம் அடுத்த மட்ட உருப்படியின் ஆரம்பமாக அமையும். இதனால் அறிவுசார் பயிற்சிகளுக்கு மாத்திரம் தீர்வு கண்டு கணிதம் கற்றவர்களுக்கு அந்த உருப்படியின் எண்ணக்கரு பூரணமாக அடைந்திருக்க முடியாது. இதனால் அடுத்த மட்ட உருப்படியைத் தெளிவாக்குவதிலும், புரிவதிலும் இடர்பாடுகள் உண்டாவதனால் கணிதம் கற்றல் ஒரு தொடர் நிகழ்வாக அமையாது போகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பல சந்தர்ப்பங்களில் மாணவ குறைபாடாகத் தோன்றலாம். ஆனால் இது ஆசிரிய கற்பித்தற் குறைபாடாகவே அமையும்.

இலங்கையின் கல்விமுறை, பல்கலைக்கழகத் தெரிவு முறை வெளி உலகின் வேலை வாய்ப்புகள் என்பன கூடக் கணிதம் கற்பித்தலில் அடைவு மட்டத்தினைத் தீர்மானிக்கும் முக்கியமான காரணிகளாகும்.

"குருடனால் வழிகாட்ட முடியாது" என்பதற்கிணங்க ஒரு பாடத்தில் தெளிவு விடய ஞானமின்றி இருக்கும் ஒருவனால் இன்னொருவனுக்கு பாடத்தின் தெளிவு ஏற்படுத்திவிட முடியாது. இலங்கையின் பல்கலைக்கழக அனுமதியில் அதிகூடிய புள்ளிகள் பெறுபவர் பொறியியற்பீடம் மற்றும் ஏனைய பீடங்களுக்கு சென்று விடுவர். அடுத்த மட்டத்தில் உள்ளோர் பட்டயக் கணக்காளர் போன்ற வெளிநாட்டுக் கணக்கியற் கற்கை நெறிகளுக்குச் சென்றுவிடுவர். இதேபோல படிப்படியாக அவரவர் தகுதிக்கும், தெரிவிற்கும் ஏற்ப உள்ள வேலை வாய்ப்பொழுங்கின்படி ஆசிரியற்றொழில் பெறுவர்.

இலங்கையைப் பொறுத்தவரை புள்ளி அடிப்படையின் முன்னுரிமைப்படி நியமனங்கள் பல்கலைக்கழகத் தெரிவுகள் இடம்பெறுகின்றதே ஒழிய, ஒரு தொழில் விருப்பின் பேரிலோ அன்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் அதற்குரிய தெரிவிலிருந்து விலகி, விருப்பின் பேரில் குறைந்த புள்ளிகளுடன் தெரிவாகும் கற்கை நெறிகளை நாடுவதும் அரிது. இக்கருத்துக்களை உங்கள் சிந்தனைக்கு தந்து இதன் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் நீங்கள் அனுமானிக்கும் சந்தர்ப்பத்தை உங்களுக்குத் தருகிறேன்.

இக்கருத்து பின்தங்கிய மாவட்டங்களிற்கான சலுகை முறைத் தெரிவிற்கு மிகப் பொருத்தமானதாகும். குறைந்த புள்ளிகள் அவர்களின் அடைவுமட்டத்தின் குறைவையே காட்டி நிற்கும். எனவே குறைந்த புள்ளிகளுடன் கற்கை நெறிகளுக்கும், நியமனங்களிற்கும் தெரிவு செய்யப்படுபவர்கள் காட்சி நிலையில் தான் இருப்பர். அவர்கள் கருத்து நிலையை அடைந்திருக்கமாட்டார்கள். கருத்து நிலையடையாதவர் புத்தூக்கங்கள், புதிய செயற்பாடுகள் என்பவற்றைத் திட்டமிடவோ, நெறிப்படுத்தவோ இயலாது. இவர்களிடமிருந்து புதிய கருத்துக்கள் செயல்களை எதிர்பார்க்கவும் முடியாது. இவர்களின வழிகாட்டல் குறிப்பாகச் சொன்னால் "ஒரு கண் குருடனுக்கு இருகண் குருடன் வழிகாட்டுவது" போலாகும். ஏனெனில் ஒரு ஆசிரியனின் தொழில் ஒப்புவிப்பது போல் கற்பித்தல் மாத்திரமல்ல ஒவ்வொரு மாணவனிடமும் இருக்கும் திறன்களை இனம்கண்டு அவற்றிற்கேற்ப ஊக்கங்கள் கொடுத்து அத்திறன்களை வெளிக்கொணர வேண்டும். காட்சி நிலையில் இருக்கும் ஒரு கணித ஆசிரியனால் ஒருமாணவனை காட்சிநிலைக்கு ஊக்குவிக்க முடியுமே ஒழிய அம்மாணவனைக் கருத்து நிலைக்கு உயர்த்த முடியாது. இதனால் திறமையான மாணவர்களின் செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு அவர்களால் உருவாக்கப்படும் சமுதாயம் படிப்படியாக ஒரு நச்சுவட்டத்தினுள் அமைந்துவிடும்.

கணிதம் நிச்சயமானதும், பழுதற்ற திருத்தமான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நடவடிக்கைகள் செயற்பாடுகளில் நிச்சயமான, திருத்தமான முடிவுகள் பெறவேண்டுமாயின் அவை கணிதத்துடன் தொடர்பு பெற வேண்டும். புள்ளிவிபரவியல் ஒரு கணிதத் தொடர்பாடலை சகல நெறிகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளிலும் ஏற்படுத்தும். அத்துடன் பொருளியல், கணினி, ஜோதிடம் போன்றவற்றினால் எதிர்வுகளை மிகவும் துல்லியமாகவும், திருத்தமாகவும் கூறலாம் என்பது கண்கூடு. ஆனால் அவ்வெதிர்வு கூறல்களின் நம்பகத்தன்மை, மறுவற்ற திருத்த தன்மை என்பன கணிதப் பிரயோக மட்டத்தில் தங்கியிருககும். இப்படியான எதிர்வுகள் கூறத் தேவையான கணித அறிவு காட்சி நிலையில் இருந்து பெற முடியாது, அதற்கு கருத்து நிலை தேவை.

எனவே கணிதம் பொய்த்தால் எதிர்வுகள் பொய்க்கும். இதனாற்றான் ஜோதிடம் முதற்கொண்டு புள்ளிவிபர முன்னெதிர்வுகள் பொய்யாகின்றன.

கணித பாடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் யாவை என்பதைச் சிந்திப்போம். கணித ஆசிரியர்கள் எந்தவிதமான சலுகைகளுமற்ற திறமை அடிப்படையில் நியமித்தல், அவர்களுக்கு வழங்க வேண்டிய பயிற்சிகளை ஒழுங்காக வழங்கல். கணித ஆசிரியர்கள் சுயமாக முன்னேறுவதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கல், கணிதம் கற்பிப்போரைப் பொறுத்தளவில் சலுகைகளற்ற திறமையடிப்படை என்பதைக் கருத்திற் கொண்டால் கணிதம் வளரும்.

"கணிதம் மெய்த்தால் எதிர்வுகள் மெய்க்கும்
எதிர்வுகள் மெய்த்தால் மக்கள் சுபீட்சமடைவர்"

நன்றி.
மனிதவள அபிவிருத்தி, கல்வி,
பண்பாட்டு அலுவல்கள்
அமைச்சின் -கூர்மதி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# New Chandhiraa Mill

*General Merchants & Grinders*

No. 396, Nuwara Eliya Road,
Pussellawa.



*With Best Compliments from*


# Markwin Traders

**Wholesale & Retail Stationery, Fancy Goods & School Items Etc.**

NO. 241,P, KEYZER STREET,
COLOMBO - 11
TEL: 011-4720386




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரிவுரையாளர். வை.கா. சிவபிரகாசம் அவர்களுக்கு கல்வி அமைச்சர் ஞாபக பரிசு வழங்கும் போது




எமது ஆசிரிய மாணவர்கள் நாடகத்தில் பங்குபற்றிய வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# Orient Video Center

**No. 55, Balagolla,
Kengalla**

*With Best Compliments from:*

Importers and Dealers in Hardware,
Plywood, Formica, Aluminium Extrusions Etc.
Authorised Distributors for "ALUMEX" Aluminium Extrusions

# KANDY HARDWARE STORES

**No. 359,D.S.Senanayaka Veediya,
Kandy.
Tel : 018-2203757, 2233195, 2222598
Fax : 081-2233195**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி நிறுவகம், கண்டி மத்திய நிலையம்
# கல்விமாணிப் பட்டக் கற்கைநெறி
## 1999 - 2002 (முதலாவது குழுவினர்) பட்டம் பெற்றோர்.

இரண்டாம் வகுப்பு - மேல்நிலை

| தொடர் இலக்கம் | முழுப்பெயர் |
|---|---|
| 01 | அப்துல் ரஸீட் மொகமட் தௌபிக் |
| 02 | நிர்மலாதேவி சதாசிவம் |
| 03 | ஷகிலா ராஜசேகர் |
| 04 | நடராசா முரளிதரன் |
| 05 | மொகமட் மொஹிதீன் மொகமட் முஷாரப் |
| 06 | வனஜா தமிழ்ச்செல்வன் |
| 07 | வெங்கடாசலம் அமுதவல்லி |
| 08 | மொஹமது காசிம் இசாக்லெப்பை |

இரண்டாம் வகுப்பு - கீழ்நிலை

| | |
|---|---|
| 09 | அமிர் சுல்தான் மொகமட் ஜாபிர் |
| 10 | பெருமாள் சசிகாந்தன் |
| 11 | கருப்பையா புஸ்பராணி |
| 12 | ஜெய்னுல் ஆப்தீன் பசால் முகமட் |
| 13 | அப்துல் மஜீத் பவ்சுல் வஸீனா |
| 14 | புஸ்பலோஜினி சதாசக்திநாதன் |
| 15 | மொகமட் இப்ராஹிம் பஸீரா |
| 16 | இராமலிங்கம்பிள்ளை மலர்மணி |
| 17 | மீரா மொஹிதீன் சாயிபு நூறுல் ஜனிய்யா |
| 18 | சுந்தரராஜ் ரவிச்சந்திரன் |
| 19 | அமுதசுரபி கிருஷ்ணசாமி |
| 20 | மொகமட் கௌஸ் நயிமுல்லா |
| 21 | சிவராஜா ஷாமினி கிருபமலர் |
| 22 | சீனி மொகமட் அப்துல் ஜிப்ரி |
| 23 | லூட்ஸ் மரியா டிமோல்டா பாலசுப்ரமணியம் |
| 24 | செய்னுல் ஆப்தீன் ஸீனா யெஸ்மின் |
| 25 | அப்துல் அஸீஸ் சித்தி வஸீரா உம்மா |
| 26 | மொகமட் கரீம் நூறுல் ரிபானா |
| 27 | ஹயாத்து மொகமட் கலீல் |
| 28 | செல்லத்துரை யோகராணி |
| 29 | மரிக்கார்தம்பி பாட்சா ரிஸ்வி ஹபிலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 30 | சைனுல் ஆப்தீன் முகமட் நவாஸ் |
| 31 | சுலோஜனா சுரேந்திரநாதன் |
| 32 | நூர் மொஹமட் மொஹமட் இஷ்ஹாக் |
| 33 | நௌசாத் நசூஹா |
| 34 | கோமஸ் ஞானப்பிரகாசம் |
| 35 | சேகு மொகமட் குரைசா |
| 36 | மொகமட் நிசாம் ரொஸானா |
| 37 | தாவுத் லெப்பே அப்துல் மஜீத் |
| 38 | மொகமட் நிசார் பாத்திமா நிலூபா |
| 39 | மொகமட் சுபைட் ஸஹ்ரத்துல் பாரிஹா |
| 40 | சீனியா மொகமட் |
| 41 | சுகிர்தகலா சிவலோகநாதன் |
| 42 | பொன்னையா சந்திரன் |
| 43 | சுப்ரமணியம் ஜெயகாந்தன் |
| 44 | முத்துக்கருப்பன் சம்பந்தர் |
| 45 | பெருமாள் உமாதேவி |
| 46 | மீதின் அப்துல் சலாம் |
| 47 | முனியாண்டி மணிவேலு |
| 48 | செய்த்துன்பீபி ஸகரியா |
| 49 | ஜானகி பாலசுப்ரமணியம் |
| 50 | மொகமட் ஹாசிம் சித்தி இஷா |
| 51 | மௌறூப் ஹைரூன்நிசா |
| 52 | வடமலை உதயகுமார் |
| 53 | முத்தையா சிங்காரவேலு நாகேஸ்வரி |
| 54 | ராஜேஸ்வரி கோபாலகிருஷ்ணன் |
| 55 | நடேசன் துரைசிங்கம் |
| 56 | சூசைப்பிள்ளை அகிலா |
| 57 | மொஹிதீன் கப்புடையார் நஜீபுல்லா |

சாதாரண சித்தி

| | |
|---|---|
| 58 | நல்லு லோகேஸ்வரன் |
| 59 | வெங்கடாசலம் பங்கயச்செல்வி |
| 60 | சித்திரவேல் தம்பிராசா விஜயலட்சுமி |
| 61 | மொகமட் லியாஸ் பிர்தௌசியா |
| 62 | மொகமட் ரவூப் சித்தி பருசியா |
| 63 | அப்துல் மஜிட் மொகமட் நஸீர் |
| 64 | இராமு பத்மாவதி |
| 65 | ஆறுமுகம் சாமுவேல் ஆனந்தகுமார் |
| 66 | கருப்பையா சந்திரலேகா |
| 67 | மொகமட் நெய்னா பவ்சுல் நஸீரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 68 | அப்துல் காதர் சித்தி பதீலா உம்மா |
| 69 | இராமலிங்கம்பிள்ளை தமிழ்ச்செல்வம்பிள்ளை |
| 70 | ஜெயராணி சுந்தரமணி |
| 71 | கதிரவேல் முத்தையா ராஜேந்திரன் |
| 72 | இப்ராஹிம் மொகமட் சாதிக் |
| 73 | நந்தினி கோவிந்தராஜா |
| 74 | ஹபீபு மொகமட் தஸ்லீம் |
| 75 | மொகமட் சலீம் மொகமட் நௌபர் |
| 76 | அப்துல் ரஹீம் பாத்திமா நிரோசா |
| 77 | லோகேஸ்வரி அழகக்கோன் |
| 78 | செல்லத்துரை பாலசுப்பிரமணியம் |
| 79 | செல்வராஜ் ஜயந்தி |
| 80 | ஜெய்னுல் ஆப்தீன் சித்தி நஸீரா |
| 81 | இந்துமதி நிற்குணநாதன் |
| 82 | அருணாசலம் இராசம்மா |
| 83 | லலிதா தர்மலிங்கம் |
| 84 | மஸ்தலி மன்சூர் அலி |
| 85 | சரஸ்வதி முருகையா |
| 86 | கருப்பையா பாலச்சந்திரன் |
| 87 | வெள்ளதுரை தேவதாஸ் |
| 88 | வேலு மகேஸ்வரி |
| 89 | மொகமட் அப்துல் காதர் மொகமட் பரீட் |
| 90 | பிரபாங்கனி அருட்செல்வம் |
| 91 | கனகமணி கந்தசாமி |
| 92 | அப்துல் ரகுமான் பாத்திமா ஜெஸ்மி |
| 93 | அப்துல் லத்தீப் சௌத்துன் நிசா |
| 94 | மொகமட் ஸயின் சிஹானா பேகம் |
| 95 | அப்துல் கபூர் மெஹ்ருன் நியாரா |
| 96 | கருப்பையா விஜயகுமாரி |
| 97 | கமால்டீன் மின்னதுல் பௌஸியா |
| 98 | விஜயகுமாரி ராஜராம் |
| 99 | பௌசுல் ஸாஹினா ஹலீல்தீன் |
| 100 | இப்ராஹீம் லெப்பை சித்தி நிபாயா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கப்பதக்கம் வழங்கல்

1999 - 2002 கல்வியாண்டில்
அகில இலங்கையிலும் கல்விமாணிப்பட்டக் கற்கைநெறிப்
பரீட்சையில் (சிங்களம் + தமிழ்) மிகக்கூடுதலான
புள்ளிகளைப் பெற்று

**கலாநிதி. C.W.W. கன்னங்கர நினைவின் பேரிலான**
**தங்கப் பதக்கம் பெற்றவர்.**



**மொஹமது காசிம் இஷாக் லெப்பை**
(குளி/ மடிகே அனுக்கன மு.ம.வி,, சுனந்தபுர, ஹெட்டிபொல)

## விசேட சான்றுப்பத்திரம் பெற்றோர்

1999 - 2002

### கல்விமாணி கற்கைநெறி (ஆரம்ப கல்வி)

- லூட்ஸ் மரியா டிமோல்டா பாலசுப்பிரமணியம்
- கோமஸ் ஞானபிரகாசம்
- மொஹமட் மொஹிதீன் மொஹமட் முஷாரப்
- வனஜா தமிழ்ச்செல்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதய சூரியன்



ந. முன்னைநாதன்
(முதலாம் வருடம்)

ஓ....இளைஞனே....
கண்ணீர் ஆறுகளை
கைது செய்
வாலிப உரசலை
விலக்கி வை
உன்...
இதயம் இரும்பானால்
அந்த இமயம் கூட
இடம் பெயரும்

வாழ்வின்
கசப்பான பக்கங்களை
கிழித்தெறிந்து
வசந்தத்தை நோக்கி
வீர நடை போடு
பாரதி கனவு கண்ட
பாரினை உருவாக்கிட
சிகர வாசல்களின்
சிறைகளை உடை

தோழா!
தியாகத்தின் திரு உருவாய்
துயர் துடைக்க புறப்படு
தூங்கிக் கொண்டிருக்கும்
துடுப்புக்களை
தட்டியெழுப்பிடு
ஏனெனில்
நாளைய உலகில்
நீ ஒரு
உதய சூரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



# Gayathiry Stores

**No. 46, New Town,**
**Digana.**

*With Best Compliments from:*

**K.ARUNAIS**
(Proprietor)



**K.SUDARSON**
(Proprietor)

## NEW VELVET CENTER

Dealers in Leather, Rexines,
Velvet & Carpet Etc.

**No. 36/1, New Town,**
**Digana,**
**Rajawella.**
**Tel: 077-3303775**

## YOUTH SHOE MART

Dealers in imported & Local Footwear
for Ladies, Gents & kiddies Etc.

**No.36, New Town,**
**Digana,**
**Rajawella.**
**Tel: 077-3274532**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரங்க நாடகமும் நாமும்



**A.S.M. பீலிக்ஸ்**
(விடுகை வருடம்)

வாழ்க்கையிலும் அது தருகின்ற அனுபவங்களிலும் இன்றியமையாதவை; எவையென்றும், தவிர்க்கக் கூடியவை; எவையென்றும் பகுத்துக் காண்கின்ற திறன் பொதுவாக சாதாரண மனிதர்களிடத்திலும் உள்ளதாகும். ஆனால் கலைஞனோ இன்றியமையாதவைகளையும் மனித அடித்தளங்களையும் நாடிச் செல்லும் பண்பையும் திறனையும் பெற்றிருக்கின்றான். எனவே வாழ்வின் நடப்பியலைக் கவித்துவத்தின் ஆழத்தில் அளவோடு தேர்ந்து பார்க்கும் அவனது திறன்கள் கலைகளாக மாறின.

ஒரு கலைப்படைப்பின் சுவையென்பது தூலமாக அவை தரும் காட்சிகள், கேள்விகளுக்குரிய பொருட்களை மட்டும் கொண்ட கண்கூடான செவிவழியான அனுபவத்தை தாண்டி புலன் உணர்வு, அறிவு ஆளுமை எனப் பல்வேறு நிலைகளில் விரிந்து நிற்பதாகும். உயர்ந்த உள்ளங்கள், உன்னதமான தூய்மை ஆகியவை கலைப்படைப்பின் பயனும் பண்புமாகும்.

பொதுவாக கலைகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

- கலைகள்
  - நுண்கலைகள் (Fine Arts)
    - காட்சிக் கலைகள்
      - தளம் (Space)
        - சிற்பம்
        - ஓவியம்
    - கேள்விக் கலைகள்
      - காலம் (Time)
        - கவிதை இலக்கியம்
        - இசை
    - நிகழ்வுக் கலைகள்
      - காலம் + தளம்
        - நடனம்
        - நாடகம்
  - பயன்கலைகள் (Applied Arts)

எனவே நாடகக் கலையையும் கலைகளில் ஒன்றாக கொள்ள முடியும். இந்நாடக கலையினுள் சிறப்பாக தளம், காலம் இரண்டும் அடித்தளங்களாகக் காணப்படுகிறது. இது ஏனைய கலைகளையும் உள்வாங்கி பொலிவு பெற்று, சாதாரண மனிதர்களையும் இலாவகமாக கவர்ந்து முதன்மை பெற்று நிற்கும்; ஒரு கலையாக நாடகம் திகழ்கிறது; என்றால் மிகையல்ல.

நாடகம் என்பதை நாடு + அகம் எனவும் பிரிப்பார்கள். அகம் நாடுகின்ற உணர்வுகளுக்கு சரியான ஆற்றுப்படுத்தலை வழங்கக்கூடிய ஒன்றாக இக்கலை காணப்பட்டதால் இதனை நாடகம் என வரையறுத்தார்கள் போலும்.

கலைப்படைப்புக்கள் காண்பவர்களை அல்லது கேட்பவர்களை புலன்வழிதாக்கி அவர்கள் மனதினுள் அவர்களின் மன வளர்ச்சிக்கேற்ற அளவு, கலைஞன் கண்ட, அல்லது கலைஞனது காட்சிகளை மீறிய சுய உணர்வுகளாகவும், படிமங்களாகவும், கருத்துக்களாகவும், விரிந்து செல்லும். கருத்துக்கள் என்ற நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவநிலையிலிருந்து கண்கூடான புறவடிவம் பெற்று அவ்வடிவம் மீண்டும் புலன்வழி அருவநிலைக்கு மாற்றப்படுதல் என்னும் நிகழ்வே கலைப்படைப்பில் காணப்படும் சுவையுணர்வின் நெறியாகும்.

இன்று நாடகங்களை மூன்று வகையாக பார்க்க முடியும்.

1. காட்சி நாடகம் - உதாரணம் நூலுரு நாடகங்கள் (வாசிக்க)
2. கேள்வி நாடகம் - உதாரணம்: வானொலி நாடகங்கள் (கேட்க)
3. நிகழ்வு நாடகம் - உதாரணம்: தெருக்கூத்து, அரங்க நாடகம் (பார்க்க. கேட்க)

மேற்படி நாடகங்களுள் அரங்கத்தில் நடைபெறும் நாடகங்களை நோக்குகையில் மேலும் பல வகைகளாக்க முடியும். உதாரணத்துக்கு,

1. கூத்து நாடகங்கள்.
2. தாளலய நாடகங்கள்
3. "பா" நாடகங்கள்.
4. நாட்டிய நாடகங்கள்
5. குறியீட்டு நாடகங்கள்
6. ஹாஸ்ய நாடகங்கள்
7. சிறுவர் நாடகங்கள்
8. வார்த்தைகள் அற்ற நாடகங்கள்
9. இலக்கிய நாடகங்கள்
10. சமூக நாடகங்கள்

என்று வகைப்படுத்திக் கொள்ள முடியும். எனவே எந்த அரங்க நாடகத்திற்கும் பல்வேறு வகையான ஆளணியினர் அத்திவாரங்களாக காணப்படுகின்றனர். பொதுவாக நடிகர், தளம், காலம் ஆகிய மூன்றும் இணையும் போது அரங்கக்கலை தொடங்கிவிடுகிறது. இத்தொடர்பை ஊன்றிப் பார்க்கப் பார்வையாளனும் கிடைத்துவிட்டால் அரங்கத்தில் நிகழும் கலைக்கான அடிப்படைக் கூறுகள் அமைந்துவிட்டதாகும்.

அக்காலங்களில் கிரேக்க நாட்டின் குன்றுச் சரிவில் அமைந்த எபிடாரஸ் நாடக அரங்க கட்டடத்தில் அரைவட்ட அளவில் படிக்கட்டுக்களாக பார்வையாளர்கள் அமரும் இருக்கைகள் வெட்டப்பட்டிருந்ததை அறிந்திருக்கிறோம். இதுபோன்று உரோமர் கால, எலிசபெத் கால (ஷேக்ஸ்பியரின் "குளோப்" நாடக அரங்கு) 18ம் நூற்றாண்டகால அரங்குகள் நாடகங்களில் முக்கிய தளங்களாக வளர்ச்சிபெற்று வந்திருக்கின்றன. எனவே அரங்க நாடகத்திற்கு அரங்கு மிக முக்கியமானதே.

மேலும் அரங்க நாடகங்கள் சிலப்பதிகாரக் காலம் முதல் இக்காலம் வரை பின்வரும் கலைகளையும் கலைஞர்களையும் ஆதாரமாகக் கொண்டிருந்தன. உதாரணமாக,

1. நாடகம் எழுதும் கலை - நாடக ஆசிரியர்
2. நாடகம் நடிக்கும் கலை - நடிகர்கள்
3. நாடக பின்னனி இசை - இசையமைப்பாளர்கள்
4. நாடகம் இயக்கும் கலை - இயக்குனர்கள் என்று நோக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் தற்காலத்தில் மேடை நாடகத்தின் முக்கிய அம்சங்களாக பின்வரும் அம்சங்கள் கருதப்படுகின்றன.

1. (காலம், பிரதேசம், பார்ப்போரை கருத்தில் கொண்ட) சிறந்த கருவூலம்.

2. பொருத்தமான வசன அமைப்பு

3. பாத்திரப் பொருத்தம்

4. அபிநய பாவங்களில் தேர்ச்சிபெற்ற ஞானமுடைய ஆற்றுவோர்.

5. மேடையமைப்பும் மேடைப்பாவனையும்

6. ஒப்பனை ஆடை அலங்காரம்

8. பின்னணி இசை

9. கலைத்துவமும் இரசனையும் பல்திறனும் கொண்ட இயக்குனர்.

ஆரம்ப காலங்களில் கட்டியக்காரன், சடங்குகளின் தலைவன் போன்றோர் ஆற்றிய பங்களிப்பின் புதிய வகிபங்காக தற்கால இயக்குனர் விருத்திபெற்றுக் காணப்படுகின்றார். இருந்தபோதும் நர்டக அரங்கம் சிறப்புற மேலும் பல கலைஞர்கள் பின்புலமாக காணப்படுகின்றார்கள். அவர்களை பின்வருமாறு வரிசைப்படுத்த முடியும்.

1. மேடையமைப்பாளர் (Stage Manager)
2. ஒப்பனையாளர் (Make up Man)
3. சிறந்த தையற்காரன் (Fitter)
4. பின்னணி பாடகர் (A Musian)
5. ஒளியமைப்பாளர் (Light Master)
6. பின்னணி இசை வழங்குவோர் (Music Group)
7. பின்னணி குரல் கொடுப்போர் (Chorus)
8. நடன இயக்குனர் (Dance Master)
9. வசனகர்த்தா (Wording Organizer)
10. கணணி உதவியாளர் (Graphics)
11. ஓவியர் (Artist)
12. தச்சன் (Artisan)
13. சண்டை பயிற்சியாளர் (Stand Master)

இவ்வாறான கலைஞர்களின் பங்களிப்புடன் ஆற்றுவோர், காண்போர் இடைத்தாக்கம் செவ்வனே இடம்பெற சிறந்த பொருத்தமான நடிகன் அவசியம். அவ்வாறான நடிகன் கலையுணர்வு மிக்கவர்களாகவும், தியாகம்; பொறுமை; சமூகப்பற்று மிக்கவனாகவும், திடகாத்திரம்; தேகசுகம் கொண்டவராகவும், இருத்தல் அடிப்படை பண்புகளாகும். அதைத்தவிர நால்வகை அபிநயங்களான ஆங்கீக அபிநயம், அஹார்யாபிநயம், வாசிகாபிநயம், சாத்லிகாபிநயம் போன்ற அபிநயங்களை தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றை சாஸ்த்திரிய முறையில் கற்றுத் தேர்ந்தவராகவும், எந்த பாத்திரம் வழங்கப்பட்டாலும் மனம் நோகாது செய்யும் பக்குவம் கொண்டவராகவும் நேரத்தை உயிராக மதிக்கும் பண்பு கொண்டவராகவும் இருத்தல் சாலச் சிறந்தது என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பல்வேறு கலைஞர்கள் ஒன்றிணைந்து கருமமாற்றும் நிகழ்வுகளை சரியான முறையில் கலைஞனைச் சென்றடையாவிட்டால் யாது பயன்? ஆகையால் கீழே குறிப்பிட்டது போல,

கலைஞர் ⇄ கலைஞர்

ஆகிய இருபகுதியினருக்கும் இடையில் உடனேயே இடைவிளைவை ஏற்படுத்தலே இக்கலையின் சிறப்பம்சமாகும் என்பதை மறுத்தலாகாது.

ஒருவன் தேவையான நடிப்புப்பயிற்சியினை பெற்றிருந்த போதும் இலக்கியத்தோடும் மொழியோடும் வாழ்க்கையோடும் அனுபவ ஞான முதிர்ச்சியையும் கூடவே உடன் பெற்றிருக்காதுவிடின் அவன் நடிப்பின் தன்மையை உணரும் திறன் பெற்ற நடிகனே அன்றி; கலைஞன் அல்ல. எனவே ஒருவன் (ஒருத்தி) நடிகனாகவும் கலைஞனாகவும் திகழும்போதே அவனது நடிப்பும் கலையாக மலரும்.

இவற்றையெல்லாம் நோக்குகின்றபோது நாடகம் படைப்பதென்பது, இலகுவான காரியமாகிவிடாது என்பது புலனாகிறது. ஆனால் வெறுமனே எம்நாட்டில் குறித்த கால எல்லைக்குள் இடம்பெறும் போட்டி நாடகங்கள் சில முழுமையான நாடகப் பிரதிபலிப்பைக் கொண்டுள்ளனவா என பல்வேறு திசைகளில் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஒரு விடயத்தை மனம் தொட்டு நோக்க வேண்டியுள்ளது. அதாவது மேடையில் படைக்கப்பட்டுவிட்டது என்பதற்காக மட்டும் ஒரு படைப்பு நாடகக் கலையாகத் திகழ வேண்டும் என்ற நியதி இல்லையென்பதே அது.

அப்படியானால் "நாடகம்" என்றால் என்ன என்ற கேள்விக்கு நாடகமானது நடிகர் மனப்பாடம் செய்ததை மேடையில் நின்று பேசி நடித்துவிட்டது மட்டுமன்று எப்படியோ சமூகப் பிரச்சினை அங்கு காட்டப்பட்டுவிட்டது; என்று ஆத்ம திருப்திபடுவது அன்று, காட்சிப்படிமத்தின் குவியலாக்கி சித்திர அணிவகுப்பு நடாத்துவதன்று, மேடைச் செயல்களில் வித்தை காட்டுவதுமன்று, இவைபோன்ற அனைத்தையும் பயன்படுத்தி உணர்ச்சிப் பெருக்கின் ஓட்டமாக அமைத்துவிட்டோம் என்று பெருமைப்படுவதும் அன்று அப்படியானால் எதுதான் நாடகம் என எண்ணத் தோன்றும். அது உங்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். அதாவது,

1. நடிகர்கள் நாடகக்கருவின் ஆத்மதிருப்தியை உணர்ந்து அதை வெளிக் கொணருவது.

2. சமூகச் சிக்கலின் உண்மைகளை பார்வையாளர்களிடம் ஏற்படுத்துவது,

3. நாடகத்தின் காட்சிப்படிமம், நடிகர்கள், சைகைகள், செய்கைகள் இசைவடிவம் ஆகியவை எந்தளவிற்கு முருகியல் அனுபவத்தினை கூராக்குகிறது என்பனவற்றை நிறுவிச் செல்வதாகும்.


இத்தனையையும் வழங்கிவிட்டால் இயக்குனரின் கடமை முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. நாடக் கலையின் கருவும் ஆழமும் மொழியும் புரியாத பார்வையாளர்கள் உள்ள சூழலாயின் அனைத்தும் வீண். எனவே நாடக இயக்குனரின் இன்றைய முக்கிய பணியாக இருப்பது நடிகர் பார்வையாளருக்கு இடையே உள்ள கொள்ளுதல், கொடுத்தல் என்பன சீராக அமைந்துவிடுமா? என இடம், காலம் என்பனவற்றை கருத்திற் கொண்டு அதற்கு ஏற்ப இரு வகையினரையும் உருவாக்குதல் ஆகும். இது பாரிய பொறுப்புத்தான். உண்மையும் அதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டைப் பொறுத்தவரை தமிழ் நாடகக்கலை மிகவும் நலிவுற்றுக் காணப்படுகின்றது. அதற்கு பலவகையான காரணங்கள் காணப்படுகின்றன. நாடகம் என்ற ஆற்றுகை கலைக்குள் சுழியோடி சில முத்துப் பொறுக்கியவர்களும் உண்டு. எனவே இவற்றினை இனம்கண்டு வெகுவேகமாக அக்குறைகளைக் களைய அனைவரும் ஒன்றுபடாவிடில் எதிர்காலத்தில் நாட்டில் சமூகச் சீரழிவுகள் தவிர்க்க முடியாததாகிவிடும்.


முன்னர் குறிப்பிட்ட மரபு நாடக வழிமுறைகளை பின்பற்றித்தான் ஈழத்து நாடகங்கள் உருவாக வேண்டும்; என்கிற கட்டாயமில்லை. பாரதி தனக்கென ஒரு பாதை வகுத்து சமூகப் போராளியானது போல எம்முள்ளும் தியாக சிந்தையுள்ள கலைஞர்கள் ஒன்றிணைந்து சிறந்த மேடை நாடகங்களை விரைவில் படைக்கும் சக்தியும் சந்தர்ப்பங்களும் பெருக இறையருளை வேண்டுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*





# Renowns

*Dealers in Textiles, Wholesale & Retail*

**FIVE STAR COMPLEX,**
**NO. 49/8, KEYZER STREET, COLOMBO - 11.**
**TEL: 2381471**

---

*With Best Compliments from:*

**M.Mano**



# LEEMA TEX

*DEALERS IN TEXTILE SPECIALIST IN READYMADE GARMENTS*

**No. 100/6, Keyzer Street,**
**Crystal Super Market, Colombo - 11**
**Tel: 4713679,Mobile: 077-3186764**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வியாண்டு காலப்பகுதியில் கண்டி மத்திய நிலையத்தில் நடந்தேறிய நிகழ்வுகள்

## நூல் அறிமுக விழாக்கள்

கலாநிதி பக்கீர் ஜஃபார் அவர்களின்
வெற்றிகரமான கற்பித்தல் - வகுப்பறை முகாமைத்துவம்
முதலாம், இரண்டாம் நூல்கள் வெளியிடப்பட்டமை.

திருமதி. திவ்யராணி சிதம்பரநாதனின்
'கதையும் கருவும்' நூல் வெளியீட்டு விழாவுடன்
கல்விமாணிப் பொழுதும் நிகழ்வேறியது.

2004 - 2006 தொகுதி புதிய ஆசிரியர்களின்
கல்விமாணிப் பட்டக்கற்கை நெறிக்கான
தொடக்க விழா.

1999 - 2002 ஆசிரியர் குழுவினரின் பட்டமளிப்பு விழாவும்,
சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர்களுக்கான
பாராட்டு விழாவும்,
"கல்வித்தாரகை",
"கல்வியியற் கட்டுரைகள்-17",
"முத்துப்பரல்கள்"
"சிறுவர் கதைகள்"
ஆகிய நூல்களின் வெளியீடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



# ROOBAN'S
## EMPORIUM

*"Paradise of silk Sarees"*

**Dealers in Ready made Garments,
Fancy Goods, Stationery Items, Stainless Steel,
Glass & Porcelain ware and Oal Greeting cards.**

**No. 51, New Town,
Digana,
Rajawella.
Tel: 2374661**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2002/2005 - 2ND BATCH
# OUT GOING B.Ed. STUDENTS

| NAME | PRESENT ADDRESS | OFFICIAL ADDRESS |
|---|---|---|
| **Firdowziya Abdul Azeez** | No. 660/22, Main Street, Matale. Tel: 066-2234259 | Zonal Education Office, Galewela. Tel: 066-2289303 |
| **I. Abdul Rahman** | No. 25/2, Bogolla Road, Hettipola. Tel: 0777-250633 | Kuli/ Ehattumulla M.V Nagollagoda. |
| **N. Ravichandran** | Yataderiya T.V Undugoda. Tel: 0722-521466 | Yataderiya T.V Undugoda. Tel: 0722-521466 |
| **A.L.M. Haniffa** | No. 33, Baduriya Road, Mawanella. Tel: 077-9185435 | Ku/C.C. Tamil V. Polgahawela. |
| **N.P. Faleel Caffoor** | No. 23, Kappalgama, Vijithapura. | A/Kalawewa M.M.M.V. Vijithapura. |
| **S. Gurunathan** | No. 347, Nuwara Eliya Rd., Pussellawa. | Hindu National College, Pussellawa. 081 2478414 |
| **A. Thulasi Ammah** | No. 34/2, Hornsey Bazaar, Dickoya. | CP/H2/ Puliyawatte T.M.V Dickoya. |
| **C.M.Ummu Naseeha** | No. 68/A, Gongawela Road, Matale. | MT/An- Noor M.M.V Warakamura, Ukuwela. |
| **A.L.M.Nawfar** | Katukeliyawa, Pubbogama. | A/Jayah M.M.V Kadantugama, Pubbogama 50122 |
| **K. Selvaraj** | No. 176/9, Kandy Road, Gampola. Tel: 081-2353325 | Kalaimagal M.V Kandy. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **C. Arundhadhi** | No. 241/15, Rockhill,<br>Badulla.<br>Tel: 055-2229274 | Z.E.O<br>Passara.<br>Tel: 055-2288130 |
| **L. Sathasivam** | No. 74, Main Street,<br>Galaha.<br>Tel: 078-8708094 | Z.E.O<br>Gampola. |
| **A.J.Arulnayagam** | No. 165/B, Jayasri Uyana,<br>Pallekela,<br>Kundasale. | K/ Vaani T.V<br>Pallekela,<br>Kundasale. |
| **V. Suhumar** | No. 19, Baily Road,<br>Nawalapitiya.<br>Tel: 054-2222582 | K/ Barcaple T.V<br>Kataboola. |
| **S. Haseem** | No. 12, Galgoda,<br>Guruthalawa.<br>Tel: 057-5670011 | B/ Padinawela M.V<br>Boragas.<br>077-9188043 |
| **Mehrunnisa buhary** | No. 55, Kuruwawa,<br>Rattota. | MT/ Dankanda T.V<br>Rattota. |
| **H.L. Jiffry** | Hunugaldowa.<br>Silmiyapura, | BD/Warwick Tamil V<br>Boragas.<br>Tel: 072-4314887 |
| **S. Nawaratnam** | No. 10, Thampapillai<br>Mawatha,<br>Haputale. | BD/ Haputale Tamil<br>Central College<br>Haputale. |
| **M.M. Fathima Rafaka** | No. 24, Technical College<br>Road,<br>Warakapola.<br>Tel: 035-2268004 | Kg/ Babul Hassen<br>M.M.V<br>Warakapola.<br>Tel: 035-2267657 |
| **A.S.M. Felix** | No. 40, Katugastota Road,<br>Kandy. | K/St. Sylvesters College<br>Yatinuwara Road,<br>Kandy. |
| **S. Shivandini** | No. 750A, Trincomalee St<br>Matale. | Mt/ Hindu National<br>College<br>Matale. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **S. Manalan** | No. 253/ ½ Miller's Flats, Dickoya. | St. Mary's College, Nawalapitiya. |
| **M. Vishvanathan** | No. 226/2, Bandaranayaka Mawatha, Kandapola. | N/Nanuoya T.M.V Nanuoya. Tel: 0722-677354 |
| **Veloo Prabagaran** | No. 10, Central School Rd, Arumadowa, Passara. Tel: 055-2288135 | BD/ Passara Tamil M.V (National School) Passara. Tel:055-2288225 |
| **M.A.M. Mubarak** | No. 97/3, Marawa, Mawanella. Tel: 077-6450480 | KA/MW/Nankurugama M.V Mawanella. |
| **M.H.M. Mubarak** | No. 75, Uyanwatha, Devanagala. | KS/MW/ Delgahagoda M.K.V Hingula. |
| **Zeenathul Wardiya** | No. 428, Madige, Galagedara. Tel: 081-2463268 | K/Jabbar C.C Galagedara. |
| **N. Kousaladevi** | No. 17/2, Baily Road, Nawalapitiya. | K/Kathiresan Central College, Nawalapitiya. |
| **M. Sivaganeshar** | No. 309, Srimananiwasa, Madarangoda, Kadugannawa. | K/Hindu Senior T.V Kandy. |
| **H.L.M.Fuward** | No. 9, Sungawila, Polonnaruwa. | PL/AL Rifai M.V Thambala, Polonnuruwa. |
| **K. Sivaneson** | No. 57, Kandy Road, Warakapola. Tel: 077-9086623 | KG/ Panana T.V Madeniya, Warakapola. |
| **A.H. Subair** | No. 82, Kalawewa, Wijithapura .(50110) | A/Nelliyagame MV. Palagale. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **M.M. Nawas** | Kanadara Katukeliyawa,<br>Mihintale.<br>Tel: 025-5670489 | A/ Dunumandalawa M.V<br>Galenbindunuwewa. |
| **M.I.M.Rawfeek** | No. 40, Muslim Colony,<br>Kaduruwela. | Pl/Polonnaruwa M.C.C.<br>Kaduruwela,<br>Polonnaruwa. |
| **A.M.Jahir** | No. 254, Patthampitiya,<br>Rambukkana.<br>Tel: 077-6026613 | KG/MW/Dharaluloom<br>M.M.V<br>Hurimaluwa,<br>Rambukkana. |
| **R.Indra Ghandi** | No. 6C, Nagasthanna Road,<br>Kandy. | K/Viharamahadevi Girls<br>College<br>Kandy. |
| **A.M.M. Nasar** | No. 195, Kuda kekirawa,<br>Kekirawa. | A/Kekirawa Muslim<br>M.V<br>Kekirawa. |
| **T. Vadivel** | No. 102A, Rosita Housing<br>Scheme,<br>Kotagala.<br>Tel: 051-2224676 | N/ Agarapatana T.M.V<br>Agarapatana. |
| **I.J.A. Pradeep Kumar** | N/ Lippakelle T.V<br>Lindula. | N/ Lippakelle T.V<br>Lindula |
| **S.H.M. Huwais** | No. 72C, Mosque Road,<br>Wattegedara,<br>Polgolla. | K/W/Wattegedara M.V<br>Wattegedara,<br>Polgolla. |
| **S.M.Sithy Sanfara** | No. 57, Old Post Office<br>Road,<br>Wattegama. | St. Anthonys Girls<br>College,<br>Kandy. |
| **N. Pathmanathan** | No. 29, Alakoladeniy Road,<br>Malkaduwawa,<br>Kurunegala.<br>Tel: 037-2226606 | IBB/ Sastraravinda<br>Pirivena<br>Polgolla,<br>Gokerella. |
| **A.A. Fathima Rafeeka** | No. 50/5, Dambulla Road,<br>Kurunegala. | KU/ Zahira M.M.V<br>Dambulla Road,<br>Kurunegala. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Omerdeen Sadhan** | No. 110/A, Kalawewa, Vijithapura. Tel: 025-2263326 | Nelliyagama M.V Nelliyagama, Palagala. |
| **F.R. Stephen devedas** | No. 245, Springvally Rd., Rockhill, Badulla. | B/Maymalley T.V Springvalley Tel: 077-3049065 |
| **Shithiran Anandan** | No. 43, 2nd Cross lane, Ambatenna garden, Bandarawela. | BD/ Roehampton T.V Haputale. |
| **S. Ananda Rajah** | No. 65, Technical College Road, Warakapola. | KG/St. Marys T.M.V. Kegalle. |
| **Shobana Nadarasa** | No. 24, Kandiah Building, Hatton. | CP/HZ/ Shannon T.V Hatton. |
| **M.M. Nilafdeen** | No. 93/C, Hijramawatta, Kaduruwela 51000. | PL/Polonnaruwa Muslim Central College, Kaduruwela -51000 Tel: 027-2226255 |
| **K. Santha Kumar** | No. 37, Bazar St, Badulla. Tel: 0777-652923 | B/Saraswathy C.C. (National School) Badulle Tel: 055-2223208 |
| **R. Sritharan** | No. 222/10E, Ambagamuwa Road, Nawalapitiya. Tel: 054 -2223323 | K/ Dolosbage T.V Dolosbage. |
| **Logeshwariy Danabaalan** | No. 3/6, Wederburn Road, Nuwara Eliya. | N/ Saraswathy T.M.V Lindula. Tel: 051-2230159 |
| **A.M.M. Ilyas** | No. 64, Wilpola, Aranayaka. | Ka/Mw/ Dippitiya M.M.V Aranayaka. |
| **E. Indra Kumar** | No. 15/4, Pittakanda Road, Kandy. Tel: 0777-258386. | K/St. Sylvesters College Kandy. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*



**ASHAA TEXTILES**

Kotugodella Street,
Kandy.
Tel: 081-2224159

**Branch**

**Angells**

No. 424, Peradeniya Road,
Kandy.
Tel: 081-2226301

*With Best Compliments from:*



**KAVITHAS.COM**

Mobile Phone Parts & Phone Phone Cards
I.D.D an Logal Calls
Laminating & Printing
E - Mail & Internet

Tel: 052-2258408
Fax: 052-2258855
E -Mail: kavicom@sltnet.lk

*With Best Compliments from:*



**Junaid Stores**

Specialist in Wedding Sarees,
Salwar Kameeze, & Ladies,
Gents & Children Garments

No. 19-17, Yatinuwara veediya,
Kandy,
Sri Lanka.
Tel: 081-2225232

*With Best Compliments from:*



**RATNA JEWELLERS**

**BANKERS**

No.106 (88G)
Kotugodella Veediya,
Kandy,
Sri Lanka.
Tel: 081-2222736



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது கோயில்களும் நாட்டிய வளர்ச்சியும்



கே. திலிப் குமார்
(முதலாம் வருடம்)

பன்நெடுங்காலமாக கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளன. குறிப்பாக இந்து சமய நிழலிலே கலைகள் மிக நேர்த்தியாக வளர்ச்சியடைந்துள்ளன. இந்து சமயத்துக்கும் கலைகளுக்குமிடையே பிரிக்க முடியாத ஒன்றிணைந்த தொடர்பு நிலவிவந்துள்ளது. சகுனப்பிரம்மமாக இறைவனை வழிபடும் நிலையினை கொண்ட வழிபாட்டு முறைகள் வைதீக மரபுகளை ஒட்டியவை ஆயினும் அவற்றில் ஏதோ வகையில் கலைகள் இடம் பெறுதல் தெளிவு.

வேதாகம முறைப்படி கோயில்கள் அமைக்கப்பட்ட பின் கலைகளின் நிலைக்களமாக அவை நிகழத்தொடங்கின. எனவே, கோயில்கள் சமய உணர்ச்சியினையும், அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றி, கவின்கலை மையங்களாகவும் மிளிரலாயின. கோயிலமைப்பு, அதன் சிற்பங்கள், ஓவியங்கள், கிரிகைகள் முதலியவற்றிலே கவின்கலைகள் குறிப்பாக இசையும் நடனமும் முக்கியமான ஒரு இடத்தினைப் பெற்றுள்ளன. கோயில் ஒரு முழுமையான கலைக்கூடமாகவும் காட்சியளித்தது.

கோயிலிலே குடிகொண்டிருக்கும் பரம்பொருளான இறைவன் கலைஞருக்கும், பக்தருக்கும் ஒப்புயர்வற்ற தனிப்பெரும் கலைவடிவமாகவும், கலைப்புரவலனாகவும், கலையின் இருப்பிடமாகவும் காட்சியளித்தான். வைச சமய முழுமுதற் கடவுளான சிவபிரான் கலை ஞானியாகவும், ஆடற்கலையரசனாக, நடராஜனாக பல்வேறு கலைகளின் தனிப்பெரும் வித்தகனாக விளங்குகின்றான். நடராஜ வடிவமே இதற்கு தக்க எடுத்துக்காட்டு, இதனைப்போலவே அம்மன், பிள்ளையார், முருகன், விஷ்ணு முதலிய கடவுளரும் கலைப் பிரியராகவும், கலையின் வடிவமாகவும் போற்றப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் மாதவி கற்றதாக கூறும் பதினொரு வகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளர் ஆடியவை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஆகவே தெய்வங்களுக்குரிய கோயில்களும் கலைச் களஞ்சியமாக விளங்கிதில் வியப்பில்லை.

இத்தகைய பரம்பொருளுக்குரிய கோயில்களிலே அவ்வக் கடவுளர்களுக்குரிய கலையார்வத்தினையும், ஈடுபாட்டினையும் காட்டும் சிற்பங்களும், ஓவியங்களும் இடம் பெறலாயின. வாய்பாட்டிசை, வாத்திய இவை நடனம் பற்றிய ஓவியங்களைக் கொண்ட கோயில்கள் பலவுள்ளன. நர்த்தன கணபதி, வீணாதாரர், தட்சிணாமூர்த்தி, வீணை ஏந்தி வாசிக்கும் சரஸ்வதி, சிவபிரானின் 108 கரணங்கள், கண்ணனின் வேய்ங்குழல் பற்றிய சிற்பங்களை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் அமைப்பிலே நிருத்த மண்டபம் என்ற ஒரு பகுதி நடனத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

கலைவடிவினையாய் கலைப்பிரியனாய் இறைவனை வழிபடும் செய்யும் முறைகளிலே நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது. " ஏழிசையாய், இசைப்பயனாய் விளங்கும் இறைவனை ஆடுகின்றிலை கூத்துடையான் சுவைக்கு அன்பினை என்பிருக்கி பாடுகின்றிலை" எனவும் " ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுளவினைகளை" என சைவ நாயன்மாரும், "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்" என்று அபபரும் " எந்தனைப் பெருமானைப்பாடி நின்றாடுவோமே ஆயிரம் பேரானை" என வைணவ ஆழ்வாரும் ஆடல் பாடல் மூலம் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு வலியுறுத்தியுள்ளதை நாம் காணலாம்.

நால்வேதங்களின் சாரமாகவும் 5வது வேதமாக பொது மக்களின் வேதமாக நாட்டிய வேதம் விதந்தோம்பப்படுகின்றது. "இறைவனை வழிபடுவதற்கு மலர் நைவேத்தியம் ஆகியவற்றிலும் பார்க்க நிருதத்தானமே சிறந்தது" என விஷ்ணு தர்மோத்ரபுராணம் கூறும்.

கோயில்களில் இடம்பெற்ற நித்திய, நைமித்திய கிரிகைகளில் ஆடலும், பாடலும் நன்கு இடம் பெற்றன. நிருத்தியோசாரம் முற்காலத்தில் நைமித்திய கிரியைகளில் மட்டுமன்றி நித்திய கிரிகைகளிலும் இடம் பெற்று வந்தது. இன்று அது மானசீகமாக சொல்வதோடு நின்று விடுகின்றது. நித்திய கிரியைகளின் போதும் ஆடல் பாடல் இடம்பெற வேண்டுமெனவும் ஆகமங்களும் பத்ததிகளும் குறிப்பிடுகின்றன.

முற்காலத்திலே மேற்குறிப்பிட்ட இசை நடன நிகழ்ச்சிகளை அளிப்பதற்காக இசைக்கலைஞர்கள், வாத்திய கலைஞர்கள், நாட்டிய கலைஞர் (தேவரடியார்) கோயில்களிலே அவற்றின் வருமானம் தேவைகளுக்கேற்ப நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதனை குறிப்பாக சாசனம் வாயிலாக அறியலாம். இதற்கு சான்றாக பல்லவ சோழர் காலத்தில் கோயில்களில் அரசனின் ஆதரவைப் பெற்று வெகு சிறப்பாக நடனம் இடம் பெறுவதை குறிப்பிடலாம். அதாவது பல்லவர் காலத்தில் முனீஸ்வரர் கோயிலில் 42 ஆளடிகள் இருந்தனர். சோழர் காலத்தில் இராஜராஜன் போன்ற அரசர்களின் காலத்தில் கோயில்களில் பல கலைகளையும் அதாவது, இசை, நடனம், வாத்தியம் ஆகியவற்றை நிகழ்த்த பலபேர் இருந்தனர். ஓதுவோர் எனப்பட்டோர், திருப்பதிகம், விண்ணப்பம் செய்யும் 48 பேர் இருந்தனர். அத்துடன் இசையில் வல்ல பெண்கள் "கந்தர்விகள்" எனப்பட்டனர். இவர்கள் 95 பேர் இருந்தனர். பக்கவாத்தியக்காரர் அதாவது, கெட்டிமேளம், உடுக்கை, வீணை, புல்லாங்குழல் வாசிக்க சிறப்பான பயிற்சி பெற்றோர் இருந்தனர். பல இடங்களிலும் 400 தேவரடியார்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு கோயிலில் பணிபுரியும் எல்லோருக்கும் சம்பளமாக நெல் வழங்கப்பட்டது. இவ்வாறு கோயில்களில் வேலை செய்வதற்கென மாலை கட்டுவோர், சோதிடர், தச்சர், தட்டார், திருவிளக்கிடுவோர் என பலர் இருந்தனர். இவ்வாறு கோயில்களில் ஆடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நடனம்), பாடல் என்பவற்றிற்கு மதிப்பளித்து வந்த அக்கால அரசர்கள் ஆடல் வல்லவர்களுக்கு பொன்னாலான குடை, மகுடம் என்பனவற்றை அளித்தனர்.

இன்று இலங்கைலிலுள்ள சைவ மக்களிடையே விழிப்புணர்வும், ஆர்வமும் நிலவுகின்றது. கடந்த ஆண்டுகளாக இலங்கையின் பல்வேறு இடங்களிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு பக்கத்திலுள்ள மண்டப வீதியிலே அழகிய நடராஜா உருவமும், நடராஜரின் 108 காரணங்களை விளக்கும் ஓவியங்களும் சிறப்பாக நடனங்களும் வரையப்பட்டுள்ளன. நடனத்திற்கும் கோயில்களுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை விளக்கும் இத்தகைய நிகழ்வு வரவேற்கத்தக்கதே.

இலங்கையிலும் 1980 ஆண்டு பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் முன்னேஸ்வரத்தில் சிறிய அளவிலான நடன நிகழச்சியினை இராமநாதன் நுண்கலைக் கழக ஆசிரியர்கள், மாணவர்களின் உதவியுடன் ஏற்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


மேலும் தற்போது எமது நாட்டு கலைஞர்களும் இந்தியா போன்ற அயல் நாட்டு கலைஞர்களும் கூட கொழும்பிலுள்ள மயூரபதி அம்மன் ஆலயத்தில் நடன நிகழ்வுகளை ஆற்றியும் தொடர்ந்து நிகழ்த்திய வண்ணமும் உள்ளனர். இங்கு நடனம் செய்வதால் கலைஞர்கட்கு மென்மேலும் கலையிலே சிறந்த ஆற்றல் ஏற்படுமென்றும் இறைவனுடைய (மயூரபதி அம்மன்) ஆசி கிடைக்கும் என்பதும் மக்களிடையே பரவலான ஒரு நம்பிக்கை ஆகும்.

இவ்வாறாக நடனத்திற்கும் கோயில்களிற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது என்பதும் நடனத்தில் கோயில்கள் முக்கிய பங்கை செலுத்தியுள்ளது என்பதற்கும் மேற்கூறப்பட்டவை சான்றுபகர்கின்றன என்பது நோக்கத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



PROCESSORS & DISTRIBUTORS OF
HALAL HAIRA CHICKEN &
HAIRA SPECIAL SKINLESS CHICKEN

# HAIRA FARMS (PVT) LTD

**No. 2/1/2, Mosque Road, Madawala Bazzar.**
**Tel/Fax: 081-2476813, 071-4950370-80**
**E-Mail: hairafarms1999@yahoo.com**

**BRANCHES:**

No. 1A, Teldeniya Road,
Madawala Bazzar.
Tel: 071-4950379

No. 50/4, Yatinuwara
Patu Mawatha,
Kandy.
Tel: 081-4473358


No. 76-A, Kings Street,
Matale.
Tel: 071-4950382-83

No. 93, Gongawela Road,
Matale.
Tel: 071-4215683

*With best Compliments from*

# MAHANUWARA AGENCIES







**Dealers in Hardware, electrical Goods Etc.**
**and Estate Suppliers.**

**No. 7, Kumara Vidiya,**
**Kandy.**
**Tel: 081-222329**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது உலகம் செய்வோம்



**K. செல்வராஜ்**
(விடுகை வருடம்)

அரியினைத் தொழுத போதும்
அல்லா வென்றழைத்த போதும்
மனம்தானே ஒன்ற வேண்டும்?
மற்றவை என்ன வேண்டும்.
மதம் கடந்த மனிதநேயம் மிக்க ஒரு புதிய
உலகை செய்வோம்.

புத்தன் தான் புகன்றாலென்ன
நபிகள் தான் நவின்றாலென்ன
இயேசுதான் இயம்பினாலும்
தத்துவம் ஒன்றுதானே!
எல்லா மதக்கோட்பாடுகளும் ஒன்றே என உணர்கிற
பேதமற்ற சமுதாயத்தை அமைப்போம்.

திருக்குரான் கீதை பைபிள்
பகர்வதும் ஒன்றுதானே
நல்லவை எல்லாம் இங்கே
சொல்பவை ஒன்றுதானே!
நதிகள் என பலவிருந்தும்
கலப்பது கடலில் அன்றோ
மதங்கள் எனப் பலவிருந்தும்
மார்க்கமது ஒன்றுதானே!

மதம் கடந்து, இனம் கடந்து மனிதன் ஒன்றே என நினைக்கிற
புதிய உலகம் காண்போம்.

நம்மின மாந்தர்கள் ஓரினமே
நாமிங்கு எல்லாம் ஓர்குலமே.
வம்புகள் தும்புகள் வேண்டாமே
ஒற்றுமை என்றும் போற்றிடுவோம்.

ஒற்றுமை விதை விதைத்து அன்பு நீர் பாய்ச்சி உறவு என்னும்
உரமிட்டு புதிய உறவுப்பயிர் வளர்ப்போம். அதுவே புதிய உலகம்.

உம்மொழி எம்மினம் என்பதிங்கு
உண்மையில் பிரிவினை வாதமன்றோ?
எம்மினம் ஓர்குலம் என்பதுதான்
நல்லவர் போற்றிடும் வேதமன்றோ?

பேதமற்ற சமுதாயம் கொண்ட ஒரு புதிய உலகம் காண்போம்.
குறுகிய மனங்கள் மாறிட வேண்டும் - இங்கு
பிரிவினை வாதங்கள் மாறிட வேண்டும்.
ஒன்றே உலகென உணர்ந்திட வேண்டும் - இங்கு
இன்றே யாவரும் திருந்திட வேண்டும்.

வாருங்கள் திருந்துவோம். இன்றே திருந்துவோம். குறுகிய மனம் வேண்டாம். பரந்த மனம் கொள்வோம். "நீ" என்பது தனிமை, "நான்" என்பது வறுமை. "நாம்" என்பதே பெருமை என உணர்வோம். நாம் புதிய உலகம் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# S.N.S. HARDWARES

*Dealers in Hardware & Scrap Iron*

Tel: 081-2421569
Res: 081-4479065

No. 522/2, Balagolla,
Kengalla,
Kandy.

*With Best Compliments from:*




NEW

## S.P.S. & COMPANY

Dealers in Plastic Items,
Gift Item,
Stationery All Kinds
school Matrials

No. 7, Hatton Road, Ginigathena.

*With Best Compliments from:*



## STUDIO VIRANGA

No. 37, Hatton Road,
Ginigathena.
Tel: 051-2242279



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்ரேல் ஒரு பார்வை

**I.J.A. பிரதீப்குமார்**
(விடுகை வருடம்)



மத்திய கிழக்காசிய நாடுகளில் பெயர் குறிப்பிடக்கூடிய ஒரு நாடாக இன்று இஸ்ரேல் விளங்குகின்றது. இஸ்ரேல் நாடானது வடக்கே லெபனானையும், கிழக்கில் சிரியாவையும், தெற்கில் எகிப்தையும், மேற்கே ஜோர்தான் நாட்டையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்நாட்டின் சுதந்திரமானது 1945ல் பெறப்பட்டதாகும். சுமார் 20770 ச.சு. விஸ்தீரத்தைக் கொண்ட இந்நாட்டில் சுமார் 6.5 மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் யூத இனம் 77.2% ஆகவும், ஏனையோர் 22.8% ஆகவும் காணப்படுகின்றனர்.

இந்நாட்டில் காணப்படுகின்ற சனத்தொகையானது பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து குடியேறிய மக்களின் கூட்டு மொத்தத்தைக் குறிக்கின்றது. இஸ்ரேலின் பிரதான நகரங்களாக டெல்லவியு (Telaviv), ஹய்பா (Haifa), பியசெவா (Beer Sheva), ஜெருசலேம் (Jerusalem) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இன்று இஸ்ரேலின் தலைநகரமாக விளங்குவதும் ஜெருசலேம் நகரம் ஆகும். இங்கு காணப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை 120 ஆகும். ஜனாதிபதி ஆட்சிமுறை இங்கு காணப்படுவதுடன், பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக பிரதம மந்திரியே செயற்படுகின்றார். ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒரு முறை தேர்தல் முறை மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இங்கு காணப்படுகின்ற பாராளுமன்றம் "கெனசட் (Knesset)" என அழைக்கப்படுகிறது. இங்கு தேசிய மொழியாக ஹிப்ரு (Hebru), அராபி ஆகியன காணப்படுகின்றன. இங்கு புழக்கத்தில் உள்ள பணவகை "செக்கல்ஸ்" ஆகும். இங்கு பொதுவாக ஞாயிறு தொடக்கம் வியாழக்கிழமை வரை வேலை நாட்களாகும். வெள்ளி, சனி ஆகிய தினங்கள் விடுமுறை நாட்களாகவும் கணிக்கப்பட்டு வருகின்றது.

இஸ்ரேல் நாட்டின் கல்வி நடவடிக்கைகளானது ஏனைய நாடுகளுக்கும் ஒரு சிறந்த உதாரணம் ஆகும். இங்கு இலவச கல்வித்திட்டம் 05வயது தொடக்கம் 18 வயது வரை அமுல்படுத்தப்படுகின்றது. பதினான்கு வயது வரை கட்டாயக் கல்வி காணப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகள் தரம் 01-06 வரையும், இடைநிலைப் பாடசாலைகள் தரம் 07-10 வரையும், உயர்கல்வி 02 வருடங்களாகவும் காணப்படுகின்றது. இப்பாடசாலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை முடித்த பின்னர் ஆண்கள் 03 வருடமும், பெண்கள் 02 வருடமும் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபட வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். பாடசாலைகளில் தரம் 01-02ற்கு 8.00 மணி தொடக்கம் 1.00 மணிவரையான காலமும், தரம் 03-06ற்கு 8.00 தொடக்கம் 2.00 மணிவரையும் பாடசாலை நேரங்களாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு காணப்படும் பாடசாலைகளில் சீருடைகள் கட்டாயமாக்கப்படவில்லை. எனினும், ஒவ்வொரு, பாடசாலைக்குமான தனியான இலட்சணைகள் அணிவது எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்ரேல் நாட்டில் ஆரம்பப் பாடசாலையாகக் கருதப்படுவது தரம் 01-06 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகும். இவ்வாறான ஓர் ஆரம்பப் பாடசாலையை நோக்கும் போது இங்கு ஒரு வகுப்பறையில் விளையாட்டு, வைத்தியசாலை, கடைகள், வீட்டின் ஓர் அமைப்பு, உபகரண மூலைகள், தொலைக்காட்சி, வானொலி என்பவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான வசதிகளைக் கொண்டு வகுப்பறைகள் காணப்படுவதால் மாணவர்கள் சுயமாகக் கற்றலில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இங்கு ஆசிரியர்கள் வழிகாட்டுபவர்களாகவே காணப்படுகின்றனர். வகுப்புகளிற்கான மாணவர்களைப் பிரிக்கும் போது மாணவர் திறமைக்கு ஏற்பவே பிரிக்கப்படுகின்றனர். எனினும் இது மாணவர்களால் அறியப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே மாணவர்கள் தத்தமது திறமைக்கு ஏற்ப செயற்பாடுகளில் பங்கு கொள்ளக் கூடியதாகவும் வேலைகளை எல்லோரும் சமமாகச் செய்து முடிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். வகுப்பறைகளில் போதிக்கப்படுகின்ற பாடத்திட்டமானது 80% கல்விக் கொள்கைக்கு அமையவும், ஏனைய 20% பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்ளும் உரிமை பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளை பொறுத்தளவில் ஆசிரியர்கள், சமூகத்துடனும், மாணவர்களுடனும் நெருங்கிய தொடர்புடையவர்களாகக் காணப்படுவதாலும், சமூகத்தின் தேவைகளை அறிந்தவர்களாகவும் காணப்படுவதனால் அதற்கேற்ப பாடத்திட்டங்களை வகுக்க ஆசிரியர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். பாடசாலைகளில் கற்பித்தல் முறைகளாவது மாணவரை உற்சாகப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. மாணவரது குறை நிறைகளை இனம் கண்டு அவற்றிற்கேற்றவாறு கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பப் பாடசாலைகளில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை அத்தியாவசிய கற்றல் அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதே இங்குள்ள ஆரம்ப பாடசாலைகளின் மிக முக்கிய கடமையாக காணப்படுகிறது.

அடுத்ததாக இங்கு காணப்படும் "கிபுட்ஸ்" என்னும் கிராம அடிப்படையிலான பாடசாலைகள் குறிப்பிடத்தக்கவையாகும். இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு சமூகத்திலும் உள்ள பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து கற்றல் நடவடிக்கைகளிலும் பொது வேலைகளிலும் ஈடுபடுவது சிறப்பம்சமாகும். இப்பாடசாலைகளில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்துகின்றனர். பாடசாலைக்குத் தேவையான மனித பௌதீக வள குறைபாடுகளை பெற்றோர்களே முன் வந்து நிவர்த்திப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். அத்தோடு இப்பாடசாலைகளில் வாழ்த்து அட்டைகள், பூக்கள், அலங்கார வேலைப்பாடுகள் போன்ற சிறிய கைத்தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. இப்பாடசாலைகளிலே மாணவர்கள் வெறுமனே கல்வியை மட்டும் கற்றுக் கொள்ளாது தமது சுயதொழில் வளர்ச்சிக்காக அடிப்படை அனுபவங்களையும், சந்தர்ப்பங்களையும் இங்கு பெற்றுக்கொள்கின்றனர். இங்குள்ள வகுப்புகளில் ஒரு வகுப்பிற்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் சேவையாற்றுகின்றனர். மாணவர்களுக்கு பாராட்டும், தலைமைத்துவம் வகிக்கும் சந்தர்ப்பங்களும் இங்கு ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றது. பாடசாலைகளில் நடைபெறும்விளையாட்டுப் போட்டியிலும் நடுவர்களாக மாணவர்கள் செயற்படுவதானது மாணவர்களது ஆளுமையை வளர்க்க உதவுவதாக உள்ளது. மாணவர்கள ஆற்றும் சகல கலைத்திட்ட, புறகிருத்திய வேலைகளிலும் பெற்றார் பெரிதும் உதவுகின்றனர்.

இஸ்ரேல் நாட்டில் ஆசிரியர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆசிரியரானவர் மிக தகுதி வாய்ந்தவரும், திறமை வாய்ந்தவருமாக இருக்க வேண்டும் எனும் கொள்கை இங்கு மேலோங்கி இருப்பதைக் காணலாம். இங்கு ஆசிரியர்களாகக் கடமையாற்றும் சகலரும் இரண்டு வருட கால முகாமைத்துவ பயிற்சியில் பங்குப்பற்ற வேண்டும். இப்பயிற்சியில் பங்கு பற்ற அடிப்படைத் தகுதியாக குறைந்தது ஒரு பட்டப்படிப்பையாயினும் மேற் கொண்டிருத்தல் அவசியம். இவர்களுக்கான இப்பயிற்சியின் போது முகாமைத்துவம், சந்தை நிலவரம், தலைமைத்துவம், சமூக உறவுகள் பற்றிய அறிவு என்பன வழங்கப்படுகின்றன. ஒருவர் ஆசிரியராக கடமையாற்ற வேண்டுமெனின், அவர் குறைந்தது ஒரு பட்டத்தையேனும் பெற்றிருக்க வேண்டும். தொடர்ந்து உயர்ச்சி பெறுவதற்கு இரண்டு பட்டங்களைப் பெறுவது அவசியமாகும். இங்கு ஆசிரியர்களுக்கு கட்டாய இடமாற்றம் இல்லை. ஒருவர் தான் விரும்பும் காலம் வரை ஒரே பாடசாலையில் சேவையாற்ற முடியும். இங்கு ஆசிரியர்களுக்கான சம்பளம் மிக அதிகமாக காணப்படினும் விடுமுறைகள் வெறுமனே ஏழு நாட்களாகும். பெண் ஆசிரியர்களுக்கு பிரசவ லீவு மூன்று மாதம் ஆகும். பயிற்சியை முடித்த ஒரு ஆசிரியர் அவருக்கு வசதியான இடத்தில் தனது நியமனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு ஆசிரியர்களுக்கு ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை கல்வி நிலைக்கு ஏற்றவாறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு சேவைக்கால பயிற்சிகள் விடுமுறை நாட்களிலே நடத்தப்படுகிறது. ஒரு ஆசிரியர் தொழிலில் உயர்ச்சி பெற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயின் மொத்தமாக 24 புள்ளிகளை பெற வேண்டி உள்ளது. இதற்காக ஒரு புள்ளியை பெறுவதற்கு 112 மணித்தியாலங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

இங்கு ஆசிரிய பயிற்சிக்காக "டெக்னியோன்" எனும் பல்கலைக்கழகம் பெரும் பங்காற்றி வருகிறது. மிகப் பழைமை வாய்ந்ததும் தற்போது 19 வகையான பயிற்சி நெறிகளைக் கொண்டதுமான இப் பல்கலைக்கழகம் சுமார் 1100 மாணவர்களை தன்னகத்தே பதிவு செய்துள்ளது. இப்பல்கலைக்கழகத்திலே வெளிநாடுகளில் இருந்து வருவோரும் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

இஸ்ரேல் நாட்டில் காணப்படும் இன்னுமொரு விசேட அம்சம் அங்கு காணப்படும் கிராம அமைப்புகளாகும். இங்குள்ள ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அங்குள்ள அனைவருமே ஏதோ ஒரு சுயதொழிலில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. கிராமத்திற்கு உள்ளே நலன்புரி சங்கங்கள், கிராம அபிவிருத்தி அமைப்புக்கள் என பல்வகைப்பட்ட ஒன்றியங்கள் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் விஷேட அம்சம் யாதெனில் கிராம அபிவிருத்தி அமைப்பில் அங்கத்தவராக உள்ளவர்கள் அனைவரும் தமது வருமானத்தை கிராம நலன்புரி சங்கத்திற்கே வழங்க வேண்டும் என்பது சங்கத்தின் நியதியாகும். தனி ஒருவர் தமக்கென வருமானத்தை சேகரிக்க முடியாத ஒரு நிலை இங்கு காணப்படுகிறது. எனினும் ஒருவரின் சுக துக்கங்களிலும், நலன்களிலும் இவ்வமைப்பானது உதவுவதற்கு உறுதி பூண்டுள்ளது. சில கிராமங்களில் பண்ணைகள் அமைத்து அனைவரும் அதில் தொழில் புரிவது சிறப்பம்சமாகும். இவ்வாறான செயற்பாடுகள் கிராமங்களை வெகு விரைவில் அபிவிருத்தி அடையச் செய்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் அந்நாட்டின் கல்வி நிலைமை, பொருளாதார நிலைமை சிறப்புறக் காணப்படல் வேண்டும். இவை சிறப்புற காணப்பட வேண்டுமெனில் தனி ஒருவரின் முயற்சி மட்டுமல்லாது கூட்டு முயற்சியும் தேவையாக உள்ளது. ஒரு நாட்டின் அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோல்களாக திகழும் ஆசிரியர்கள் தங்கள் பணியை உணர்ந்து தமது கடமைகளைச் சரியாக செய்யும் போது எமது இலங்கை நாடும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி

சோமையா ஜெயமேரி
(முதலாம் வருடம்)



ஏ......கடலே!
உன்னை புகழாத
கவிஞனுமில்லை
உன்னை வரையாத
ஓவியனுமில்லை
உந்தன் அழகை
பார்த்து ரசிக்காத
மனிதனுமில்லை
என்ன கொடுமை செய்தாய்?
உந்தன் மடியில் தவழ்ந்து
கொஞ்சி விளையாடிய
எம்மை
வஞ்சகமில்லாமல்
உன் பசிக்கு இரையாக்கி விட்டாயே?
இது நியாயமா?
சுனாமி என்னும் பெயரைச் சூட்டி
அழகு பார்க்க எம்மால் முடியாது
ஆழிப் பேரலையின் அனர்த்தத்தினால்
பாதிக்கப்பட்டு
உறவை இழந்து, சொந்தத்தை இழந்து
அனாதையாக நிற்கும் எங்களை
பெயர் சொல்லி
அழைப்பார் யாருமில்லை
உன் சீற்றத்தினால்
அப்பாவியான உயிர்களை
பழியெடுக்கும்
முயற்சியை விட்டு
உந்தன் அழகை
ரசிக்கும் பாக்கியத்தை
இனியாவது
கொடு!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*

*Specialist Gold Jewellery.*



**Springvally Gold Centre**

**A18, UDAYARAJA MAWATHA, BADULLA.**

*(Opposite to H.N.B. - Badulla)*

**Tel: 055-2224590 Fax: 055-2222503**

*With best Compliments from*



**VISVAM'S**



**96, LOWER STREET,**

**BADULLA.**

**Tel: 055-24234**

*With best Compliments from*



**NEW JEYALATHA'S**

JEWELLERS & PAWN BROKERS

DEALERS IN EVER SILVER, GIFT ITEMS

**No. 77, Hatton Road,**

**Watawala.**

**Tel / Fax : 051-2237210**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

AL HAJ U.L.M. ABOOTHALIB
(Proprietor)

# Ashik Trade Center


(GENERAL MERCHANTS OF RETAIL & WHOLE SALE GOODS)

**Kalawewa Raod, Bulanawewa,**
**Dewahuwa.**

---

*With best compliments from:*







# MODERN

## Communication & Modern Palace.

LOCAL IDD CALLS FAX, LAMINATING, COMPUTER SERVICE,
PHOTO COPY, GIFT ITEMS AND STATIONARIES.


*NEW TOWN, PUBBOGAMA.*
*TEL: 066-2285368, FAX: 066-2285359*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*





# Parashakthie Agencies

Tel : 057-2222370
Fax : 057-2223556
Mobile: 077-6521633

No. 71, Main Street,
Bandarawela.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத்திட்டம்



திருமதி. சித்தி ஹம்ஸியா முஹம்மட் ஹுவைஸ்
(விடுகை வருடம்)

உலகிலே இறைவன் படைப்பிலே பல கோடான கோடி சீவராசிகள் காணப்படுகின்றன. அவற்றிலே மனிதனும், ஏனைய விலங்கினங்களும், தாவரங்களும் முக்கியமானவையாகும். அவற்றில் ஏனைய ஐயறிவு படைத்த உயிரினங்களிலும் ஆறறிவு படைத்த மனிதனே உயர்வானவனாயும், சிறந்தவனாயும் விளங்குகின்றான்.

மேலும் கூறப்போனால் உலகில் இறைவனால் படைக்கப்பட்டவற்றில் மனிதனே சிறந்தவன் என்றும், அவனை அழகிய முறையில் படைத்தோம் என்றும், இறைவன் தன் அருள் மறையாம் திருமறையான அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

இம்மனிதன் பகுத்தறிவின் மூலமோ சிந்தனையின் மூலமோ இறைவனது வழிகாட்டல் இன்றி அவனால் நேர்வழி பெற்ற வாழ்க்கையை பெற்று விட இயலாது. ஆகவேதான் இறைவன் காலத்துக்குக் காலம் நபிமார்களையும், றஸுல்மார்களையும் அனுப்பி மனிதனுக்கு நேர்வழியை காட்டினான். இந்த வகையிலே மனித குலத்திற்கு கிடைக்கப்பெற்ற பெரும் பொக்கிஷம் தான் இஸ்லாம் மார்க்கம், இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டம் என்றால் மிகையாகாது.

அக்கால மனித குலத்துக்கு அருட்கொடையாக கொடுக்கப்பட்ட இஸ்லாமானது பூரண வாழ்கைத் திட்டத்தைக் கொண்ட ஒரு மார்க்கமென்பது சகல தரப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். அல்லாஹ்தஆலாவின் படைப்பிலான மனிதனை நன்கு அறிந்தவன். இவர்கள் (மனிதர்கள்) தவறான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி துன்புறாது காப்பாற்றுவதற்காக, காலத்திற்குக் காலம் நேரான வழியை உணர்த்தி வந்துள்ளான். இதற்காக மனிதர்களில் மிகத் தூய்மையானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சில விசேட தகுதிகளையும் கொடுத்திருக்கின்றான். அப்பால் மனித சமூகத்திற்குத் தேவையான போதனைகளை இவர்களுக்கு அறிவிக்கின்றான்.இவர்களையே நாம் நபிமார்கள் என்றும், றஸுல்மார்கள் என்றும் கூறுகின்றார்கள். இவர்களுக்கு இப்போதனை சம்பந்தமான செய்திகளை அறிவித்தல் “ வஹி” எனப்படுகின்றது. இதை “வேத வெளிப்பாடு” என்றும் சொல்கின்றோம். இவ்வெளிப்பாட்டிற்குக் கருவியாக ஜிப்ரீல் (அலை) எனும் மலக்கினையும் அல்லாஹ்தாஆலா உபயோகித்துள்ளான். ஜிப்ரீல் (அலை) எனும் மலக்கின் பிரதான வேலை அல்லாஹ்தஆலாவின் வஹி எனும் தூதை றஸுல்மார்களுக்கும், நபிமார்களுக்கும் கொண்டு செல்வதாகும். அல்குர்ஆன் எனும் வேதம், வஹி மூலமே நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டது என்பதை நாம் சிந்தனை செய்யும் போது வஹி எனும் வேத வெளிப்பாடு மனித வாழ்வு சீரடைவதற்கு எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகின்றது.

மனிதனின் வாழ்க்கைத்திட்டம் சம்பூரணமாகும் வரை வஹி எனும் வேத வெளிப்பாடும் தேவைக்கு ஏற்ப வந்துகொண்டே இருந்தது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்கும் பூர்த்தி செய்து விட்டேன். உங்கள் மீது என் அருட் கொடைகளையும் பூரணப்படுத்தினேன். உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தைப் பொருந்திக் கொண்டேன்"

என்பதை வஹி மூலம் அறிவித்து மனித வாழ்வுக்கு ஏற்ற திட்டமொன்றை இறைவனே வகுத்துக் கொடுத்துள்ளான். அதில் மனித வாழ்க்கையில் எழும் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வுண்டு. எவ்வாறு வாழ வேண்டும்?, எது சரியானது?, எது பிழையானது? என்பதையும் வஹி மூலம் அறிவித்துள்ளான். இறுதி நபியாம் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இஸ்லாமிய முறைப்படி வாழ்ந்து காட்டியுள்ளார்கள். தூய்மையானதும் அசையாததுமான நம்பிக்கையுடன் வாழ வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். அசையாத நம்பிக்கையுடன் வாழும் போது ஈடேற்றம் காண்பது நிச்சயம். ஈமான் கொண்டு நற்கிரியை புரிந்தவர்களுக்கு பிர்தவ்ஸ் என்ற சுவனபதி நிச்சயம் சன்மானமாக அளிக்கப்படும். அவற்றில் நிரந்தரமாக இருப்பார்கள் அதை விட்டுச் செல்ல விரும்பவே மாட்டார்கள் என்பது அல்குர்ஆனின் கூற்றாகும். இதனை கூர்ந்து கவனிக்கும் போது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதும் அதனை அடையும் வழி என்ன என்பதும் கூறப்பட்டிருப்பதை காணலாம். வாழ்க்கையின் இறுதி நோக்கம் சுவர்க்கத்தை அடைதல் என்பதும், அவ்வாறு செய்வதற்கு நம்பிக்கையும், நற்கிரியையும் அவசியம் என்பது தெளிவாகின்றது. எனவே இஸ்லாம் நம்பிக்கையை அடிப்படையாக கொண்ட மார்க்கம் என்பது தெளிவு. எந்த ஒரு விடயத்தில் நம்பிக்கையில்லையோ அந்த விடயம் சித்தி பெறாது என்பதை நாம் அனுபவங்கள் வாயிலாக அறிவோம். எனவே ஈமான அல்லது நம்பிக்கை இல்லாதவர்கள் நற்கிரிகையால் மட்டும் சுவனபதியை அடைதல் முடியாது. இக்கூற்றிலிருந்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம் வாழ்க்கையின் இறுதி நோக்கம் இம்மைக்கு அப்பாற்பட்டது என்பதாகும்.

இஸ்லாத்தின் தோற்றம் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பொறுத்தவரையும் மனித வாழ்வுக்கு ஒரு சிறப்பான பரிசை வழங்குகின்றது. மடமை மௌட்டீகக் கொள்கை என்பவற்றிலிருந்து அவனுக்கு விடுதலையளிக்கின்றது. அல்லாஹ்வுக்கு இணை வைப்பவர்களுக்கு இறைவனுக்கும் அடியானுக்குமிடையே வேறு தரகர்கள் காணப்படுகின்றனர். வணக்க வழிபாடுகள் யாவும் இவர்கள் மூலமாகவே செயற்பட வேண்டியுள்ளது. ஆனால் இஸ்லாத்தில் ஒவ்வொரு மனிதனதும் தனது இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்ள முடியும். இங்கு எந்தத் தரகரும் அவசியமில்லை. இஸ்லாம் ஒரு சாராருக்கோ அல்லது ஒரு குழுவினருக்கோ சொந்தமானதல்ல. மேலும் இது ஒரு மத பலத்தையும் ஏற்படுத்தவில்லை. மனிதனுக்கு நம்பிக்கை கோட்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றை இஸ்லாம் வழங்கியுள்ளது. இதையே அல்லாஹ்வும் தனது திருமறையில்,

"(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை (ஏனென்றால்) வழிகேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (யடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது (1: 256) மேலும் "உம்மை இறைவன் விரும்பியிருந்தால் பூமியிலுள்ள அனைவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள். (எனவே) மனிதர்கள்(யாவரும்) விசுவாசிகளாகி விட வேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியும்?" (10:99)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வசனங்கள் இஸ்லாத்தின் தாராளத் தன்மையைப் புலப்படுத்துகின்றதல்லவா? இஸ்லாத்தைத் தான் பின்பற்ற வேண்டும் என்ற ஒரு பிடிவாதம் இஸ்லாத்திடம் இல்லை.

சிலர் இஸ்லாமியப் பெயர்களைச் சூடுவதால் இஸ்லாமாகிவிடலாம் என்று எண்ணுகிறார்கள். வேறு சிலர் இஸ்லாமிய உடை அணிவதால் முஸ்லீமாகி விடலாம் என்று எண்ணுகின்றார்கள். மற்றும் சிலர் கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் ஆகிய கடமைகளை நிறைவேற்றுவதால் மட்டும் பூரண முஸ்லிமாகி விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஈமானில்லாத நற்காரியங்களை மட்டும் செய்வதால் எவ்வித பலனும் இல்லை. ஈமான் என்பது குறிக்கப்பட்ட ஆறு விடயங்கள் மட்டுமன்று வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஈமான் பிரதிபலித்தல் வேண்டும். அத்துடன் கலிமா, தொழுகை முதலிய நற்கருமங்கள் எல்லாம் சேரும் போதுதான் பூரணமான இஸ்லாமிய வாழ்க்கை அமையும்.

" யாராவது எனது நேர் வழியைப் பின்பற்றினால் அவன் வழிகெடவும் மாட்டான். கஷ்டப்படவும் மாட்டான் என அல்லாஹ்தஆலா கூறுகின்றான்."

மேலும் மனிதனை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய இன,சாதித் துவேஷங்களும் இஸ்லாத்தில் இல்லை. இஸ்லாம் மனிதனது தோற்றம் நிலை பற்றித் தெளிவாக விளக்கிக் கூறுகின்றது. மனித இனம் யாவும் சமத்துவமுடையவை என்று கூறுவதுடன் மனிதர்களுக்கிடையே உயர்வை அளப்பதற்குரிய அளவுகோலையும் அறிமுகப்படுத்தி விட்டது. மனிதன் பிறப்பின் மூலமோ நிற, இன பரம்பரை மூலமோ சிறப்படைய முடியாது. ஆனால் அல்லாஹ்வை பயந்து நடப்பதைக் கொண்டும், நற்செயல்கள் புரிவதைக் கொண்டும் மட்டுமே சிறப்பை அடையலாம். இதனால் மனித உயர்ச்சிக்கு தேவையான வழிகள் வாய்ப்புகள் யாவும் தாராளமாகத் திறந்து விடப்பட்டுள்ளன. இதை அல்லாஹ்வும் தனது திருமுறையில் "மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஓர் பெண்ணிலிருந்து தான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை எனினும்) உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கிறானோ அவன் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான். நிச்சயமாக அல்லாஹ் (யாவையும் நன்கறிந்தோனும், நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான். (49:13)

குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரையில் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் கூட இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. அதாவது குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் இரு காதுகளிலும் அதானும் இகாமத்தும் சொல்லி ஊட்டி, அன்பும் பண்பும் நிறைந்த தாய்பாலை ஊட்டி வளர்த்தல், முதற் பேச்சும் இறுதிப்பேச்சும் கலிமாவாக இருக்கச் செய்தல், ஹலாலான உணவுகளை மாத்திரம் கொடுத்து வளர்த்தல், நற்பண்புகளை விருத்தி செய்தல், பிறருடன் அன்பாகப் பழகச் செய்தல்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலசலசுத்தி முதலியவற்றை இஸ்லாமிய முறைப்படி செய்யப்பழக்கல், ஏழு வயதாகும் போது தொழுகை, நோன்பு முதலியவற்றைப் பயிற்றுதல், மார்க்க அறிவைப் புகட்டல், ஹலாலான தொழில் ஒன்றைப் பழக்கல், குற்றங்களைத் தண்டித்தல், வயது வந்ததும் விவாகஞ் செய்து வைத்தல் என்பன பெற்றோரது கடமையும் பொறுப்புமாகும்.

இவற்றுடன் திருமணமான பின் கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் செய்ய வேண்டிய கடமைகள், குடும்ப வாழ்வை நடாத்தும் முறைகள், பெற்றோர், பிள்ளைகள், அயலார், சமூகம் ஆகியோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள், வியாபார முறைகள், தொழில் முறைகள், விவாகம், விவாகரத்து முறைகள், நீதியான ஆட்சி முறை, குற்றஞ் செய்தோரை தண்டிக்கும் முறை முதலியன இஸ்லாத்திலே கூறப"பட்டுள்ளன. நோய்வாய்ப்படும் போதும், மரணத்தறுவாயிலும், இறந்த வேளையிலும், அடக்கம் செய்த பின்னும் செய்ய வேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் இஸ்லாம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது. எனவே தான் இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம் எனக் கூறப்படுகின்றது.

வாழ்க்கையின் இறுதி நோக்கமாகிய சுவனபதியை அடைவதற்கு இஸலாம் வழிகாட்டுகிறது. இறைவனால் நமக்கு அருளப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதுடன் விலக்கல்களை செய்து வருவோமாயின் கட்டளைகளை நிறைவேற்றுவதால் ஏற்படும் பயனை அழித்து விடுவோம். பொய், களவு, சூது, கோபம், பொறாமை, புறம் முதலியவை விலக்கப்பட்டவை. எனவே மறுமை நாளில் சுவனபதியை எய்துவதே எமது நோக்கமாதலின், இம்மையின் சுகபோகங்களில் மூழ்கி விடாது நம்மைக் காத்துக் கொள்ளுதல் எமது தலையாய கடமையாகும். உலக வாழ்க்கையில் மதி மயங்கி விடக்கூடாது என்பதற்காக துறவறம் பூணலை இஸ்லாம் விரும்பவில்லை. இறுதி நாளில் நிரந்தர வாழ்வுக்காக இவ்வுலக வாழ்வில் நல்லது செய்து இல்லறத்தை நல்லறமாக நடாத்த வழி வகுத்துள்ள இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் கலிங்கத்துப்பரணி வகிக்கும் பங்கு



**மங்களேஷ்வரி பாலச்சந்திரன்**
(முதலாம் வருடம்)

பழந்தமிழ் நாடு களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம் தமிழ்இலக்கிய வரலாற்றிற்கு "இருண்ட காலம்" என மதிக்கப்பட்டது. இக்காலம் கி.பி 3 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏறக்குறைய மூன்றரை நூற்றாண்டுகள் நீடித்திருந்தது. இக்காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சி குன்றியது. தமிழ் நூல்களின் எழுச்சிக்குப் பலர் தடை செய்தனர். ஆனால், இக்காலத்திற்கு பிற்பட்ட பல்லவ, பாண்டிய, சோழா ஆட்சியில் தமிழ் தழைத்தது, மாட்சியுற்றது. தமிழ்ப் புலவர்கள் புத்துணர்ச்சி பெற்றனர். பக்திப் பனுவல்களும், சிற்றிலக்கியங்களும், காப்பியங்களும் எழுந்தன. வன்மை சால் மன்னர்களையும், வள்ளல் சால் வள்ளல்களையும் பற்றிய கவிகள் எழுந்தன. உலா, கலம்பகம், பரணி, பள்ளு, குறம், பிள்ளைத்தமிழ் போன்ற பல சிற்றிலக்கியங்கள் தோன்றின. இவ்விலக்கிய வடிவங்களிலே கலங்கத்துப்பரணி, பரணி நூல்களுக்கெல்லாம் தலையாயதாய், தனித் தன்மையுடன் தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றிலே வீறு நடை போடுகிறது.

இச் சிற்றிலக்கியங்கள் அடிவரையறை உடையதாய், பொருள் தனித்தும், தொடர்ந்தும் இருவகைச் செய்யுள்களைக் கொண்டு அமைந்தது என்று சொல்வர். உலா, தூது, பரணி போன்றன, பொருள் தொடர்ந்து வரும் சிற்றிலக்கியங்களாகும். சாதகம், கலம்பகம் என்பன பொருள் தனித்து வரும் சிற்றிலக்கியங்கள். ஆற்றுப்படை, சீட்டுக்கவி என்பன ஒரே பாட்டில் எழும் இலக்கியங்கள். இவ்வாறு பல வடிவங்களிலே இலக்கியங்கள் இருந்தாலும் கலிங்கத்துப்பரணி ஒரு வித்தியாசமான போக்குடன், வித்தியாசமான பாத்திரப் படைப்புக்களுடன் மிளிர்கிறது.

கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத்தலைவனாக விசயதரனது அரண்மனைப் புலவராக விளங்கியவர் சயங்கொண்டார். இவர் இயற்றிய பரணி இலக்கியத்தின் வாக்கிலும் போக்கிலும் ஈடுபட்டு, முன்னோரும் பின்னோருமான தமிழ்ப்புலவர்களெல்லாம்,

> "கலிங்கப்பரணி பெரும்பரணி கொண்ட பெருமான்" (விக்கிரம சோழ உலா)
> "கலிங்கரோடத் தென்றமிழ்க்தெய்வப்பரணி கொண்டு" ( தக்கயாகப்பரணி)
> "பரணிக்கோர் செயங் கொண்டார்" (படிக்காசுப்புலவர்)

எனப் பலவிதமாகச் சயங்கொண்டாரைப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டினர். செயங் கொண்டாரது கற்பனைத் திறத்திற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இப்பரணி விளங்குகின்றது. பரணி என்பது போரிடை ஆயிரம் வலிமைமிக்க யானைகளை அம்பு எறிந்து வென்ற தலைவனைப் பாடும் ஓர் இலக்கியம் என்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மாணவனுக்கு வகுப்பது பரணி”

எனும் தாழிசை மூலம் இதனை அறியலாம். சோழனின் இசையும், கருணாகரன் வீரத்தையும் எடுத்துக்காட்டும் கலிங்கத்துப் பரணி ஒன்பான் சுவைகளும் ஒருங்கமைந்த நறுஞ்சுவைக் களஞ்சியம். கடவுள் வாழ்த்து முதலாகப் பதின்மூன்று பகுதிகளைக் கொண்டது. இத்தகு நூலிலே இருவேறு உலகங்களைப் படைத்துக் காட்டுகின்றார். ஒன்று பேய் உலகு மற்றொன்று மக்கள் உலகு. பேய்களைப் பாடியது, இந்திரசாலம், பேய் முறைப்பாடு, காளிக்கு கூழி கூறியது, களம் பாடியது எனும் ஐந்து பகுதிகளில் பேய்களைப் பற்றியும், கடைத்திறப்பு, அவதாரம், இராசபாரம்பரியம், போர் பாடியது எனும் நான்கு பகுதிகளில் மக்கள் உலகைப் பற்றியும் கூறுகிறார். இதன் மூலம் தமிழ் இலக்கியத்திற்குத் தமது அபார கற்பனை மூலம் ஒரு புதிய வடிவத்தைத் தந்து, பேய்களைப் பாடுகிறார். இது வேறு எந்த இலக்கியத்திலும் காண முடியாத ஒரு சிறப்பு. இதனாலேயே தமிழ் இலக்கிய உலகில் கலிங்கத்துப் பரணி ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது எனலாம்.

வெற்றிப் பெற்றவனைப் புகழ்ந்து பாடுவதே இப்பரணி நூலின் குறிக்கோள். ஆயினும், இந்நூலின் பெயர் தோற்றவனைச் சார்ந்து அமைந்திருப்பது வியப்புக்குரியது. விக்கிரமசோழனுலா, குலோத்துங்க சோழன், பிள்ளைத் தமிழ், தஞ்சை வாணன், கோவை போன்ற சிற்றிலக்கியங்கள் தாம் பாராட்டும் தலைவனின் பெயரைக் கொண்டே பெயர் பெற்றிருத்தல் காணலாம். இதுவே மரபாக அமைந்துள்ளது. ஆனால், கலிங்கத்துப்லரணி அவ்வாறு பெறவில்லை. எனவே, தோற்றவனைப்பாடும் பெயரமைப்பில், தோல்வியுற்றோரைப் பெருமைப்படுத்தும் உயர்ந்த பண்பைக் காட்டுகிறார் கவிஞர். கடன் வாங்கியவனைப் பார்க்கும் தோறும், கடன் கொடுத்தவனுக்குதான் கடன் கொடுத்த பொருளைப் பற்றிய நினைவு வரும். இதனைக் “கடன் கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு போல” என்பர். இது போலத்தான் தோற்றவனின் பெயரால் அமைந்த கலிங்கத்துப் பரணியைப் பார்க்கும் தோறும், அப்பெயருக்கு உரியவனைத் தோற்கடித்தவனுடைய செயல்களே நினைவிற்கு வரும். இது மனித உள்ளத்தின் இயல்பு. மனிதன் மனநிலையை அறிந்து கொண்டு , வென்றவனின் பெயரால் பெயரிடுவதைக் காட்டிலும், தோற்றவனின் பெயரால் பெயரிட்டு, வென்ற சோழ மன்னனின் சிறப்பை இருமடங்கு பெருக்கி இருக்கிறார். எனவே, தோற்றவனின் பெயரால் ஓர் இலக்கியத்தைப் படைத்து தமிழ் இலக்கியத்திலே கலிங்கத்துப் பரணிக்கு தனித்துவமான ஓர் இடத்தை ஏற்படுத்திய பெருமை செயங்கொண்டாரையே சாரும்.

பழந்தமிழும் பொருந்தக் கவிபாடும் வன்மையுடையவர் செயங்கொண்டார்.
“ முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்
மொழியும் பொன்னே போற்றுவம்”

எனும் இலக்கிய மரபினை ஒட்டிப்பாடும் இயல்பினர். இவரின் பாடல்களில் இத்தகு கருத்துக்கள் காணப்படுகின்றன.

“பேணும் கொழுநர் பிழைகள் எல்லாம்
பிரிந்த பொழுது நினைத்து அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப் பொற் கபாடம் திறமினோ”

என்ற தாழிசையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல்லவை"

என்ற குறட் கருத்தும்,

" மாணார்க் கடந்த மறவெம் போர் மாறனைக்
காணாக்கால் ஆயிரமும் சொல்லுவேன் - கண்டக்கால்
பூண் அகம் தாவென்று புல்லாப் பெறுவேனோ
நாணோ(டு) உடன் பிறந்த நான்"

என்ற முத்தொள்ளாயிரப் பாடற் கருத்தும் அமைந்திருத்தல் கண்டு மகிழத்தக்கது. இவரின் பரணியில் ஐம்பத்துநான்கு சந்த வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. இத்தகைய பண்புகளை நாம் பிற பரணி இலக்கியங்களில் காணல் அரிது. இதன் காரணமாகவும் தமிழ் உலகு கலிங்கத்துப் பரணியைப் போற்றிப் புகழ்கிறது.

பரணி இலக்கியமாகிய கலிங்கத்துப் பரணி முழுவதும் தேவபாணி எனப்படுகிறது. "பரணி புறத்திணை பலவும் விராய் வருதலின் அது தேவபாணியாம் என்றது என்னை எனின், அவைகள் எல்லாம் காடுகெழு செல்விக்குப் பரணி நாளில் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி, அதனுள் பாட்டுடைத் தலைவனைப் பெய்து செல்லப்படுவன ஆதலால் அவை எல்லாவற்றாலும் தேவபாணியேயாகும்" எனப் பேராசிரியர் கூறுகிறார். பரணி இலக்கியத்தின் வீறு கொண்ட எழுச்சியை , தெய்வ சந்நிதானத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார், சயங் கொண்டார். பரணியில் வரும் பாடல்கள் சந்தம் கூட்டிப்பாடுவதற்கு ஏற்றன. இன்றும் பரணிப் பாடல்களை அவ்வச் சுவைக்கு ஏற்ப இசை கூட்டிப்பாடினால் கிடைக்கும் இன்பம் சிறந்ததே! ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ! விருத்தப் பாவில் சந்த வேறுபாடுகளை வைத்துக் கவிதை விளையாட்டு நிகழ்த்திய பெருங் கவிஞன், கம்பன். தமிழிசையில் சந்த வேறுபாடுகளைக் காட்டித் திருவிளையாடல் புரிந்தவன் சயங்கொண்டான். சிற்றிலக்கியமானாலும், படிப்பவர் மனதைக் கவரும் விதமாக அமைந்திருப்பதனாலும் தலை சிறந்த இலக்கியமாக திகழ்வது குறிப்பிடத்தக்கது.

ஏனைய இலக்கியங்களில் காணப்படுவதைப் போலவே செயங்கொண்டாரும் கலிங்கத்துப் பரணியிலே கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். ஆனால், இவர் இங்கு பாடிய கடவுள் வாழ்த்து, நூல் இனிது முடிய வேண்டும் என்று அமையவில்லை. இந் நூலினை இயற்றக் காரணமாக இருக்கும் பாட்டுடைத் தலைவன், பெரு வாழ்வு வாழ வேண்டும் என்ற அமைப்பில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பிள்ளைத் தமிழ் எனும் சிற்றிலக்கிய வகையில் பாட்டுடைத் தலைவனைக் காப்பாற்ற வேண்டும் எனக் கடவுளரை வேண்டிக் கொள்ளும் காப்புப்பருவம் காணப்படுகிறது. ஆனால், கலிங்கத்துப் பரணில் அவ்வாறன்று,

"அருமறையின் நெறிகாட்ட அயன்பயந்த
நிலமகளை அண்டம் காக்கும்
உரிமையினில் கைப்பிடித்த உபயகுலோத்
த மன் பயன் வாழ்க என்றே"

எனும் தாழிசையில் குலோத்துங்க சோழன் வாழ்தல் வேண்டும் என்பதற்காகச் சிவபெருமானை வணங்குவேன் என்று கூறுகிறார். திருமால், பிரமன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி, முருகவேள் முதலியோரின் இயல்புகளைக் குறிப்பிட்டு வணங்கும் போது, அவ் இயல்புகளுக்கு ஏற்பப் பாட்டுடைத் தலைவனின் இயல்புகளையும் அமைத்திருப்பது கலிங்கத்துப் பரணியின் தனிச் சிறப்பான பண்பு. இவ்வாறான சிறப்புக்களுக்கு நிகர் கலிங்கத்துப் பரணி என்பதனாலேயே தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தை வகித்துக் கொண்டது போலும்.

புறப்பொருள் பற்றிய இந்த இலக்கியத்திலே அகப்பொருளும் அமைத்துப் பாடியிருப்பது இதன் சிறப்பை மேலும் ஒளிரச்செய்கிறது. "கடைதிறப்பு" எனும் பகுதியைக் காதல் ரசம் மிக்கதாகப் படைத்திருக்கிறார். கவிஞர் "கடைதிறப்பு மட்டும் இல்லாதிருக்குமானால் பரணி இலக்கியத்தைக் கடலில் தூக்கி வீசி எறிந்திருப்பர்." என்பார் ஓர் ஆய்வாளர். அந்த அளவிற்குச் செல்லாமல் பயிலும் இலக்கியமாக மாற்றிய பெருமை கடைதிறப்பிற்கு உண்டு. இது தவிர்ந்த ஏனைய பகுதிகள் அனைத்தும் பயங்கர வர்ணனைகள் கொண்டதாகக் காட்சி அளிக்கின்றன. எங்கும் பேய்க் கூத்து, தடுக்கி விழுந்தால் பார்க்கும் இடமெங்கும் காளியும் கூழியும், பிணமும் நிணமும் இடுகாடும் சுடுகாடுமே தென்படும். எனவே தான் இப் பேய்களின் உலகத்திற்கு புகப் போகின்ற மனிதனுக்கு, மிகச் சுவையான பகுதியைக் காட்டி ஈர்ப்பது கடைத் திறப்பாகும். இப்பகுதியில் சிருங்காரச்சுவை ததும்பி நிற்கிறது. இளைய உள்ளம் பலவற்றில் ஆவேசம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இத்தகைய கலவியிலும் புலவியிலும் ஈடுபட்டவர்கள் எப்படித்தான் போருக்காக பிரிந்து சென்றார்களோ என நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இந்த வியப்பே, இளைஞர்களின் காதல் வாழ்வின் உச்ச நிலையினை அறிந்த துடிப்பே நூலினைப் படிக்க வைக்கிறது. எனவே தான் கடந்த ஞானியராலும் கடக்க முடியாத காதலைக் கடைதிறப்பில் பாடி, புறப்பொருளில் அகப்பொருளைக் கலந்து சிறந்த இலக்கியம் ஒன்றை எம்முன்னே உலாவ விடுகிறார் செயங்கொண்டார்.

"செக்கச் சிவந்த கழு நீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழண் மடவீர்
உம்பொற் கபாடம் திறமினோ"

இத்தாழிசையின் வேகம் இன்பச் சுவையின் மிடுக்கோடு விரைந்து பாய்கிறது. பெண்கள் கூந்தலில் செழுங்கழுநீர் மலர்களை சொருகுகின்றார்கள். இச் செழுங்கழு நீர் மட்டுமா சொருகுகிறார்கள்? இல்லை. இவ் உலகத்தில் வாழும் இளைஞர்களின் உயிர்களையும் அல்லவா பறித்து சொருகுகிறார்கள் என கூறுவது, கவிஞனின் அபார கற்பனையைப் புலப்படுத்துகிறது. சிற்றிலக்கியங்களிலே சிறந்த இலக்கியம் கலிங்கத்துப் பரணியே என்பது சாலப் பொருந்துகிறது.

கலிங்கத்துப் பரணியில் வரும் பாடல்கள் விலைமதித்தற்கரிய மணிகள் போன்றன. இப்புலவரை சொல்லின் மன்னர் என்று கூறலாம். அவர் சொற்பஞ்ச மென்பதை அறியார். சொற்களுக்காக எங்காவது இடர்ப்பட்டதாக தெரியவில்லை. செய்யுள் ஒவ்வொன்றும் ஆற்றோட்டம் போலத் தங்கு தடையின்றிச் செல்கிறது. பாடுவதில் ஈடிணையற்ற கவிச்சக்கரவர்த்தி என்கிறோம் செயங்கொண்டாரை. இச்செய்யுள்களை "தமிழி மொழுகு நறுஞ்சுவை" என விள்ளலாம். இப்பாடல்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது சுவையான் மிக்கது, எது சுவையாற் தாழ்ந்தது என அறிந்து கொள்ள முடியாதிருப்பது ஒரு விசேடம். ஒவ்வொரு பாடலிலும் சொல்வளம், பொருள் வளம் நிரம்பப் பெற்றது. இந் நூலினைக் கற்போரின் உள்ளத்தில் எவ்வகையான களைப்பும் ஏற்படுவதில்லை எனலாம். நான் களைப்படைந்த போது இந்நூலில் "எடும் எடும் எடுமென எடுத்தோர்" (404) போன்ற சில தாழிகளை முடுக்காகச் சில நிமிடம் படிப்பேன். அதனால் என் களைப்புத் தீர்ந்து விடும்" என்கிறார் மோசூர் கந்த சாமி முதலியார். இவ்வாறே ஒவ்வொரு பொருளையும் வர்ணிக்கும் இடத்து, அளவு கடந்து செல்லாது, விடயங்களை மாற்றி மாற்றி அமைத்திருத்தலோடு, நகை, வீரம், சோகம், முதலிய சுவைகளை இடையிடையே விரவ உள்ளம் கொள்ளை கொள்ளும் முறையில் அமைத்துப் பாடியிருத்தல் மிக வியக்கத்தக்கது.

குறிப்பாக, கலிங்கத்துப் பரணி சயங்கொண்டார் ஒரு நாவலின் தொடக்கம் போல இலக்கியத்தை தொடங்கி, அத் தொடக்கத்திலேயே இலக்கியத்தின் கருவினை விளக்கி இருக்கும் பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது. "பொதுவாக பழகிய காட்சிகளை வைத்துக் கொண்டு கற்பனை செய்வது அத்தனை கஷ்டமான காரியமன்று. ஆனால், பழகாத காட்சிகளைக் கற்பனை செய்து கொண்டு அத்தனையும் யதார்த்த முத்திரை தாங்கியனவாகத் தோன்றும் படி செய்வது அபூர்வமான காரியம் தான். அது, வீரிய முடிவுபெற்ற மேதையால் தான் முடியும். குரூரத்திலேயே ஜனித்து, குரூரத்திலேயே வளர்க்கப் பெற்ற , குரூரத்தையே பிரதிஷ்டை செய்து கொண்டு தோன்றும் படி செய்வது என்பது சாமானியமான காரியமன்று" என்று வியப்பில் ஆழ்த்துகிறார் பேராசிரியர் முத்து சிவன். இதிலிருந்து, செயங் கொண்டாரது கவித்திறன் புலப்படுவது மட்டுமன்றி, கலிங்கத்துப் பரணியின் சிறப்பும் புலனாகிறது. கோயிலின் அமைப்பு, கோயிலின் முன் உள்ள பலிபீடத்தில் வீரர்கள் அடையும் மரணம் போன்றவை கலிங்கத்துப் பரணியில் கூறப்பட்டிருத்தல் போன்று ஏனைய பரணி நூல்களில் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. இக்கலிங்கத்துப் பரணி காட்டும் கோயில் வீரத்தின் சாலையாக விளங்குகிறது. ஏனைய பரணி நூல்களோ தெய்வத்தின் சந்நிதானமாகக் கோயிலைக் காட்டுகிறது. இங்கே கலிங்கத்துப் பரணி எல்லா அம்சங்களிலும் வித்தியாசமான போக்குடையதாக மிளிர்வது குறிப்பிடக் கூடிய அம்சம்.


கொடூரமான களக் காட்சிகளைக் கண்முன்னே கொண்டு வந்து செயங்கொண்டார், பேய்களைப் பற்றிய வர்ணனையிலே அச்சச் சுவையைத் தவிர்த்து நகைப்புச் சுவை ததும்ப ஆக்கியிருப்பது சிறப்பானது.

"தடியால் மருந்தக் கூழெல்லாம்
தானே பருகித் தன் கணவன்
குடியான் என்று தான் குடிக்கும்
கூத்திப் பேய்க்கும் வாரீரே"

எனும் பாடலிலே இந்தக் கூத்திப் பேயின் செயலைக் கண்டு நகைப்புத் தோன்றுகிறது. இவ்வாறான பல்சுவைகள் பொருந்தப் பெற்று தமிழ் இலக்கிய வகையிலே தனித்துவமான ஓர் இடத்தைப் பிடிக்கிறது எனக் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, ஒட்டு மொத்தமாக நாம் நோக்குமிடத்து, காதல் வாழ்க்கையில் பாடல்களிலும், ஆன்மீக இலக்கியங்களிலும் திளைத்த மக்கள் இரத்த ஆறு ஓடும் பயங்கரப் போர்க்களத்தை எங்கே சுவைப்பார்கள்? மனிதனை விலங்காகவும், மனிதனின் அன்பு நிறைந்த இதயத்தினை வலிய கருங்கல்லாக ஆக்கக் கூடிய போர்களைக் கவிஞர்கள் எவ்வாறு பாடுவார்கள்? இதன் காரணமாகப் பரணி இலக்கியங்கள் குறைவாக எழுந்த போதும், தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றிலே செயங் கொண்டாரது கலிங்கத்துப் பரணி நிகரற்ற, தனிச் சிறப்புள்ள காவியமாகத் திகழ்வதை நாம் மறுக்கவோ மறக்கவோ முடியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் சு. வித்தியானந்தன் நாட்டுக்கூத்துக்கு ஆற்றிய சேவைகள் பற்றிய கண்ணோட்டம்



**ஹசன் புஹாரி மஹருன் நிஸா**
(விடுகை வருடம்)

பாரம்பரிய கிராமியப் பாடல்கள், கிராமியக்கூத்துக்கள் ஆகியவற்றைப் பொறுத்த வகையில் 1950 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட காலப்பகுதி ஒரு முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்திலே ஈழத்தில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் கிராமியக் கலைகள் உயிரோட்டம் பெறுகின்றன.

படித்தறிவற்ற பாமரர்களின் படைப்புகள் என ஓரங்கட்டப்பட்டிருந்த கிராமியப் பாடல்களுக்கும் ஆடல்களுக்கும் புத்துயிர் அளிக்கும் பணியிலே படித்தவர்களும், சமூக மதிப்புப் பெற்றவர்களும், அபிமானத்துடன் தம்மை அர்ப்பணிக்கின்றனர். இந்த அடிப்படையில், ஈழத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்.

தமிழ் நாடக மேடையின் வரலாற்றில் தனியிடம் பெற்ற சிலரில் மிக முக்கியமானவர்களில் ஒருவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களாகும். இலங்கை கலைக்கழக நாடகக் குழுவிற்குத் தலைவராக இருந்து பணியாற்றிய இவர் நாட்டுக் கூத்து போன்ற கிராமிய கலைச் செல்வங்களின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்துள்ளார். இக்காலத்திலே சிற்சில கிராமங்களிற் பாமர மக்கள் மட்டும் காலத்திற்கு காலம் ஆடி வந்த வடமோடி தென்மோடிக் கூத்துக்களைப் படித்தவரிடையே அறிமுகமாக்கும் முதற்படியாகப் பாடசாலைகளுக்கிடையிலும், மன்றங்களுக்கிடையிலும் போட்டிகளை உருவாக்கினார். இத்தகைய போட்டிகளின் போது அவர் நேர்முகமாகவே சமூகங் கொடுத்தார். அண்ணாவிமாரோடும், இத்துறைசார் அறிஞர்களோடும் கலந்துரையாடும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. அவர் பிற்காலத்தில் ஆற்றவிருந்த மீள் தேடலுக்கு இது பெரும் பங்களிப்பினைச் செய்தது. பிற்காலத்திலே அவரால் நெறிப்படுத்தப்பட்ட கூத்துக்களிலே தலை சிறந்தவர்களாகக் கருதப்பட்ட சிலர் பாடசாலை மட்டத்தில் நடைப் பெற்ற கூத்துப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றவர்களாகும். இவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக கலாநிதி சி. மௌனகுரு காணப்படுகின்றார்.

இத்தகைய மாணவர் பலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் சென்றதும் இரண்டாவது கட்ட வளர்ச்சி நெறிப்படுத்தப்படுகின்றது. பேராசிரியர் அவர்கள் கூத்துக்கள் அருகிப் போவதற்கான காரணங்களை நன்கு அறிந்திருந்தார். விரைவாக மாறிவரும் சமுதாயத் தேவைகளுக்கு வசைந்து கொடுப்பதிலே தான் கலைகளின் நீள் நிலைப்பாடு தங்கியுள்ளதென்பதை உணர்ந்திருந்தார். மட்டக்களப்புக் கூத்துக்களைப் பொறுத்தவரை அவற்றிற்கு நீண்டகால மரபொன்றிருந்தது. அந்த மரபு சிதையா வகையில் காலத்திற்கேற்ற புதிய நாடக உத்திகளையும், ஒலி, ஒளி மேடையடைப்புக்களையும் கைக்கொள்வதிலே அவர் பேரார்வங் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மாணவர்கள் நடிப்பல் வல்லவர்கள் என்பதைப் பேராசிரியர் கணபதிபிள்ளை நாடகங்கள் எடுத்துக்காட்டியது போல்: பழம் பெருமை வாய்ந்த கூத்துக்களைக் கூட காலில் சலங்கைக் கட்டி ஆடிப்பாடி நடிக்க வல்லவர்கள் என்பதை என்பதை பேராசிரியர் சு. வித்தியானந்தன் தான் மேடையேற்றிய நாட்டுக் கூத்துக்களால் எடுத்துக் காட்டினார். பேராசிரியர் ஒருவர் நெறிப்படுத்த அதே பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆண்,பெண் பட்டதாரி மாணவர்கள் பங்கேற்று நடித்தார்கள். 1962 இல் கர்ணன் போரும், 1963 இல் நொண்டி நாடகமும், 1964 .ல் இராவணேசனும், 1966 இல் வாலிவதையும் அரங்கேற்றப்பட்டன.

இவை சகலராலும் அரங்கேற்றப்பட்டு இரசிக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை. மேற்கூறப்பட்ட கூத்துக்கள் அனைத்தும் பலரும் பார்த்து பயன் பெறும் முறையில் நவீன கலைத்துவ வடிவத்துடன் மேடையேற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கூத்து மரபின் ஆடல், பாடல் பிசகாது கூத்திற் பயன்படும் அதே வாத்தியங்களைக் கொண்டு மரபு பிறழாது இக"கூத்துக்களை செம்மைப்படுத்தினார். ஆடல், பாடல, உடை, ஒப்பனை என்பன செம்முமப்படுத்தப்பட்டன. அதிகளவான ஆட்டமும், மிக நீளமான இழுத்துப்பாடலும் குறைக்கப்பட்டன. பின்னணி பாடியவர்கள் மேடையின் பின்புறத்தில் அரை வட்டவடிவமாக நிறுத்தப்பட்டனர். இவர்களின் முன்பாகவே நடிகர்கள் தோன்றினர். காட்சி மாற்றமும், சூழலும் ஒலியினால் உணர்த்தப்பட்டன. நடிப்பிற்கும், உச்சரிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பாடலின் இசை செம்மைப்படுத்தப்படடது. மத்தளம், தாளம், ஆகியவற்றுடன், உடுக்கு, சவனிக்கை, மேளம், சங்கு ஆகிய பாரம்பரிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. பெண்பாத்திரத்தை பெண்களே தாங்கினர். பெண்களுக்கான பிற்பாட்டையும் பெண்களே பாடினர்.பாத்திரத்தின் குணாம்சத்தை வளர்த்துச் செல்லல் நவீன நாடக உத்திகளைப் பயன்படுத்தல் எனச் சில மாற்றங்களும் இடம்பெற்றன.இதனை மீள் கண்டுபிடிப்பு முறை என்றும் கூறலாம். இந்த மீள் கண்டு பிடிப்பு என்பது பாரம்பரியத்தை அப்படியே எடுத்து மாறாது நாற்று நடவு செய்த ஒரு முறைமை அல்ல. இது மீள் கண்டுபிடிப்புச் செய்யப்படுகின்ற பொழுதே பல மாற்றங்கள் இதில் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக பழைய வடிவத்திலே காணப்படாத "கோரஸ்" (குழுப்பாடல்) என்பதை மீள் கண்டுபிடித்த பொழுது பயன்படுத்தினார்கள். மேலும் நவீன நாடக உத்திகளான காண்பியங்களை - ஒளியை வேட ஒப்பனையைப் பயன்படுத்தினார்கள். நாடகத்தின் அமைப்பினை மாற்றினார்கள். நாடகம் காட்டப்படுகின்ற நேரத்தைக் குறைத்தார்கள். வட்டக்களரி அரங்கை, புறொசேனிய மேடையாக மாற்றினார்கள். இவ்வாறு நவீன கூத்து நாடகம் மேடையேற்றப்பட்டது.

மேலும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் நாட்டார் பாடல்களையும், நாட்டுக் கூத்துக்களையும் முறையாகப் பரிசோதித்து வெளியிட்டார். மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் நாட்டுப்பாடல்கள் (1960), மன்னார் நாட்டுப்பாடல்கள் (1964) என்ற பாடல் தொகுப்புக்களும், அலங்கார ரூபன் நாடகம் (1962), என்றிக்கு எம்பரதோர் நாடகம் (1964), ஞானசவுந்தரி நாடகம் (1967), மூவிராசாக்கள் நாடகம் (1966) என்பவற்றிலே முதல் முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் நாட்டுக் கூத்துக்களையும் அவர் மூலம் காண்கின்றோம். நாட்டுக் கூத்துக்களை நவீனமாக்கி, புதிய மேடைக் கருவிகளின் உதவியுடன் அரங்கேற்றி அவற்றிற்கு ஒரு மவுசு ஏற்படுத்திக் கொடுத்தவரும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்பதை மறக்க முடியாது.

மேலும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மரபு வழி நாடகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியவர் என்று கூறலாம். நேரக்கட்டுப்பாடு அரங்குக் கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்டு வந்தார். பாமர மக்களையும், மத்திய தர வர்க்க மக்களையும் பார்வையாளர் ஆக்கினார். வட்டக்களரி முறையில் இருந்து ஒரு பக்கம் மாத்திரம் பார்க்கும் மேடையை அமைத்தார். படித்தவர் பாத்திரமேற்கச் செய்தார். எவ்வாறாயினும் மரபு வழி நாடகத்தைப் பேணுவதே இவரது நோக்கமாக இருந்தது.

"நாட்டுக் கூத்துக்கு புத்துயிர் அளித்த பெருமை சு. வித்தியா-னந்தனையேச் சாரும்" என்று கலையரசு சொர்ணலிங்கம் குறிப்பிடுகிறார். பேராசிரியர் சு. வித்தியானந்தன், நடிகமணி வி.வி. வைரமுத்துவின் மயான காண்டம், பக்த நந்தனார், கோவலன் ஆகிய அண்ணாவி மரபு நாடகங்களை மேடையேற்றுவதற்கு முன்னின்று உதவியுள்ளார். 1956 ஆம் ஆண்டு கலைக் கழகத்தின் தலைவராக இருந்த இவரின் முயற்சியால் நாட்டுக் கூத்து நாடகம் மறுமலர்ச்சி பெற்றது என்றால் மிகையாகாது. கிராம புறங்களில் ஆடிப்பாடி வந்த கூத்தினை நகர்புற மாந்தரும் கண்டு இன்புறும் வண்ணம் அவற்றை நகர்புற மக்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை பேராசிரியர் சு. வித்தியானந்தனையேச் சாரும். சுருங்கக் கூறின் நாட்டுக்கூத்திற்கு அவர் ஆற்றிய சேவை ஈழத்து தமிழ் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும் என்றால் மிகைப்படாது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

# NEW KESAVAN BOOK STALL


Leading Book Seller
School books, Photo Copy, IDD & local Calls,
Stationery, Local & Indian Magazines.





No. , Dunbar Road,
Hatton.
Tel: -051-2222504, 2222977

*With Best Compliments from:*



# REKHAA PHARMACY

Pharmacist


No. 72, Main Street,
Hatton.
Tel: 051-2222649



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# B.Ed. DEGREE COURSE 2002 - 2005

## SECOND BATCH




SEATED ( From left to right ) MR. A.L.M. HANIFFA, MRS. A.A. FIRDOWZIYA, MRS. A.R. SATHYENDRA (LECTURER), MRS. C RAVICHANDRIKA (LECTURER), MISS. N.M. THAHA (LECTURER), MRS. R. NANDAKUMAR (LECTURER), MRS. S. RUKYA HASMI (LECTURER), MRS. H.M. WADALIYADDA ( PRINCIPAL G.H.S ), AL-HAJ. M.Y.M. MUSLIM ( SENIOR LECTURER), MR. S. DEVAMANOHARAN (LECTURER), MR. S.L.A. SATHTHAR (LECTURER), MRS. M.S.C. RATHNASAMI (LECTURER), MRS. R. CHANDRIKA (LECTURER), MRS. R. INDRA GHANDI, MR. A.J. ARULNAYAGAM, MR. V. SUHUMAR.

STANDING 1st Row (From left to right): MR. S. GURUNATHAN, MRS. K.M. UMMU NAZEEHA, MRS. MEHRUNNISA BUHARY, MRS. M. SIVAGANESHER, MRS. L. SATHASIVAM, MRS. A. THULASIAMMAH, MRS. S. SHIVANTHINI, MRS. N. KOWSALADEVI, MRS. C. ARUNTHADHI, MRS. SHOBANA NADARASA, MRS. LOGESHWARIY DANABALAN, MRS. S.H.M. HUWAIS, MRS. M.A. SEENATHUL WARDIYA, MRS. M.M. FATHIMA RAFAKA, MRS. S.M. SITHY SANFARA, MRS. A.A. FATHIMA RAFEEKA, MR. K. SELVARAJ.

STANDING 2nd Row (From left to right ) MR. N. PATHMANATHAN, MR. T. VADIVEL, MR. M.I.M. ROWFEEK, MR. E. INDRAKUMAR, MR. A.H. SUBAIR, MR. M.M. NILABDEEN, MR. A.S.M. FELIX, MR. V. PRABAKARAN, MR. H.L. JIFFRY, MR. S. ANANDARAJAH, MR. A.L.M. NAWFER, MR. K. SIVANESON, MR. S. HASEEM, MR. M.M. NAWAS, MR. M. VISVANATHAN, MR. A.M.M. ILYAS.

STANDING 3rd Row (From left to right) MR. I.F.R.S. DEVADAS, MR. M.A.M. JHAHIR, MR. R. SRITHARAN, MR. S. ANANTHAN, MR. I.J.A. PRADEEP KUMAR, MR. N. RAVICHANDRAN, MR. R. SHANTHA KUMAR, MR. OMERDEEN SADHAN, MR. M.H.M. MUBARK, MR. N.P. FALEEL CAFOOR, MR. I. ABDUL RAHUMAN, MR. M.A.M. MUBARAK, MR. H.L.M. FUWARD.

ABSENTS MR. S. MANALAN, MR. S. NAWARATHNAM, MR. A.M. NASAR

Pix By : Perfect Digital Color Lab. Kandy 0812 - 222658



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# SRI LEKAH JEWELLERS

*22kt. Fine and Mod Jewellery*

55/57, YATIṆUWARA VEEDIYA,
KANDY.
Tel: 08-2232430, 2229105

---

*With best Compliments from*

# ZAROOK TRADERS

**Dealers for Clipsal Accessories**
**Multilac Paints,**
**Sthil Chain Sawa & Spare Parts**

66A, King Street,
Kandy.
Tel: 08-2223525

14/4, New Bazaar St,
Nuwara Eliya.
Tel: 052-2222587



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*

# ASHAD TRADING COMPANY

**DEALERS IN HARDWARE ITEMS, FANCY GOODS, SCHOOL ITEM & ALL CONSUMER GOODS.**

43, 48, New Town, Galnewa.
Tel: 025-2269595

---

*With best Compliments from:*

நாளாந்த வீட்டுப்பாவனை பொருட்களையும்
கட்டிட நிர்மாணப் பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாய விலையில்
ஒரே கூரையின் கீழ்
பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடமும்
நாட வேண்டிய இடமும்,


# N.M.S. TRADING CO. (PVT) LTD.

Master Town,
Elizebath Jeya Mawatha, Balaluwewa,
Palagala.
Tel: 025-2263568, 2263326



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# SUPREEM STEEL

**Manufacture out of zinkotte**
**non corrosive steel furnitures,**
**Quality Steel, Household Rables,**
**Chairs, Filling Cabinets, Etc.**

INDUSTRIAL ESTATE, PALLEKELLE, KUNDASALE.

*Superior Quality for Customer Satisfaction.*

*With best Compliments from*

## KRISHNA STORES

***Crop Care &***
***Pest Control Services***

**163, Colombo St, Kandy.**
**Tel: 08-234204, Fax: 08-224522**

*With best Compliments from*



## SIRI GOLD HOUSE

Specialist in 22kt Gold Jewellery

*233, LOWER STREET,*
*BADULLA.*
*Tel: 055-2222676*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*

# A ONE

**A.H.M. FAHIM**
A ONE Rice Mill
Horapola, Kekirawa.
Phone: 025-2264878,
Mobile: 0777-812501

**A.H. MAHIR**
A ONE Trade Centre
230, Main Street, Kekirawa.
Phone: 025-2264526
Mobile: 0777-388817

---

*With best Compliments from*



# S.M.A. TRADING CO.

**HARDWARE, POWER TOOLS, SPRAYERS, PAINTS & ELECTRICAL GOODS.**

98, Main Street,
KEKIRAWA.
Tel: 025-2264328



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:

# J.M.M. GRINDING MILLS

**No. 1, Rangala Road,**
**Udispattuwa.**

---

*With best Compliments from:*



**MOVLAVI A.M. ISMAIL**
(Retired Teacher) / (Proprietor)



# LUCKY

**HARDWARE & COMMUNICATION**

General Hardware Merchant of Paint, Glass Item, P.V.C Pipes,
Building Materials, & Electrical goods

KALAWEWA ROAD, BULANAWEWA, DEWAHUWA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM:


# Rahmath Trading Company

IMPORTERS, GENERAL MERCHANT
ALL KINDS OF HOUSE HOLD & GIFT ITEMS ETC.

**NO. 25/2, DAM STREET, COLOMBO 12.**
T'phone: 2434568
Mobile: 0777-515372

---

*With best compliments from:*



**I YOUR SHOE DESIGNER..!**

# BOMBAY BAZZAR

**12, SHOPPING COMPLEX,**
**WELIMADA.**
**TEL: 057-45603, RES.: 057-45602**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# Mansoor Tex

**Dealers in Textiles & Ready made Items**

**6/A, HARRISON JONES ROAD,**
**MATALE.**
**Tel: 066-22631**

---

*With best Compliments from*



# *Namagal Tex*


**Dealers in Textiles,**
**Ready made Sarees & Salwar Kits.**

***67, Main Street, Hatton.***
***Tel: 051-22383***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# JEYANTHI STORES

**311, MAIN STREET,**
**MATALE.**

---

*With best Compliments from*



# Sooriya

*Stationess*

Dealers in Paper & Stationery
Specialist in Computer Ribbons, Cartrige,
Photocopy Toners, All Kind of School & Office Items

**No. 5, 2nd Rohini Lane,**
**(Off Malwatta Road) Colombo 11.**
**Tele/Fax: 4713989,**
**Mobile: 0714-264851**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் அபிவிருத்தியே மலையகத்தின் வளர்ச்சி



ஆர். ஸ்ரீதரன்
(விடுகை வருடம்)

இலங்கையில் தேயிலை தோட்டங்களுக்கு கூலிகளாக தென்னிந்தியாவிலிருந்தும், கேரளாவிலிருந்தும் அன்று அழைத்து வரப்பட்டவர்களே இன்று எங்கள் மலையக சமுதாயம்.

அன்று குதிரை அடைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த லயங்கள், கூலிகளாக அழைத்து வரப்பட்டவர்களுக்கு தங்குவதற்கு வழங்கப்பட்ட இன்றைய லயங்களாகும்.

கூலித்தொழிலாளிகள் வேலைக்கு சென்றதும் அவர்களது குழந்தைகள் தேயிலை கொழுந்தை பறித்து விளையாடுவதை தடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டது தோட்டப்புற பாடசாலைகளாகும்.

இவ்வாறு உருவான தோட்டப்புற பாடசாலைகள் கட்டிடங்கள், ஆசிரியர்கள், போன்ற வளப்பற்றாக்குறையுடன் நடாத்தப்பட்ட காலம் மறைந்து 1977 ற்கு பின் தோட்டப்பாடசாலை என பிரிக்கும் நிலை மாறி அரசாங்க பாடசாலைகள் என்றழைக்கப்பட்டன. இதனுடன் இலவச கல்வியும் இணைய மலையகத்தின் கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டது.

இன்று வெளிநாட்டு உதவிகள் மூலம் (சுவீடன், ஜெர்மன்) மலையகப் பாடசாலைகளின் கட்டிட வசதிகள் தீர்க்கப்பட்டாலும், பெரும்பாலான மலையகப் பாடசாலைகளில் கட்டிட வசதி குறைபாடு இன்றும் காணப்படுகிறது. மேலும் 1990 களைத் தொடர்ந்து மலையகப் பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் பிள்ளைகளின் தொகை அதிகரித்து வந்ததால் இட வசதியின்மையுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. தளபாட, உபகரணங்கள் பற்றாக்குறை, விஞ்ஞான ஆய்வு கூட மனையியற் கூட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை, போக்குவரத்து வசதியின்மை அத்துடன் வயது கூடிய மாணவர்கள் வகுப்பறையில் கற்றல், பெற்றோர் கல்வியறிவு குறைவு அல்லது இன்மை என்பன பெருமளவில் கல்வியில் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்களினதும் பங்களிப்பை குறைக்கும் அல்லது பாதிக்கும் செயற்பாடுகளாக கொள்ளலாம்.

மலையக பாடசாலைகள் பெருமளவில் நகர் பிரதேசங்களை அண்டியதாக அமைவது குறைவு. மாறாக நகரிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பால் பாடசாலைகள் அமைவதால் ஆசிரியர்கள் பெரும் தூரம் நடந்து சென்று கற்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அப்படியே அங்கு தங்குமிட வசதி இருந்தாலும் பெரும்பாலான ஆசிரியர்கள் அதில் தங்குவதற்கு விரும்புவதில்லை. ஏனெனில், அங்கு அடிப்படை வசதி இல்லை. அன்றாட நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளை அறியும் வாய்ப்பில்லை. குடும்பத்தை பிரிந்திருப்பதில் சிரமம், பாதுகாப்பில்லை இது போன்ற இன்னோரன்னவற்றால் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதில் காலதாமதம் ஏற்படுவதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே பாடசாலையிலிருந்து வெளியேறுவதும் தவிர்க்க முடியாதவையாகின்றது.

இதனால் பாடசாலையில் கலைத்திட்டம், பாடத்திட்டம் என்பன முறையாக பூர்த்தி செய்யப்பட முடியாததாகி விடுகிறது. இதன் போது மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளை நாடிச் செல்லும் கலாசாரம் உருவாக வாய்ப்பேற்படுகிறது. இந்நிலை சகல மாணவர்களுக்கும் இயலுமானதாக அமையாது.

மலையகத்தில் ஆசிரியர் பாடசாலையில் எதிர்நோக்கும்மிக முக்கியமான பிரச்சினை பிள்ளைகளை குறிப்பிட்ட வயதில் பாடசாலையில் அனுமதிக்காமல் விடுவதாகும். இந்நிலைக்கு பெற்றோரின் வறுமை, கல்வியறிவின்மை போன்றன காரணமாக இருந்தாலும் ஆசிரியர்களின் செயற்பாடு, குழந்தைகள் பராமரிப்பு நிலையத்துடன் தொடர்பு போன்றவற்றால் இவை நிவர்த்தி செய்யப்படலாம். இருப்பினும் இவ்வயது கூடிய மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு தரத்தில் சித்தியடைய தவறும் பட்சத்தில் அவர்களின் வயதை கருத்தில் கொண்டு சித்தியடைய செய்விக்க வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர்.

வறுமையான சூழலிலும், கல்வியறிவற்ற சமூகத்திலிருந்து வரும் கசல மாணவர்களும் மீத்திறன்மிக்க மாணவர்களாக எதிர்பார்க்க முடியாது. எனினும் பெருந்தோட்டத்துறை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகள் மற்றும் ஓரிரு படித்த தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வியறிவிலும், செயற்பாட்டிலும் ஏனைய மாணவர்களை விட முன்நிற்கின்றனர். இம்மாணவர்களை ஆசிரியர்கள் கருத்தில் கொண்டு செயற்படுகிறார்கள். இக்குழுவில் ஏனைய மாணவர்களில் ஒருசிலரை இணைத்துக் கொள்ளவும் ஆசிரியர்கள் முயற்சிக்காமலில்லை.

அரச ஊழியர்களில் ஆசிரியர்கள் பெறும் வருமானம் வாழ்க்கைச்செலவுடன் ஒப்பிடும் போது சொற்பம் என்பது யாரும் கூறித் தெரியத் தேவையில்லை. இந்த நிலை நகரை அண்டிய அல்லது நகர்புற ஆசிரியர்கள் மேலதிக வருமானம் பெற மாணவர்களுக்கான ரியுசன் வகுப்பு அல்லது வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு வருமானம் பெற முடியாத ஆசிரியர்களின் மனநிலை பாதிப்புக்குள்ளாகிறது. எனவே இங்கு கற்பிப்பவர்கள் ஆசிரியத்துவத்தை விரும்பி செய்யாத ஒரு நிலை காணப்படுகிறது. தவிர தாம் வைக்கும் ரியுசன் வகுப்புகளுக்கு வரும் மாணவர்களில் சிலருக்கு சலுகை காட்டும் ஆசிரியர்களும் இல்லாமல் இல்லை.

ஆனால், ஒருவர் ஆசிரியராக தெரிவுசெய்யப்பட மாணவர் தொகை ஒரு காரணமாக உள்ளது என்றும் அடிப்படை தொழில்சார் தகைமையான ஆசிரியர் பயிற்சி, கல்விமாணிப் பட்டம், பட்டப்பின் டிப்ளோமா போன்றவை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு அரசு சம்பளத்துடன் விடுமுறையும் வழங்குகிறது என்றும் அல்லது பட்டதாரி கற்றலில் ஈடுபடும் ஆசிரியர்கள் தம்மை நம்பிவந்த சிறார்களின் கற்பித்தல் நேரத்தில்தான், அவர்கள் பட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார்கள் என்பதை மறந்துவிடும் ஆசிரியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதேவேளை தான் பெற்ற பயிற்சிகளை மாணவர் மத்தியில் வழங்கி அவர்களது கல்வி கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தும் ஆசிரியர்களும் இல்லாமலில்லை.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில், இணைப்பாட விதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டி, சுற்றுலா, நவராத்திரி விழா, சிரமதானம் போன்ற சில செயற்பாடுகளின் போது பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டங்களில் பெற்றோர் ஆர்வத்துடன் பங்குபற்றாமையும், நிதி விடயங்களில் பூரண ஒத்துழைப்பு வழங்காமையும் ஆசிரியர்களின் முயற்சியை தடைசெய்வதாக அமைகின்றன.

மலையக பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்களினால் மதிக்கப்படாதவிடத்து ஆசிரியர்கள் பெருமளவு விரக்தியடைகிறார்கள். எடுத்துக்காட்டாக பாடசாலையின் சுற்றாடலை சுத்தப்படுத்த மாணவர்களை பயன்படுத்திய பின்னும், ஆசிரியர்களால் மாணவர்கள் தண்டிக்கப்பட்ட பின்பும், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை பெற்றோர் விமர்சிப்பதும், பொது இடங்களில் பாவிக்கக்கூடாத வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டு தூற்றுவதைக் காணலாம்.

இவ்வாறு மலையக ஆசிரியர்களது மனப்பாங்கு காணப்பட மாணவர்களின் மனப்பாங்கும் நிலையும் எவ்வாறு இருக்கிறது? என்றால்...

வறுமைக்கோட்டின் கோட்டிற்குள் வாட்டமுறும் பெற்றோரும் கல்வியில் பின்தங்கிய சமூகமும் நவீன உலகுடன் தொடர்புற துடிக்கும் மலையக மாணவர்களின் கல்வி பெரிய விருட்சத்தை ஏற்படுத்த வேண்டும்.

அன்றாடம் உழைத்து உணவிற்கே போதுமான பணவசதி இல்லாத பெற்றோர்களின் நிலை கண்டு மாணவர்கள் தன் கல்விக்காக அவர்களிடமிருந்து பணத்தை எவ்வாறு எதிர்ப்பார்ப்பது? என அங்கலாய்க்கின்றனர். குணநல உள்ளீடுகள் மூலம் பாடசாலையில் வசதிகள் கிட்டினாலும் அவை முழுக்கல்வியையும் பெற போதுமானதாக அமையாததால் இடைநடுவில் கல்வித்தொடரலை நிறுத்துகின்றனர்.

இதே வேளை தன் வயதை ஒத்த பிள்ளைகள் நகர்பகுதியில் தொழில்புரிந்து பண்டிகை காலங்களிலும், திருவிழாக்காலங்களிலும் நாகரீகமான தோற்றத்துடன் தோட்டங்களுக்கு வரும் போது இது பாடசாலையில் பல சிரமங்களுக்குள் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர் மனதில் ஒரு மோகத்தை ஏற்படுத்துகின்றது. இவ்விளைவால் நகரிலிருந்து வரும் பிள்ளைகளுடன் பாடசாலை மாணவர்களும் இணைந்து தொழிலுக்கு செல்கிறார்கள்.

பாடசாலையை விட்டு வீட்டிற்கு செல்லும் மாணவர்கள் பெற்றோர்களுக்கு பெருமளவு உதவி ஒத்தாசை புரிவதில் சளைப்பதில்லை. பெண்பிள்ளைகளானாலும் சரி ஆண் பிள்ளைகளானாலும் சரி சமையலிலிருந்து கடைக்குப் போய் பொருட்கள் வாங்குவதிலும் விறகு சேர்ப்பதிலும் சகலரும் ஈடுபடுகின்றனர். இதனால் பாடசாலையிலிருந்து வழங்கப்படும் வீட்டு வேலைகளை முடிக்காமல் மறுநாள் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர், பாடசாலைக்கு வட்டம் போடுபவர்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். வீட்டில் பல வேலைகளை முடித்த பின் பாடசாலை வேலையை தொடர நினைக்கும் போது மின்சார வசதி இன்றி குப்பி லாம்புகளுடன் சிலர் போராடிக்கொண்டிருக்கும் போது மதுபானம் அருந்திவிட்டு கும்மாளம் போட்டுக் கொண்டிருப்பவர்களால் சிரமப்படும் மாணவர்களின் நிலை மிகவும் கவலையாக இருக்கிறது.

அத்துடன் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்து ஆரம்பக் கல்வியை முடித்து தரம் ஆறுக்கு செல்ல முயலும் போது போக்குவரத்து நெரிசல், போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் நடந்து செல்வது இது போன்ற துர்ப்பாக்கிய நிலையும் மாணவர்களுக்கு ஏற்படுகின்றன. இத்துடன் பொருளாதார நெருக்கடியும் இணைய பிள்ளைகள் கல்வியில் வெறுப்பை ஏற்படுத்துகின்றது.

மாறாக க.பொ.த. (உ/த) கற்கச் செல்லும் மாணவர்கள் பலர் தனது பொருளாதாரத்திற்கும், போக்குவரத்து வசதிக்கும் ஈடுகொடுக்க முடியாத பிரிவுகளை தெரிவுசெய்து பின் பரீட்சையில் தோல்வியுற்றதும் அதனை பார்க்கும் ஏனைய மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவதிலிருந்து விலகிச் செல்கிறார்கள்.

அப்படியே மூன்று பாடங்களில் சித்தி பெற்றுள்ள மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறும் நோக்கில் கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்யும் போது அவை நிராகரிக்கும் பட்சத்தில் மனம் நொந்து செயற்படுவது தற்போது பாடசாலை செல்லும் மாணவர்களின் ஆர்வத்தை குறைக்கின்றது. எமது பகுதியில் க.பொ.த. (உயர்) தரத்தில் மூன்று பாடங்கள் சித்திபெற்று வறுமையின் காரணத்தால் தேயிலை தோட்டங்களில் கொழுந்து பறிக்கும் சில பிள்ளைகளை காணலாம். அதேவேளை ஓரளவு படித்து விட்டு தோட்டங்களில் தொழில்புரிய மனம் இடங்கொடுக்காமலும், செய்வதறியாது வீதிகளில் நேரத்தை செலவிடும் பிள்ளைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதனால் மலையக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்பளிக்க வேண்டும். கல்வியை தனது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் மத்தியில் ஏற்படவேண்டும். இதற்கு தகுந்த ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மலையக பாடசாலைகளில் உள்ள நூல் நிலையங்களை மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் பாவித்து பயனடைய வாய்ப்பளிக்க வேண்டும். வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கிறது என்பதற்கேற்ப அனைவரையும் வாசிக்கும் அளவுக்கு மாற்றியமைக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள இந்திய தூது வரகத்தின் பலவிதமான செயற்பாடுகளையும் அவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மலையக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், இளைஞர்களுக்கும் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஹட்டன், கொட்டகலை பகுதிகளிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்தும், ரம்பொட பகுதியிலுள்ள கலாச்சார நிலையத்திலிருந்தும் மலையக மாணவர்கள், இளைஞர்கள் பெற்றுக்கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அல்லது பயன்படுத்திக் கொள்ளும் அளவு மிகவும் கணிசமானதாகவே உள்ளன. இந் நிலையங்களிலிருந்து மலையக மாணவர்கள், இளைஞர்கள் முழுமையான பயனை பெற்றுக் கொள்வதற்கு தடையாக இருக்கும் காரணிகளை ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்கு மலையகத்திலுள்ள அரசியல் தலைவர்களின் உதவியை நாடலாம். இவ்வாறான ஓர் ஆய்வை மேற்கொள்வதற்கு ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தொழில் அதிபர்கள் போன்றோரின் உதவிகளை நாடலாம்.

மேலும் இன்றைய மலையக சமுதாயம் கல்வியில் அபிவிருத்தியடையவும், அதனைப் பற்றி சிந்தித்து செயல்படவும் பாடசாலை ஆசிரியர்களையும், அதிபர்களையும் நாடி அவர்களின் உதவியை பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு பல்வேறுபட்ட கோணங்களிலிருந்து மலையகத்தை அவதானிக்கும் பொறுப்பை கல்வி அதிகாரிகளுக்கு வழங்கி, அன்றாடம் மலையகம் சிறுகச் சிறுக சகல துறைகளிலும் வளர்ச்சி பெற எவ்வாறான செயற்றிட்டங்களை மேற்கொள்ளலாமென ஆராய்ந்து, அவற்றை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் உலக நாடுகளிலிருந்து நிதியுதவியைப் பெற்று நிறைவேற்றலாம்.

மேற்கூறப்பட்ட சகல விடயங்களை மலையகத்தின் எப்பகுதியிலாவது அமுல்படுத்துமுன் பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமானதாகும். ஏனெனில் பெற்றோர்களின் செயற்பாட்டாலும் உணர்வாலுமேதான் மலையகம் மலர்ச்சி பெறப் போகின்றது.

ஆதலால் மலையகம் சகல துறைகளிலும் வளர்ச்சிபெற கல்வியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இதற்கு சகல கல்விமான்களின் ஆர்வமும் ஒருங்கிணைய வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*



# ARUJUNA Jewellers



NO. 40B, MAIN STREET, HATTON.
TEL: 051-2222353, 2224495
E-Mail: jeyat@sltnet.lk
Web: http://www.arjuna.angelcities.com

BRANCHES:

ARUNA JEWELLERY - CITY PLAZA
PRINCE JEWELLERY - MAIN ST. HATTON




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments from:*

# L N K

# FITTING CENTER

## CERAMIC & HARDWARE

Dealers in : Sanitary wares, General Hardware.
Bathroom Accessories, Wall Tiles, Floor Tiles, PVC Pipe
Hot Water Pipe & Plumbing Fittings Etc.



NO. 17, COLOMBO STREET,
KANDY.
TEL: 074-474662

---

*With Best Compliments from:*

දේශීය විදේශීය
පාවහන්, සපත්තු, බාටා, රන්පා,
කුඩ වර්ග හා
පාසල් ළමන්ගේ බෑග්, සපත්තු
සියලු වර්ගයන් ඇතුළු එකම වහලක්
යටතේ ලබා ගැනීමට එකම ස්ථානයක්

# MUBARAK SHOE PALACE




NO. 30, NUWARA ELIYA ROAD,
WELIMADA.
Tel: 072-3334480





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Compliments from:*




# ROYAL FITTINGS

*Dealers of all kinds of Stainless Steel Fittings*

No. 343A, Mawilmada Junction,
Katugastota Road,
Kandy.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

A.C.Shabdeen
PROPRIETOR

# A.C.S.
## HARDWARE & ELECTRICALS



**General Hareware Merchant**
**& Electricals Goods**

**No. 38, Mossan Terrace,**
**Matale.**
**Tel: 30961, 077-830247**

*With Best Compliments from:*


Dealers in fancy goods, Gift Item,
Plastic ware, Enamelware, Aluminium ware,
Electical Goods, foot ware, Wristwatches,
Baby Items, Toys, Cosmetics, All Type of PVC Pipes
& Fittings, Steel Furnitures, Sheel Gas.



# IRFAAN STORES
## GROCERIES & HARDWARE

Doragamuwa Road,
Udatalawinna,
Medige.
Tel: 081-2498016

*With Best Compliments from:*



Specialist in Wedding Sarees
& Shalwar

# New Ranjana

**No. 629, Negombo Road,**
**Mabola,**
**Wattala.**
**Mobitel: 077-3266336**
(Oppersite the Damro Show Room)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்ப வகுப்புக்களில் மொழிக் கற்பித்தலிலுள்ள இடர்பாடுகளும், அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும்.



எம்.ஏ.எம். முபாரக்
(விடுகை வருடம்)

ஐந்து வருடங்கள் தாயின் அன்பான அரவணைப்பில் சுகம் கண்ட குழந்தைகள் அதன் அடுத்த கட்டமாகப் பல புது அனுபவங்களையும், புது உறவுகளையும் சந்தித்த நிலையில் ஆரம்ப வகுப்புகளுக்குள் இணைகின்றது. அக்குழந்தைகள் தாயிடம் பெற்ற அன்பையும் அரவணைப்பையும் இங்கும் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் இவர்கள் பல்வேறுபட்ட மனவுணர்வுகளுடனும், பல்வேறுபட்ட உளத் தேவையுடையவர்களாகவும் இவ்வகுப்புகளில் இணைகின்றனர். இந்நிலையில் ஆரம்ப வகுப்புக்களில் இம்மாணவர்களைப் பொறுப்பேற்கும் ஆசிரியர்களின் பொறுப்புக்களும், கடமைகளும் விசாலமான நோக்கத்தினைக் கொண்டதாய் அமைய வேண்டியது அவசியமாகின்றது.

இதனடிப்படையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலான ஆசிரியர்களது பங்களிப்பை நோக்குவோமாயின் சிறந்த கல்விக்கான அடித்தளம் இங்கு இடப்படுவதை நாம் காணலாம். ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கல்வியை நாம் நோக்கும் போது அவர்கள் கற்றலுக்காகக் கற்பவர்களாக இருக்கின்றனர். இதனால் கல்வியின் ஆரம்ப அத்திவாரத்திற்கான அடிப்படைக் கருவியான மொழி தொடர்பான திறன்கள் இவர்களுக்குச் சிறப்பாக ஊட்டப்பட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் மொழியே கல்வியின் அடிப்படை மட்டுமன்றி சிறந்த கருத்து வெளிப்பாட்டுக் கருவி. தொடர்ந்து வரும் வகுப்புக்களில் மட்டுமன்றி கல்விப்பாதையின் சகல படிகளிலும் சகல பாடங்களையும் கற்பதற்குரிய காரணியாக மொழியே திகழ்கின்றது.

எனவே ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கத் தொடங்குமுன் தம் வகுப்பிலுள்ள மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிய வேண்டும். பின் அதற்கேற்ப அவர்களை அணுகி எல்லாப் பிள்ளை மீதும் கவனஞ் செலுத்துவதுடன் அவர்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்று மாணவர்களுக்குத் தம் மீதான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதன் பிறகு கற்றல் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்வது மிக இலகுவானதாக இருக்கும்.

கற்றல் செயற்பாடுகளைப் பொறுத்தமட்டில் மொழித் திறன்களை வளர்ப்பதில் ஆசிரியரது விசேட கவனஞ் செல்ல வேண்டியது அவசியமானதாகும். ஆரம்ப வகுப்புக்களில் மொழி கற்பிக்கும் போது கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் நான்கு அடிப்படைத் திறன்களும் வளர்க்கப்படுவதில் ஆசிரியர் கட்டாயம் கவனஞ் செலுத்த வேண்டும். இவற்றுள் கேட்டல், பேச்சு ஆகிய இரு திறன்களையும் வீட்டுச் சூழலில் ஓரளவு பெற்ற நிலையிலேயே பாடசாலைக்கு வருகின்றனர். வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களிலும் ஓரளவான பரிச்சியம் ஒரு சில மாணவர்களிடம் காணப்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பெரும்பாலான மாணவர்களிடம் இத்திறன்கள் காணப்படுவதில்லை. ஒரு சில மாணவர்களால் எழுதுகோலையேனும் பிடிக்கத் தெரியாத நிலை காணப்படும். வேறு சிலர் எழுத்துக்களை உச்சரிக்கச் சிரமப்படுவர். இன்னும் சிலர் ஒரு சில எழுத்துக்களை எழுதுவதிலும், உச்சரிப்பதிலும் சிரமப்படுவர். இவ்வாறு மொழித் திறன்கள் தொடர்பான பல்வேறு பிரச்சினை உள்ள மாணவர்களையே ஆரம்ப ஆசிரியர்கள் சந்திக்க நேரிடுகின்றது. இச் சந்தர்ப்பங்களில் ஆசிரியர் மாணவர்களைப் பொறுமையுடன் அணுகி, மாணவர்களின் குறைபாடுகளை இனங்கண்டு அதற்கேற்ற முறையான பரிகாரங்களையும் முன்பயிற்சிகளையும் வழங்க வேண்டியது அவசியமாகும். இக்குறைபாடுகள் ஆரம்ப வகுப்புக்களிலேயே தீர்க்கப்படாவிட்டால் குறிப்பிட்ட மாணவர்களின் தொடர்ச்சியான கற்றல் செயற்பாடுகளில் பாரிய பின்னடைவை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதை ஆரம்ப ஆசிரியர்கள் மனங்கொள்ள வேண்டும்.

கேட்டல் சம்பந்தமான மொழித்திறன் செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளும் போது எதிர்நோக்க கூடிய முக்கிய பிரச்சினை பெரும்பாலான மாணவர்களின் அவதானக் குறைபாடு ஆகும். இக்குறைபாட்டுக்கு மாணவனின் உடல், உள நிலை, குடும்பப் பின்னனி, வீட்டுச் சூழல் போன்ற பல காரணிகள் தாக்கம் செலுத்தலாம். அதனால் குறிப்பிட்ட மாணவனைக் கடிந்து தண்டிப்பதை ஆசிரியர் முற்றாகத் தவிர்த்துப் பொறுமையுடன் மாணவரை அணுகி குறைபாட்டுக்கான காரணியை இனங்காண வேண்டும்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் மாணவர்களின் அவதானமின்மைக்கு ஆசிரியர்களின் குறைபாடுகளும் காரணியாகின்றன என்பதும் தற்போது இனங்காணப்பட்டுள்ளது. அல்லது இடைஞ்சலான வகுப்பறைச் சூழலாகவும் இருக்கலாம். இவற்றுள் எது மாணவரில் தாக்கஞ் செலுத்துகிறது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ற பரிகார முறையை ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்வது அவசியம். பொதுவாக மாணவர்களின் முழு அவதானத்தையும் தன் பக்கம் ஈர்க்கும் வகையில் செயற்பாடுகளில் சுவையையும் மாணவர் பங்குபற்றலையும் கூட்டினால் நல்ல விளைவை எதிர்ப்பார்க்கலாம்.

பேச்சுத் திறன் தொடர்பான செயற்பாடுகளிலும் பல்வேறு பிரச்சினைகளை ஆரம்ப ஆசிரியர் எதிர்நோக்குவதைக் காணலாம். ஆரம்பத்தில் வெட்கம், பயம், தாழ்வுணர்ச்சி, ஆசிரியரது கண்டிப்பு போன்ற இன்னோரன்ன காரணிகளால் மாணவர் பேசவதில் தயக்கம் காட்டலாம். எனவே ஆசிரியர் இந்நிலைமைகளை இனங்கண்டு வகுப்பறையில் மகிழ்ச்சியானதும், சுதந்திரமானதுமான சூழலை ஏற்படுத்தி மாணவர் சுயமாகவே பேச்சுத்திறன் செயற்பாடுகளில் ஈடுபட வழி செய்ய வேண்டும். ஒரு சில மாணவர்களிடம் கொச்சை மொழியில் பேசுதல், பேச்சுத் தெளிவின்மை, தெளிவான உச்சரிப்பின்மை போன்ற குறைபாடுகள் காணப்படலாம்.

